ஜூன் 2008

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/102/News/2008

# சோதிடகேசரி

மாத இதழ்

மலர்: 1 இதழ்: 3

விலை ரூபா: 50/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MANCHESTER WORLD CLASS CONSULTANCY

HELPLINE: 011 576 576 3 / 011 5 74 84 74



அவுஸ்ரலியா சிங்கப்பூர்
இங்கிலாந்து
சைப்பிரஸ் மலேசியா

UK (England) | Canada | CYPRUS (Europe) | Singapore
USA | AUSTRALIA | France | MALAYSIA

## வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்பு!

(மிகச்சிறந்த பகுதிநேர வேலை வாய்ப்புகளுடன்)

**FREE!** Consultation with our Successful, Highly Skilled and Experienced Immigration Consultants & Solicitors in the UK

இதோ! இன்றே விரையுங்கள், மட்டுப்படுத்தப்பட அரிய வாய்ப்புக்காக!

**FREE RECRUITMENT TO EUROPE & SPOT OFFER**

DURING HOLIDAYS VISIT : GERMANY, FRANCE. ITALY, GREECE, SPAIN, POLAND
(EDUCATION TRANSFER TO UK, USA, CANADA, AUSTRALIA)

**SPECIAL OFFER!**

**100%**

**CYPRUS (Europe) STUDY & WORK**

VISA GUARANTEE & PART TIME JOBS
NO NEED SPONSOR (BANK BALANCE) /NO NEED IELTS/TOEFL

TAYLOR'S UNIVERSITY COLLEGE

**MALAYSIA STUDY & WORK**

**SPOT ADMISSION OFFER!**

FROM 22 - 29 JUNE 2008 (9.00AM - 5.00PM)

COURSE FEE 30% OFFER for JULY 2008 INTAKE

## A GREAT OPPORTUNITY

**Fly UK with the cost of Rs.300,000/=**

NO NEED SPONSOR - NO NEED IELTS / TOEFL (Except UK)




நிராகரிக்கப்பட்டுள்ள உங்களது விசாவை,
எம்மால் காலதாமதமின்றி பெற்றுத்தர உத்தரவாதம்!

**VISA**

Is your **VISA** for any categories (Students, Visit, Business and Settlement) **REFUSED / REJECTED** for any reasons...!

We assure your departure by our **IMMIGRATION CONSULTANT** by way of **APPEAL TO THE TRIBUNALS, UK / REAPPLY.!**

**MR. AHAMED M. HUSSAIN LL.M (Wales) UK**
International Trade Law / Specialised in Immigration and Emigration Law (EU Countries), Attorney - at - Law & Commissioner for Oaths
**Chief Executive Consultant & Legal Affairs**

Manchester World Class Consultancy
Trust • Perfect • Excellence

**FOR MORE DETAILS;**

CUSTOMER SERVICE HELP:
RAHUL: +94 77 323 6447, MEERA:+94 77 396 2544

111, Kirullapone Avenue, Kirullapone, Colombo 5.
Tel: 011 576 576 3 (hotline), 011 576 929 1 Fax: 011 251 501 0
Email: info@manchesterlk.com Website: www.manchesterlk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேட்பதெல்லாம் தரும் காமதேனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Publisher : **Express Newspapers (Ceylon) Limited**
185, Grandpass Road, Colombo - 14.
Tel: +94-115-322700 (30 Lines)
Fax: +94-112-439987
website: www.virakesari.lk

Content Providers : **Inter Focus Service (P) Ltd., India**

Editor : K. Chandramohan

Sub-editor: C. Murugesh

Feature Writer : S. Saravanan

Designing & Layout : J.B. Ramkumar & Team

Astrologers panel : Gayathiri Balasubramanian
S. Krishnan (Kannan Potti)
J.N.S. Selvam
Yogi Sri Ramanandha Guru
S. Chandru

Advertising :

Srilanka : Business Development Manager,
Express Newspapers (Ceylon) Limited,
No. 185, Grandpass Road,
Colombo - 14.
Tel: +94-11-2439985, 2323841
Cell: 777-381802
email: kesari24@virakesari.lk

India : Marketing Manager,
163, Ramasamy Street, III Floor,
Gopalapuram, Chennai - 86.
Tel: +91-44-28111420
Fax: +91-44-28111421
Cell: 94444 50037 (Chennai)
Cell: 94447 86116 (Madurai)
email: jothidakesari@gmail.com

Circulation & Subscription : Circulation Manager,
Express Newspapers (Ceylon) Limited,
No. 185, Grandpass Road,
Colombo - 14. Tel: +94-11-4614371

Copy right reserved in Srilanka : ENCL, Colombo

# சோதிடகேசரி
# SOTHIDA KESARI

*Astrological Magazine - Tamil*

மலர்: 1 இதழ்: 3

## சோதிடர் தலையங்கம்

மனித மனம் எப்போதும் தேவைகளுக்காகவே போராடிக் கொண்டிருக்கிறது. பணம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு அலைகிறது. "பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை - அருள் இல்லார்க்கு எவ்வுலகமுமில்லை." மனித சமுதாயம் முதல் பாதியை மட்டும் கெட்டியாக பிடித்துக் கொண்டு உழல்கிறது. பணம் சேர்ந்தாலும் மனம் நிறைவடைவதில்லை.

அருள் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை பிரச்சினைகள் என்று வருகையில் மனம் கலங்கி விடுகிறது. ஆனால் மனித குலம் உய்ய வேண்டும், சிறப்பாக இருந்திட வேண்டும், என்பதனையே குறிக்கோளாகக் கொண்டு சித்தர்கள் சேவையாற்றி வந்தார்கள். அதன் விளைவாகவே மனித குலத்திற்கும், சோதிட உலகத்திற்கும் பல அரிய நூல்கள் கிடைத்தன. அவர்கள் காட்டும் வழி கலங்கரை விளக்காக ஒளி வீசி நிற்கிறது.

பல தலைமுறைகளையும் கடந்து பயணம் செய்து வந்தாலும், அவை இன்றும் புதிய செய்திகளைச் சொல்லி வருகின்றன. பலருக்கு நல்வழிகாட்டி வருகின்றன. சித்தர்களைப் பற்றிய செய்திகளையும் இந்த மாத மலர் வாசகர்களுக்குத் தருகிறது. மேலும் பல செய்திகள் வாசகர்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன.

கிரகங்களின் சஞ்சாரத்தைத் தரும் பஞ்சாங்கம் இந்த இதழில், சில மாற்றங்களுடன் மலர்கிறது. நாம் செய்யும் வினைகளுக்கேற்பவே நாம் பலன்களை அடைகிறோம். நல்ல எண்ணங்கள் நல்ல பலனைத் தரும். நல்ல எண்ணங்களே அனைவர் மனதிலும் நிறைந்திருக்க நவக்கிரகங்கள் அனைவருக்கும் அருள் புரியட்டும்.

**சோதிடர் திருமதி காயத்ரி பாலசுப்ரமணியன்**



| | | | |
|---|---|---|---|
| | | புதன் | சூரி சுக் |
| | 05 – புத வக்ர நிவ. 07 – சிம்–அங் 22 – மிதுன. சுக் 23 – கடக. சுக் | | கேது செவ் |
| ராகு | | | சனி |
| குரு (வ) | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பகுதி...

வீரகேசரி வாசகர்களின் தொடர்ந்த நல்லாதரவோடு, சோதிடகேசரியின் மூன்றாவது இதழ் மலர்கிறது. முன்னிரண்டு இதழ்களுக்கும் கிடைத்த வெற்றியினால் நாங்கள் பெருமை கொள்கிறோம். அதே வேளை எங்களது பணியினை மென்மேலும் ஆர்வத்துடனும், அதிக அக்கறையுடனும் செய்து வர கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்ற இதழ் குருபகவான் சிறப்பிதழாக வந்து வரவேற்புப் பெற்றதைத் தொடர்ந்து, இந்த இதழ் சூரிய பகவான் சிறப்பிதழாக விரிகிறது. சூரியனார் கோவில் வரலாறு, சூரியன் பற்றிய சோதிடப் பார்வை, மேலும் விஞ்ஞானத் தகவல்கள் ஆகிய வற்றைத் தொகுத்து வழங்கியுள்ளோம். தென் தமிழகத்தில் கும்பகோணம் நகருக்கு அருகிலுள்ள, சூரிய பகவான் கோவிலில், சோதிட கேசரி வாசகர்களின் நலனுக்காக, சிறப்பு வழிபாடும் செய்யப் பட்டது. வாசகர்கள் ஆர்வத்தைத் தூண்டிவிட, வழக்கம் போல சீன சோதிடக் கட்டுரையில், இந்த எலி ஆண்டு பலன்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

நாடி சோதிடம் குறித்து விரிவான விவாதம் செய்யப்பட்டுள்ளது. வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய தகவல்களையும் கொடுத்துள்ளோம்.

முந்தைய இதழ்களில் இடம் பெறாத புதிய பகுதியாக எண் கணிதம் குறித்த தகவல்கள், கட்டுரைகள் இந்த இதழ் முதல் வெளி வரத் தொடங்கியுள்ளன. இது குறித்து வாசகர்கள் ஏதேனும் விளக்கம் கேட்க விரும்பினால், பதில் அளிக்க நமது சோதிடர் குழுவினர் தயாராக உள்ளனர்.

சோதிடமும் ஆன்மீகமும் உடன் இணைந்து செல்பவை. ஆகவே, சோதிட கேசரி வாசகர்கள் விரும்பிப் படிக்கும் ஆன்மீகக் கேள்வி பதில் பகுதி விரிவாக வழங்கப்பட்டுள்ளது.

ஆன்மீகப் பேரொளிகளும், வற்றாத அறிவுக் களஞ்சியங்களுமான சித்தர் பெருமக்கள் பற்றித் தொடர்ந்து தகவல்களை அளித்து வருகிறோம். தமிழனின் தனிப் பெருமையும், சிறப்பு அடையாளமுமான சித்தர்கள் குறித்து இன்னமும் புதிய தகவல்கள் எளிய முறையிலே தரவிருக்கிறோம்.

வரவிருக்கும் நான்காம் இதழ் மங்கல நாயகி மகாலட்சுமி சிறப்பிதழாய் மலரவிருக்கிறது. நாடி சோதிடத்தின் புதிய பரிமாணங்கள் வரவிருக்கின்றன. ராசிக் கற்கள் பற்றி சுவையான தகவல்களையும் வரும் இதழ் தாங்கி வரும். தொடர்ந்து வாசித்து வாருங்கள்.

வாசகர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள ஆவலாயிருக்கிறேன்.

அன்புடன்,

**சந்திரமோகன்,**
(பொறுப்பாசிரியர், சோதிட கேசரி)
jothidakesari@gmail.com




சூரியனார் கோவில் 10

8 பஞ்சாங்கம்

சுவாமி கமலாத்மானந்தர் கேள்வி-பதில் 52

20 கடனைக் களைந்த கண்ணன்

நாடி சோதிடம் 26

42 எண்களால் ஏற்றம் பெறலாம்

சீன சோதிடம் – 2008ம் ஆண்டு பலன் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் விடும் சூரியன்



உலகம் உங்களைக் காண வேண்டுமா? நீங்கள் தினமும் சூரியனைக் காணுங்கள்! வணங்குங்கள். சூரியன் பிரகாசிப்பது போல், நீங்களும் வாழ்நாள் முழுவதும் பிரகாசமாய் வாழலாம். ஆன்மாவைப் பிரதிபலிப்பவன் சூரியன். ஒருவருக்கு ஆத்ம பலம் அமைய வேண்டுமானால், சூரிய பலம் ஜாதகத்தில் அமைய வேண்டும்.

### சூரியன் யார்?

கச்யப முனிவரின் புத்திரன், சிவபெருமானின் வலது கண் என்றாலும், பிரம்மன், விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளின் பிரதிநிதியாகவும், கண்ணாரக் காணக்கூடிய ஏக மூர்த்தியாகவும் விளங்குபவன் சூரியன். மிகவும் பிரகாசம் உடையவன், இருட்டின் பகைவன், ஷத்திரிய இனத்தைச் சேர்ந்தவன், எல்லா பாவங்களையும் அழிப்பவன்.



அக்கினியை அதிதேவதையாகக் கொண்டவன். யட்சப் பிரச்சனத்தில் ஒருவனாக எப்போதும் சஞ்சரிப்பவன் என்றும், சத்தியம் என்னும் பரமாத்ம ரூபத்தில், கதிரவன் நிலை பெறுவான் என்று குறிப்பிடப்படுகிறது. ஒற்றைச் சக்கரம் கொண்ட தேரில் வேதத்தின் ஏழு சந்தங் களை ஒரு குதிரையாகக் கொண்டு பூட்டிப் பவனி வருகிறான் இந்த பகலவன், சாம, தான, பேத, தண்ட, உபாயங்களில் தண்ட உபாயம் சூரியனைச் சார்ந்தது.

### வேதங்களில் சூரியன்:

ஆதிசங்கரர் வழிபாட்டு முறையில் சைவம், வைணவம், காணபத்யம், குமாரம், சாக்தம், சௌரம் என்ற முறையில் ஆறு உட்பிரிவுகளாக பிரித்தார். அதில் ஒன்று சூரிய வழிபாடு. தலைமை ஸ்தானத்தில் சூரியனை வைத்து கணிக்கப்படுகின்ற கணித முறைக்குச் சூரிய சித்தாந்தம் என்று பெயர். சௌரமானம் என்பது இவ்வகை கணித அடிப்படையைக் கொண்டது.

வேதத்தில் சூரிய மந்திரங்கள் சிறப்பாக இருக்கின்றன. நீ மகான், வெற்றி உடையவன் என்கிறது யஜுர் வேதம். எங்களை தீவினைகளிலிருந்து மீட்பாயாக! என்று வேண்டுகோள் விடுக்கிறது சாம வேதம். சூரியன் உதய காலத்தில் ருக் வேத ஸ்வரூபியாகவும், நடுவேளையில் யஜுர் வேத ஸ்வரூபியாகவும், அஸ்தமன வேளையில் சாமபேத ஸ்வரூபியாகவும் விளங்குகிறார்.

சூரியன் ஆதார காலம், விஸர்ப்பகாலம் என இரு காலமாக பிரித்து இயங்குகின்றான். ஆதார காலத்தில் நீர் நிலைகளில் இருந்து, ஆவி வடிவில் நீரை எடுத்து சுத்திகரிக்கின்றான். விஸர்ப்ப காலத்தில் மழையாக நன்னீர் தடாகம், கடல், சாக்கடை, எல்லாவற்றிலும் சுத்திகரிக்கப்பட்ட நீரெனப்பாராது பொழிகின்றான். சூரியனுக்கு ஆயிரம் கதிர்கள், 400 கதிர்கள் மழை பொழியவும், 300 கதிர்கள் மழை வளம் உண்டாக்கவும், 300 கதிர்கள் பனி பெய்யவும் உதவுகின்றன.

### ஜாதகத்தில் சூரியன்:

பூமியில் இருந்து சுமார் 9 கோடி மைல் தூரம் உள்ள சூரியன் பொதுவாக ஒரு நாளில் பகலுக்கு ஆறு லக்னங்களும், இரவு ஆறு லக்னங்களும், காலையில் எந்த லக்னத்தில் சூரியன் உதயமாகிறதோ, அதற்கு சரியாக ஏழாவது லக்னத்தில் மாலையில் சூரியன் அஸ்தமனமாகும்.

ஜனன லக்னம் என்பது ஜாதகத்தில் முக்கியமான முதல் பாவம் அல்லவா? இந்த பாவத்திற்குரிய காரகன் சூரியன். ஜாதகத்தில் பித்ரு (தந்தை) காரகன் ஆவார். ஒவ்வொரு ராசியிலும் ஒருமாத காலம் சஞ்சாரம் செய்கிறார். ஆண், பெண், அலி என்ற முப்பிரிவில் ஆண் கிரகம் ஆவான் ஆதித்தன். ஓர் ஆண் மகனது ஜாதகத்தில் சூரிய பலம் ஓங்கியிருந்தால்; ஆண்மை எனும் ஆற்றலில் அவன் சிறந்து விளங்கத் தடையிராது. ஒரு பெண் மணியின் ஜாதகத்தில் சூரிய பலம் சிறப்பாக இருந்தால் ஆக்ரஷசன சக்தி ஏற்படும். சிறந்த கற்புடையவளாகத் திகழ்வாள். பாவக் கிரகங்களில் ஒருவனாக இடம் பெற்றிருந்தாலும், இந்தச் சூரியனுக்கு உன்னதமான ஆற்றலும் பொறுப்பும் உண்டு என்பது நிச்சயம்.

சூரியன் ஆதிக்கம் நல்ல நிலையில் இருந்தால் தான், இராஜ சேவை, ஆட்சித்திறன், செல்வாக்கு, உடல் நலம், நல்ல புகழ், எதிலும் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு, தைரியம் கிடைக்கும், மேலும் சைவானுஷ்டானத்தில் வாழ்வது, தபசு செய்வது, சர்வ காலமும் சிவனை நினைத்து இருப்பது, காடு, மலை முதல் கிராமம் வரை சஞ்சாரம் செய்வது இவருடைய ஆதிக்கமே. உருவத்தில் பெரியதாக இருக்கும் யானையைக் காட்டிலும் இராஜகுணம் கொண்ட அடக்கி ஆளும், தன்னம்பிக்கையை கொண்ட சிம்மமே காட்டுக்குத் தலைவன். இராசியில் சிம்மத்துக்கு அதிபதி சூரியன். சிம்ம ராசி, சிம்ம லக்னத்தில் பிறந்தவர்கள்தான் நாட்டின் மிகப் பெரிய தலைமை பொறுப்புகளில் இருக்கின்றனர். மேலும், தாவரங்களிலும் இவருடைய ஆதிக்கம் அதிகம். ஒரு தாவரம் நன்றாக வளர அதிகமாக சூரிய ஒளி தேவைப்படுகிறது.

**சூரியன் சரியில்லாத ஜாதகங்கள்:**

சதாகாலமும் மருத்துவரிடம் போகும் அவல நிலை, தலை சம்பந்தப்பட்ட நோய்கள், குறிப்பாக ஒரு தலை நோய், சிரசுரோகம், சுரம், பித்த சம்பந்த பட்ட நோய்கள், எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள், அனைத்துக்கும் சூரியன் சரியில்லாததே காரணம். மேலும் தந்தையை பிரிந்து வாழ்வது, ஜாதகர் பிறந்தவுடன் தந்தை இறப்பதும், தந்தை பலம் இன்றி, அதாவது எந்த விதமான வருமானமும் இன்றி வாழ்வது போன்ற நிலைகள், மேலும் மனநிலை சரியில்லாத பெண்கள், வியாதி உள்ள பெண்கள், இந்த மாதிரியான பெண்களுடன் உறவு வைத்துக் கொள்பவன் இவை அனைத்துக்கும் சூரியன் சரியில்லாததே காரணம்.

**சூரியன் ஆற்றல் பெற:**

**சூரியனை தினமும் அதிகாலையில் நமஸ்காரம் செய்ய வேண்டும்.**

இதைச் செய்வதன் மூலம் சரீர பலமும், ஆன்மீக பலமும் அடைய முடியும் என்பது அனுபவம் கண்ட உண்மை. விஷ்ணுவை அலங்கார பிரியன் என்றும், சிவனை அபிஷேகப் பிரியன் என்றும், சூரியனை நமஸ்கார பிரியன் என்றும் வழங்குவர். சூரியன் திருநாமம் கூறிக் கொண்டு நதியில் நீராடுவது மகாஸ்நானம் எனப்படும். வேத மந்திரங்களில் தலை சிறந்த மந்திரம் காயத்ரி. காயத்ரிக்கு உரியவன் கதிரவன். வேத மந்திரங்களில் நான் காயத்திரியாக இருக்கிறேன் என்று, எல்லாம் வல்ல ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ளார்.

அப்படிப்பட்ட காயத்ரி மந்திரத்தை தினசரி ஜெபித்து வந்தால் சூரியன் அருள் பெறலாம். அகஸ்திய மஹரிஷி உபதேசித்த ''ஆதித்ய ஹிருதய'' மந்திரத்தால் இராமன், இராவணனை வெல்லும் ஆற்றல் பெற்றான் என்பது இராமாயணத்தின் கூற்று, அப்படிப்பட்ட ஆதித்தயன ஹிருதயம் படிப்பதால் சத்துரு உபாதை நீங்கும், மனவலிமையும் கூடும், நினைத்த காரியத்தில் வெற்றி ஏற்படும்.

சூரிய பகவானுக்கு ஞாயிறு அன்று



அபிஷேகம் செய்வது சிறப்பு. சிவப்பு ஆடைகள் அலங்கரித்து சூரிய மந்திரங்களால் வெள்ளெருக்கு சமித்தால் ஹோமம் செய்து, கோதுமை, சர்க்கரை, பொங்கல் செய்து வழிபட வேண்டும். சூரியன் அஸ்தமனமான நேரம், கிரகம் பிடித்த நேரம் பார்க்கக் கூடாது.

பொதுவாக பூஜைகளை பகலில் தான் செய்ய வேண்டும். சூரியன் மறைந்த பிறகு செய்யக் கூடாது. இதற்கு விதிவிலக்காக சிவராத்திரி, நவராத்திரி காலங்களில் இரவில் பூஜை செய்யலாம். சூரியன் திருவான்மியூர் திருத் தலத்தில் மருந்தீசப் பெருமானை அர்த்த சாமத்தில் வழிப்பட்டதாக வரலாறு. எனவே திருவிழாவில் கொடியேற்றம் அர்த்த சாமத்தில் தான் நடை பெறுகிறது. சூரியன் ஆதிக்கம் பெற கருங்காலி மரம் வைப்பதும், தேயு கிரகத்தை வழிபடுவதும், சிவனை சந்தனத்தால் அபிஷேகம் செய்வதும், தாமரைப் பூக்கொண்டு அர்ச்சிப்பதும், மாணிக்கம் ரத்தினம், தாமிரம், செம்பு போன்ற உலோகங்கள் அணிவதாலும், இளஞ்சிவப்பு ஆடைகள் அணிவதாலும் சூரியன் ஆற்றல் பெறலாம். காய்கறி வகைகளில் புடலங்காய், வெள்ளைப் பூசணிக்காய், கொய்யாக்காய் உணவாக சேர்க்கலாம். சூரியன் ஆதிக்கம் பெற்றவர்கள் வாஸ்து சாஸ்திர முறைப்படி கிழக்கு பகுதிகள், விவசாயம் செய்யும் கிராமங்களில் வசிக்கலாம்.

சூரியனுக்கு ''லோக கர்த்தா'' என்று ஒரு பெயர் உண்டு. சூரியன் உதிப்பதால் உலகம் இயங்குவதாக இதற்கு காரணப் பெயர். நவக்கிரக கீர்த்தனங்களை இயற்றிய தீஷிதர் ''சூரிய மூர்த்தே நமோஸ்தே'' என்று தொடங்கிப் பாடுகிறார். சூரியனை கிரகங்களில் சிறந்தவன் என்றும் சுய ஒளி படைத்தோன் என்றும் போற்றுகிறார். 'ஞாயிறு போற்றுதும்' என்று நாவார முழக்கி, அந்தச் சுடர்க் கடவுளின் அருளை வேண்டி பிரார்த்தனை செய்வோம். சூரியன் அருள் பெற்று சக்தியாகவும், சந்தோஷமாகவும் வாழ்வோம். வாழ்க வளமுடன்!

**S. சந்துரு,** B.Com., D.YHE.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதாரி வருடம் ஆனி மாதம் கலியுகாதி 5019 - ஆங் 2008

இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது

| | ஆங்கில | தமிழ் | வாரம் | நேத் | ஜீவன் | சீரா திதி | அமி யோ | யோ கினி | வார சூலை | மிதுன இருப்பு நாழி | மிதுன இருப்பு வி | யோகம் பெயர் | யோகம் மணி | யோகம் நிமி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் | 15 | 1 | ஞாயி | 2 | 1 | சூன் | சி-ம | வட | மே | 5 | 27 | சிவ | 18 | 18 |
| | 16 | 2 | திங் | 2 | 1 | சூன் | ம-சி | தெகி | கிழ | 5 | 16 | சித் | 19 | 15 |
| | | 3 | செவ் | 2 | 1 | பௌ | சி-ம | தெமே | வட | 5 | 06 | சாத் | 20 | 11 |
| | 18 | 4 | புத | 2 | 1 | பிர | சி-ம | தெ | வட | 4 | 55 | சுப | 21 | 04 |
| | 19 | 5 | வியா | 2 | 1 | துவி | சி | மே | தெ | 4 | 45 | சுப | 21 | 50 |
| | 20 | 6 | வெள் | 2 | 1 | திரி | பி-சி | வமே | மே | 4 | 34 | பிராம் | 22 | 26 |
| | 21 | 7 | சனி | 2 | 1 | சது | சி | வகி | கிழ | 4 | 24 | ஐந் | 22 | 48 |
| | 22 | 8 | ஞாயி | 2 | 1 | பஞ் | அ-ம | ஆகா | மே | 4 | 13 | வை | 22 | 52 |
| | 23 | 9 | திங் | 2 | 1 | சஷ் | சி | பூமி | கிழ | 4 | 03 | விஷ் | 22 | 35 |
| | 24 | 10 | செவ் | 2 | 0 | சப் | ம | பூமி | வட | 3 | 52 | ப்ரீ | 21 | 53 |
| | 25 | 11 | புத | 2 | 1/2 | அஷ் | அ-சி | கிழ | வட | 3 | 42 | ஆயு | 20 | 41 |
| | 26 | 12 | வியா | 1 | 1/2 | நவ | சி | வட | தெ | 3 | 31 | சௌ | 18 | 58 |
| | 27 | 13 | வெள் | 1 | 1/2 | தச | சி | தெமே | மே | 3 | 20 | சோ | 16 | 43 |
| | 28 | 14 | சனி | 1 | 1/2 | ஏகா | சி | தெ | கிழ | 3 | 10 | அதி | 13 | 56 |
| | 29 | 15 | ஞாயி | 1 | 1/2 | துவா | பி-சி | மே | மே | 2 | 59 | சுக | 10 | 42 |
| | 30 | 16 | திங் | 0 | 1/2 | திர | ம-சி | வமே | கிழ | 2 | 49 | திரு | 07 | 05 |
| | | | | | | | | | | | | சூல | 27 | 12 |
| ஜூலை | 01 | 17 | செவ் | 0 | 1/2 | சசி | அ-சி | வகி | வட | 2 | 38 | கண் | 23 | 10 |
| | 02 | 18 | புத | 0 | 0 | அமா | சி | ஆகா | வட | 2 | 28 | விரு | 19 | 07 |
| | 03 | 19 | வியா | 0 | 0 | பிர | ம-சி | பூமி | தெ | 2 | 17 | துரு | 15 | 12 |
| | 04 | 20 | வெள் | 0 | 0 | துவி | சி-ம | வட | மே | 2 | 07 | வியா | 11 | 33 |
| | 05 | 21 | சனி | 0 | 0 | திரி | சி-ம | தெகி | கிழ | 1 | 56 | ஹர் | 08 | 18 |
| | | | | | | | | | | | | வஜ் | 29 | 32 |
| | 06 | 22 | ஞாயி | 0 | 1/2 | சது | சி-ம | தெமே | மே | 1 | 45 | சித்தி | 27 | 22 |
| | 07 | 23 | திங் | 1 | 1/2 | பஞ் | சி | தெ | கிழ | 1 | 35 | விய | 25 | 48 |
| | 08 | 24 | செவ் | 1 | 1/2 | சஷ் | அ | மே | வட | 1 | 24 | வரீ | 24 | 52 |
| | 09 | 25 | புத | 1 | 1/2 | சப் | அ-ம | வமே | வட | 1 | 14 | பரீ | 24 | 31 |
| | 10 | 26 | வியா | 1 | 1/2 | அஷ் | சி | வகி | தெ | 1 | 03 | சிவ | 24 | 40 |
| | 11 | 27 | வெள் | 1 | 1/2 | நவ | சி | ஆகா | மே | 0 | 53 | சித் | 25 | 14 |
| | 12 | 28 | சனி | 2 | 1/2 | தச | சி | பூமி | கிழ | 0 | 42 | சாத் | 26 | 02 |
| | 13 | 29 | ஞாயி | 2 | 0 | ஏகா | ம | கிழ | மே | 0 | 32 | சுப | 26 | 59 |
| | 14 | 30 | திங் | 2 | 1 | துவா | சி | வட | கிழ | 0 | 21 | சுப் | 27 | 56 |
| | 15 | 31 | செவ் | 2 | 1 | திர | ம-அ | வட | வட | 0 | 11 | பிராம் | 28 | 47 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதாரி வருடம் ஆனி மாதம் கலியுகாதி 5019 - ஆங் 2008

| மாதம் | ஆங்கில | தமிழ் | பெயர் | திதி மணி | நிமி | பெயர் | நட் மணி | நிமிடம் | பெயர் | கரணம் மணி | நிமி | விரதாதி விசேஷம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் | 15 | 1 | துவா | 15 | 58 | ஸ்வா | 06 | 28 | கௌலவ | 29 | 10 | கரிநாள், ஷடசீதி, ஸமார்க்கம் |
| | 16 | 2 | திர | 18 | 21 | விசா | 09 | 24 | தைது | 18 | 22 | பிரதோஷம் |
| | 17 | 3 | சதி | 20 | 44 | அனு | 12 | 21 | கரசை | 07 | 33 | சமநோக்கு நாள் |
| | 18 | 4 | பௌ | 23 | 02 | கேட் | 15 | 15 | பவ | 09 | 54 | வடசாவித்ரி விரதம் |
| | 19 | 5 | பிர | 25 | 09 | மூலம் | 18 | 02 | பாலவ | 12 | 07 | இஷ்டி,ஜேஷ்ட, பகுளம் |
| | 20 | 6 | துவி | 27 | 03 | பூரா | 20 | 35 | தைத | 14 | 08 | கரிநாள் |
| | 21 | 7 | திரி | 28 | 38 | உத்ரா | 22 | 53 | வணிஜ | 15 | 53 | மேல்நோக்கு நாள் |
| | 22 | 8 | சது | 29 | 49 | திருவோ | 24 | 48 | பவ | 17 | 17 | சங். ஹர. சதுர்த்தி, சர்வ முகூர்த்தம் |
| | 23 | 9 | பஞ் | முழுநாள் | | அவி | 26 | 16 | கௌலவ | 18 | 15 | சர்வ முகூர்த்தம் |
| | 24 | 10 | பஞ் | 06 | 32 | சத | 27 | 12 | கரசை | 18 | 41 | தேதிமழை |
| | 25 | 11 | சஷ் | 06 | 40 | பூட் | 27 | 30 | பவ | 18 | 30 | கீழ்நோக்கு நாள் |
| | 26 | 12 | சப்<br>அஷ் | 06<br>29 | 10<br>01 | உத்தி | 27 | 10 | பாலவ | 17 | 41 | திரிலோசன பூஜா |
| | 27 | 13 | நவ | 27 | 12 | ரேவதி | 26 | 10 | தைது | 16 | 11 | நவமி |
| | 28 | 14 | தச | 24 | 47 | அசு | 24 | 34 | வணிஜ | 14 | 01 | விதை விதைக்க |
| | 29 | 15 | ஏகா | 21 | 51 | பரணி | 22 | 27 | பவ | 11 | 23 | சர்வ ஏகாதசி |
| | 30 | 16 | துவா | 18 | 32 | கார்த்தி | 19 | 57 | கௌலவ | 08 | 15 | பிரதோஷம் கார்த்திகை விரதம் |
| | 01 | 17 | திர | 14 | 59 | ரோ | 17 | 13 | பவ | 25 | 11 | மாத சிவராத்திரி |
| | 02 | 18 | சதி | 11 | 21 | மிருக | 14 | 25 | சதுஷ் | 21 | 34 | சர்வ அமாவாசை |
| | 03 | 19 | அமா,<br>பிர | 07<br>28 | 49<br>32 | திருவா | 11 | 44 | நாகவ | 07 | 50 | இஷ்டி |
| ஜூலை | 04 | 20 | துவி | 25 | 41 | புனர் | 09 | 21 | பாலவ | 15 | 03 | சந்திர தர்சனம் சர்வ முகூர்த்தம் |
| | 05 | 21 | திரி | 23 | 23 | பூசம் | 07 | 26 | தைது | 12 | 27 | மேல்நோக்கு நாள் |
| | 06 | 22 | சது | 21 | 46 | ஆயி<br>மகம் | 06<br>29 | 06<br>29 | வணிஜ | 10 | 29 | மாத சதுர்த்தி |
| | 07 | 23 | பஞ் | 20 | 54 | பூரம் | 29 | 38 | பவ | 09 | 14 | ஸ்கந்த பஞ்சமி |
| | 08 | 24 | சஷ் | 20 | 49 | உத்ர | முழு நாள் | | கௌலவ | 08 | 47 | சஷ்டி விரதம் |
| | 09 | 25 | சப் | 21 | 30 | உத்ர | 06 | 33 | கரசை | 09 | 05 | விவாகம், சீமந்தம், ஆனித்திருமஞ்சனம் |
| | 10 | 26 | அஷ் | 22 | 50 | ஹஸ் | 08 | 10 | பவ | 10 | 06 | சமநோக்கு நாள் |
| | 11 | 27 | நவ | 24 | 42 | சித் | 10 | 20 | பாலவ | 11 | 43 | நவமி |
| | 12 | 28 | தச | 26 | 54 | ஸ்வா | 13 | 01 | தைது | 13 | 47 | சாக்ஷுஸமனு |
| | 13 | 29 | ஏகா | 29 | 17 | விசா | 15 | 54 | வணிஜ | 16 | 06 | திருதின ஸ்பிருக் |
| | 14 | 30 | துவா | முழு நாள் | | அனு | 18 | 52 | பவ | 18 | 29 | சர்வ சயன ஏகாதசி விவாகம், சீமந்தம் |
| | 15 | 31 | துவா | 07 | 39 | கேட் | 21 | 46 | கௌலவ | 20 | 48 | பிரதோஷம் சாதுர்மாஸ விரதாரம்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு சூரியனார் திருக்கோவில்



**ஓம் பூர்புவஸ்வ:**
**தத் ஸவிதுர்வரேண்யம்,**
**பர்கோ தேவஸ்ய தீமஹி:**
**தியோயோ ந: ப்ரசோதயாத்**

உலகிற்கு ஒளியையும், எங்களுக்கு ஞானத்தையும் வழங்குபவனே!

சூரிய பகவானே! உன்னை நாங்கள் வணங்குகிறோம் என்பது ஸ்ரீ காயத்ரி மந்திரத்தின் தமிழ் பெயர்ப்பு ''மந்திரங்களில் நான் காயத்ரி மந்திரமாக உள்ளேன்'' என்பது ஸ்ரீ கிருஷ்ணரின் வாக்கு. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சூரியன், நாம் வாழும் இவ்வுலகின் அனைத்து உயிர்களுக்கும், செயல்களுக்கும் ஆதாரமாக விளங்குவதை, நாம் அன்றாட வாழ்க்கையில் கண்டு கொண்டு இருக்கிறோம்.

மந்திரங்களின் ஆரம்பமே சூரிய வழிபாடு என்பது போல், மனிதன், மற்ற உயிர்கள் மற்றும் நாம் வாழும் நட்சத்திரக் குடும்பம் இவைகளின் மூல ஆதாரமே சூரியன் தான் என்றால் அது மிகையல்ல. சூரிய வழிபாடு என்பது 5,000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது. இந்தியா தொடங்கி எகிப்து, கிரேக்கம், சீனா, ஜப்பான், ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் சூரிய வழிபாடு இருந்ததற்கான ஆதாரங்கள் இன்றும் கிடைத்துக் கொண்டுதான் உள்ளன.

இவ்வளவு சிறப்புகள் கொண்ட சூரிய பகவானுக்கு, இந்தியாவில் சில இடங்களில் தான் கோயில்கள் அமைந்துள்ளன என்பது வியப்பான செய்திதான். சங்ககாலத்தில் பூம்புகாரில் இருந்த உச்சிக்கிழான் கோட்டம் என்ற சூரியன் கோவில் கடல் கோளால் அழிந்து விட்டது. இப்பொழுது சூரியனுக்கு இரண்டே இடங்களில் தான் கோயில்கள் உள்ளன. ஒரிஸ்ஸாவில் உள்ள 'கோனார்க்' என்ற இடத்திலும், தென்னிந்தியாவில் தஞ்சை, கும்பகோணம் அருகில் உள்ள சூரியனார் கோவில் அமைந்துள்ள கோவில்களே அவை.

**தலத்தின் இருப்பிடம்:**

இந்தத் தலம் தென்தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகே உள்ளது. கும்பகோணம், மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

**திருக்கோவில் அமைப்பு:**

ஊரின் மத்தியில், ஸ்ரீ சூரிய பகவானின் ஆலயம், மேற்கு நோக்கி அமைந்துள்ளது. ஆலயத்தின் இராஜகோபுரத்திற்கு வெளியே, வடக்கு புறத்தில் சூரிய புஷ்கரணி என்ற தீர்த்தக் குளம், ஒன்பது தீர்த்தங்களுடன் அமையப் பெற்றுள்ளது. ஆலய இராஜகோபுரம் மூன்று நிலைகளுடன், ஐந்து கலசங்களுடன் 59 அடி உயரம் உள்ளது.

ஆலயத்தின் மத்தியில் ஸ்ரீ சூரிய பகவானுக்கு கர்ப்பக் கிரகமும், அதனை ஒட்டினாற்போல நவக்கிரகங்களில் சனி, புதன், செவ்வாய், சந்திரன், கேது, சுக்கிரன், ராகு, என்று எழுவருக்கும் தனித்தனி சிறு கோவில்களும், தேஜஸ் சண்டருக்கு தனிக் கோவிலும் அமைந்துள்ளன. ஸ்ரீ சூரிய பகவான், கருவறையின் மேற்கு முகமாக நின்ற திருக்கோலத்தில், செந்தாமரை மலர்களை ஏந்தியபடி, புன்முறுவலுடன் தனது தேவியர்களான உஷாதேவி, பிரத்யுஷா தேவியுடன் காட்சியளிக்கிறார்.

சூரியனின் வாகனமான குதிரை, சிவலிங்கத்துக்கு முன்னால் நந்திதேவன் இருப்பதுபோல் இருக்கிறது. சூரிய பகவானின் கருவறைக்கு முன்னே, மகாமண்டபத்தில் குரு பகவான் எழுந்தருளுகின்றார்.

சூரியனைச் சுற்றியுள்ள எட்டுத் திசைகளிலும் ஏனைய எட்டுக் கிரக நாயகர்களும் எழுந்தருளி உள்ளனர். இத்திருக்கோவிலின் முக்கிய அம்சம், ஆலயத்தில் உள்ள நவக்கிரக நாயகர்கள் வாகனம் இல்லாமலும், ஆயுதம் இல்லாமலும், புன் முறுவல் பூத்த முகத்துடன், அனுக்கிரக மூர்த்தி களாக விளங்குவது தான்.

இத்திருக்கோவிலின் தல விருட்சம் வெள்ளெருக்கு ஆகும். களத்திர தோஷம், திருமண தோஷம், புத்திர தோஷம், உத்தியோக தோஷம் மற்றும் சூரிய புத்தி, சூரிய திசை நடக்கிறவர்களுக்கு ஏழரை நாட்டுச் சனி, அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனியால் கஷ்டப்படுபவர்களும், வேறு பிற நவக்கிரக தோஷமுள்ளவர்களும் இத்திருக் கோவிலில் 12 ஞாயிற்றுக்கிழமைகள் இங்கு முறைப்படி பூஜை செய்தால், மேற்படி பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து எல்லா நலங்களும், வளங்களும் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க வைக்கும் சீன தேசத்து சோதிடம்



## எலி ஆண்டுப் பலன்கள் (25 ஜனவரி 2008 முதல் 7 பெப்ரவரி 2009)

சீன வானவியல் சாஸ்திரம் 12 ஆண்டு சுழற்சியை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு மிருகத்தின் பெயரால் குறிப்பிடப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டு பூமி எலி ஆண்டு (அ) எலி ஆண்டு. மற்ற ஆண்டுகள், காளை, புலி, முயல், ட்ராகன், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, சேவல், நாய், ஆண்பன்றி ஆண்டுகளாகும். சீன சோதிடப்படி இந்த ஆண்டிற்கான எலி பலன்களில் சுவையான தகவல்களும், கணிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

வூ.ஜி அல்லது எலி ஆண்டாகிய இந்த ஆண்டு, பனி சூழ்ந்த மலையால் அறியப்படுகிறது. இதன் பொருள் எதிர்பாராத விளைவுகள், குழப்பமான எண்ணங்கள், நம்பிக்கைகள் என்பதே. வருடத்தின் துவக்கம் நம்பிக்கையுடன் நன்முறையில் துவங்கினாலும், ஆண்டின் முடிவில் தண்ணீரின் ஆதிக்கம் அதிகரிப்பதால் தோல்விகளும் நட்டங்களுமே அதிகமாகும். தண்ணீர், இயக்கம் மற்றும் இயங்குதலைக் குறிப்பது. மேலும் வழிநடத்தும் சக்தி யாக அறியப்படுவது.

ஆதலால் பொருளாதாரம் வளர்ச்சி நிலையைக் காட்டும். ஆனாலும் ஆண்டின், இறுதிப் பகுதியில் நீரின் செயல்பாடு அதிகரிப்பதால், நம் மூடத்தனமான, பகுத்தறிவற்ற செயல்பாடுகளின் வெளிப்பாடுகளைக் காண நேரிடும்.



சிறிய, குறுகிய கால ஆதாயங்களுக்கு ஆசைப்படாமல், நீண்ட தொலைநோக்குப் பார்வையுடன் பிரச்சினைகளை அணுகுவதே பாதுகாப்பான வழியாகும். எதிர்மறையான மனோ நிலையை விடுத்து, அடிப்படையான, ஆதாரமான நெறிமுறைகளை பின்பற்றுவது நலம் பயக்கும்.

அரசியல்ரீதியாகவும் இந்த 2008 மோசமான நிகழ்வுகளைக் காட்டும். திடீர் அரசியல் மாற்றங்கள், வன்முறை போராட்டங்கள், அபாயகரமான விளைவுகள் என அரசியல் வானம் கலக்கத்திலிருக்கும். உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்களுக்குத் தீர்வு ஏதும் இல்லாத போராட்டமான ஆண்டாகவே 2008 அமையும்.

அறிவுசார், கல்விசார் தொழில் நிறுவனங்களும், அவை சார்ந்த தொழில்களும் இந்த எலி ஆண்டின் வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றம் காணும். அதாவது கல்வி, பத்திரிகைத்துறை, பதிப்பகத்துறை, சுற்றுலாத்துறை, விளையாட்டு, கட்டுமானம், புதுப்பித்தல் மற்றும் அதிக நுகர்வுடைய நுகர்வோர் பொருட்கள்துறை ஆகியன முன்னேற்றம் காணும்.

தெற்குத் திசையில் ஏற்படும் தொழில் முன்னேற்றத்தைக் காட்டிலும், வடக்கு பகுதிகளில் வளர்ச்சி அதிகமிருக்கும். ஆயினும் ஆரம்பத்தில், வடக்கு திசையில் சொத்துக்களின் மதிப்பு, வளர்ச்சி நிலையைக் காட்டிலும், செப்டம்பரில், நெருப்பு நட்சத்திரத்தின் வருகையால் நிலைமையிலும் பற்பல மாற்றங்கள் வரும்.

நீர்க்குமிழி உடைந்து விட்டது என்பார்களே! அது போல. ஆகவே எதிலும், எப்போதும் நீண்ட தொலைநோக்குப் பார்வையும், அணுகு முறையும் மிக அவசியம். இந்த ஆண்டின் பூமி எலியானது இரவு எலி. இதனால் திருட்டு, வழிப்பறி, கொள்ளை, குற்றங்கள் அதிகரிக்கும்.

பெரு வணிக நிறுவனங்களின் பேராசையும், பொறுமையும், கையாடல், ஊழலை அதிகரிக்கும். நல்லதொரு திருட்டுத் தடுப்பு அலாரம் வாங்குவதில் முதலீடு செய்யுங்கள். (குறிப்பாக தெற்குப்பகுதியில் வாசல் கொண்டவர்கள் உடனடியாக காப்பீடு செய்து கொள்ளுங்கள்) பணத்தை எடுத்துச் செல்வதில் கவனமாக இருங்கள்.

பெருவணிக நிறுவனங்களின் ஊழல், கையாடல்களிலிருந்து எச்சரிக்கையாக இருங்கள். குழப்பமான, தெளிவற்ற போக்கு வணிகரீதியாக நிலவுவதால், தொழில் சாம்ராஜ்யங்களின் அதிபர்களும், தொழில் நிறுவனங்களும் தங்களுடைய ஆளுமையை நிலை நிறுத்திக் கொள்ள போராட வேண்டும். எச்சரிக்கையுடனும், தொலைநோக்கு சிந்தனையுடனும் செயல்பட வேண்டிய ஆண்டு இந்த எலி ஆண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு

## ஆனி மாதம்

[15.06.08 முதல் 15.07.08 வரை]

**(அசுவினி 1,2,3,4 பாதங்கள், பரணி 1,2,3,4 பாதங்கள், கார்த்திகை 1ஆம் பாதம்)**

**(பெயரின் முதல் எழுத்து க-சே-சோ-ல-லி-லு-லே-லோ-அ உள்ளவர்களுக்கும்)**

# எதிலும் தனி முத்திரை பதிக்க விரும்பும் மேஷ ராசி நேயர்களே!




சஞ்சலங்களை விலக்கி, துணிவுடன் செயலாற்றுவீர்கள், மனதில் புதுத்தெம்பும் உற்சாக மும் தோன்றும். சுப காரியங்கள் நடப்பதற்கான காலம் கனிந்து வருகிறது. எதிலும் வெற்றி பெறும் வேளை இது! கலக்கம் என்ற நிலை மாறி, கடகடவென்று முடிவு எடுப்பீர்கள்.

**பெண்களுக்கு:**

இந்த மாதம் வள்ளல்களான, நவக்கிரக நாயகனான சூரியனும், தேவகுருவான குரு பகவானும் நற்பலன்களை அள்ளித் தருகிறார்கள். புதன், ஜூலை 6ஆம் திகதி வரை, உங்கள் ராசியிலிருந்து 2ஆம் இடத்திலும், 6ஆம் திகதிக்குப் பிறகு 3ஆம் இடத்திலும் இருப்பதால், முன் கோபம், பதற்றம் ஆகியவற்றிற்கு இடம் தராமல், நிதானமாக செயலாற்றி வந்தால், உறவுகள் உங்கள் அருகிலேயே இருக்கும்.

ஜூலை 5ஆம் திகதி வரை 3இலும், அதற்குப் பிறகு 4இலும் உள்ள சுக்கிரனின் பலத்தால், புதிய நட்பும் கிடைக்கும்.

புதன் உங்கள் ராசியிலிருந்து, சூரியன் 3ஆம் இடத்தில் இருப்பதால், தந்தை-மகள் உறவு நெருக்கமாகும். இதுவரை இருந்த மனஸ்தாபங் கள் நீங்கி, ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்வீர்கள்.

எதிர்பாராத பரிசுகளும் கிடைக்கும். 9இல் உள்ள குரு, சுப நிகழ்ச்சிகளுக்கு கட்டியம் கூறுவார். மகிழ்வுடன் பணம் செலவழிக்கும் வேளை இது!

புதன், ஜூலை 6ஆம் திகதி வரை, உங்கள் ராசி யிலிருந்து 2ஆம் இடத்திலும், 6ஆம் திகதிக்குப் பிறகு 3ஆம் இடத்திலும் இருப்ப தால், முன்கோபம், பதற்றம் ஆகியவை இருக்கும்.

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை கேதுவு டன் சுக ஸ்தானமான 4இல் சஞ்சரிப்பதாலும், 22ஆம் திகதி முதல் 5ஆம் இடத்தில் சனியுடன் சஞ்சரிப்பதாலும், வாகனத்தை ஓட்டும் பெண்கள் கவனமாக இருப்பது நலம்.

வாகனம் தொடர்பான ஆவணங்களை கையி லேயே வைத்திருந்தால், வீண் அலைச்சலைத் தவிர்க்கலாம். 3ஆல் உள்ள சுக்ரனின் பலத்தால், புதிய நட்பும் கிடைக்கும்.

அன்புப் பரிமாற்றமும் மகிழ்வைத் தரும். இனிமையான அனுபவங்கள், சிறப்பான உணவு வகைகள் ஆகியவற்றை அனுபவிக்கும் வாய்ப்பு கள் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10இல் ராகு இருப்பதால், இல்லப் பராமரிப்பிற்கென சிறிது அலைவீர்கள். சனி 5இல் அமர்ந்திருப்பதால், ஆன்மீகப் பயணங்களுக்கான அழைப்பு உங்களைத் தேடி வரும்!

**மாணவர்களுக்கு:**

சூரியனின் பலத்தால், நண்பர்களிடையே உங்களின் மதிப்பும், மரியாதையும் கூடும். குரு 9இல் உள்ளதால், கல்வி தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்கள் வெற்றிகரமாய் அமையும். விரும்பிய கணனிப் பாடங்களில், நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும்.

வக்ர கதியில் உள்ள புதன், இந்த மாதம் 2இலும், 3இலும் இருப்பதால், வெளி வட்டார பழக்க வழக்கத்தினை, ஒரு எல்லையிலேயே வைப்பது நல்லது. உரையாடலின்போது, உங்களின் சொந்த விஷயங்கள் இடம் பெறாத வாறு, கவனமாய் இருங்கள்.

கேதுவுடன், செவ்வாய் ஜுன் 21ஆம் திகதி வரை 4இல் இருப்பதால், சில சமயங்களில் பாடங்களுக்குத் தேவையான செய்திகளை, சற்று சிரமப்பட்டு சேகரிக்க வேண்டியிருக்கும்.

சுக்ரனின் அருளால், விலையுயர்ந்த, விரும்பிய ஆடை வகைகளை வாங்கி மகிழ்வீர்கள். கல்லூரி விழா, போட்டி ஆகியவற்றில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

10இல் ராகு இருப்பதால், படிப்பில் விசேஷ கவனம் செலுத்தி வாருங்கள். மதிப்பெண் பெறுவது மலைப்பாய் தோன்றாது.

சனி 5இல் செவ்வாயுடன் இருப்பதால், அவ்வப்போது தோன்றும் சிறிய பிரச்சினைகளை, தெளிவுடனும், திறமையுடனும் கையாள்வீர்கள். உங்களின் அனுபவம், உங்களின் திறமையைத் தூண்டிவிடும் விதத்தில் அமையும்.

**பணிபுரிபவர்களுக்கு:**

3இல், 4இல் உள்ள சுக்ரன், நட்பை இனிக்கச் செய்வார். சூரியன் நற்பலன்களை அள்ளித் தரும் இடத்தில் உள்ளதால், இது நாள் வரை மந்தகதியில் சென்று கொண்டிருந்த வேலை, புதிய வேகத்துடன் நடைபெறும். சக ஊழியர்கள் உங்கள் திறமையையும், அருமையையும் புரிந்து கொள்வார்கள்.

புதனின் சஞ்சாரத்தால், சில குழப்பங்கள் உருவாகும் சூழல் இருப்பதால், தகுந்த ஆலோசனையுடன் செயல்பட்டு வாருங்கள்.

குரு பலத்தால், பொருளாதாரம் திருப்திகரமானதாக இருக்கும். கடனாக கொடுத்திருந்த பழைய பாக்கி வசூலாகிவிடும். 4இல் கேது, செவ்வாய் இருப்பதால், வழக்கு தொடர்பான விஷயங்களில், நேரடியாக கவனம் செலுத்துவது சாலச் சிறந்தது.

ஜுன் 22ஆம் திகதியிலிருந்து செவ்வாய் 5ஆம் இடத்தில் அமர்வதால் பணி நிமித்தம் அலைச்சல் அதிகரிக்கும். 3இல் உள்ள சுக்ரன், நட்பை இனிக்கச் செய்வார்.

சனி 5இல் இருப்பதால், மற்றவர்கள் ஏதேனும் குறை கூறினாலும் அதனை பொருட்படுத்தாமல், சூழ்நிலைக்கேற்றவாறு நடந்து கொண்டால், எல்லோரும் உங்களின் உதவி நாடி வருவார்கள்.

10இல் உள்ள ராகுவால், எதிர்பாராத பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்புகள் அமையும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சூரியனின் அருளால், உங்களுக்கு அரசு வழி உதவிகள் அனுகூலமாய் அமையும். 3இல், 4இல் உள்ள சுக்ரன், உங்களின் நட்பு வட்டத்தை மேலும் விரிவாக்குவார். உடனிருப்பவர்கள் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வார்கள்.

முக்கியமான பணிகளை வெற்றியுடன் முடிப்பீர்கள். புதன் 2,3 ஆகிய இடங்களில் அமர்ந்துள்ளதால், ''எடுத்தேன், கவிழ்த்தேன்'' என்ற ரீதியாக முடிவு எடுப்பதைத் தவிர்த்தல் நலம்.

புதிய இடங்கள், வாகனங்கள் ஆகியவை குருவின் அருளால், விரும்பிய வண்ணம் அமையும். நீங்கள் மேற்கொள்ளும் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பயணங்கள், உங்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு அடித்தளமாகும்.

4இல் கேதுவுடன் ஜூன் 21ஆம் திகதி வரை, செவ்வாய் இருப்பதால், வேலையாட்களை அரவணைத்துச் சென்றால், எடுத்துக் கொண்ட பணிகள் முழுமையாக நிறைவடையும். 3இல் உள்ள சுக்ரன், உங்களின் நட்பு வட்டத்தை மேலும் விரிவாக்குவார்.

முக்கியமான பணிகளில், நண்பர்கள் உதவு வார்கள். 5இல் உள்ள சனியுடன் செவ்வாயும் ஜூன் 22ஆம் திகதி முதல் சேர்ந்து இருப்பதால், குரு தெய்வ நேர்த்திக் கடனை முடித்தல் நலம் பயக்கும். பூர்வீகச் சொத்து விஷயங்களில் உண்டாகும் பிரச்சினைகளை, உடனுக்குடன் தீர்த்துவிட்டால், வீண் விரயங்களைத் தவிர்க்க லாம். தொழில் ஸ்தானமான 10ஆம் இடத்தில் ராகு இருப்பதால், வேற்று மொழியினரிடம் அளவாகப் பழகுவது அவசியம்.

உடல் ஆரோக்கியத்தில் தகுந்த கவனம் செலுத்தி வாருங்கள், உங்களின் அன்றாட அலுவல்கள் சீராக நடைபெறும்.

**வியாபாரிகளுக்கு:**

சூரியன் 3இல் இருப்பதால், வியாபார அபிவிருத்தி தொடர்பாக, சரியான யோசனை களும் தோன்றும். அவற்றை எளிதில் செயல் படுத்திடவும் முடியும். 3இல், 4இல் உள்ள சுக்ரன், பெண்கள் மூலம் அனுகூலமான வாய்ப்புகளை அளித்திடுவார்.

குருவின் சஞ்சாரத்தால், புதிய பொருள்கள் வந்து சேரும். கடன் தீர்வு சம்பந்தமாக எடுக்கும் முயற்சிகள் பலிதமாகும். உழைப்புக்கும், தொழி லுக்கும் நல்ல பலன் கிடைக்கும்.

பொருளாதார வரவால், மனம் உற்சாகம் அடையும். புதனின் சஞ்சாரத்தால், மறதி, குழப் பம், தடுமாற்றம் ஆகியவை எட்டிப் பார்க்கும் வாய்ப்பிருப்பதால், கொடுக்கல் வாங்கல் சம்பந் தமான ஆவணங்களை பத்திரமாக வைப்பது நல் லது.

3இல் உள்ள சுக்ரன் பெண்கள் மூலம் அனுகூலமான வாய்ப்புகளை அளித்திடுவார். உறவும், நட்பும் மனதிற்கு இதமாய் அமையும். உங்களின் பொலிவான தோற்றம், வியாபார வட்டத்தில் அனைவரையும் கவர்ந்திழுக்கும். நூதனவகை வாசனை திரவியங்களை உபயோ கித்து மகிழ்வீர்கள்.

விருந்து, விசேஷம் ஆகியவற்றிற்கு மகிழ்வு டன் பணம் செலவழியும். ஜூன் 21ஆம் தேதி வரை செவ்வாய் 4இல் உள்ள கேதுவுடன் இருப் பதாலும். 22ஆம் திகதி முதல் சனியுடன் சேர்ந்து இருப்பதாலும், தொழிலாளர் பிரச்சினை களில் சூடான வாக்குவாதம், முன்கோபம் ஆகியவற் றிற்கு இடம் தராமல், நிதானமாக செயல்படுவது நல்லது.

ராகு 10இல் இருப்பதால், அறிமுகமில்லாத நபர்களிடம் சரக்கு பரிமாற்றம் செய்வதில் எச்சரிக்கையாய் செயல்படவும்.

**கலைஞர்களுக்கு:**

சுக்ரனின் சஞ்சாரத்தால், நட்புகள் நெருக்க மாகும். அவர்கள் மூலம் சந்தோஷமான அனுப வங்கள், பயணங்கள் ஆகியவை கிட்டும். புதிய வாய்ப்புகள், அதற்கேற்ற வரவு ஆகி யவை தாராளமாக இருக்கும். 9இல் உள்ள குரு வின் அருளால், திருமணமாகாமல் இருப்பவர்க ளுக்கு, தேடிவரும் திருமண வாய்ப்பே, வாழ்க் கைத் துணையாக அமையும் பாக்கியம் கிட்டும்.

ஜூன் 21ஆம் திகதி வரை செவ்வாய் 4இல் உள்ள கேதுவுடன் இருப்பதால் தொழில் ரீதியாக சில சங்கடங்களை சந்திக்க நேரிடும். 22ஆம் திகதி முதல் செவ்வாய், 5இல் சனியுடன் சேர்ந்து இருப் பதால் சில உடல் அசௌகரியங்களும் ஏற்படக்கூடும் என்பதால், வெளியூர் பிரயாணங் களின் போது, உணவு விஷயத்தில் மிதமாக இருப்பது நல்லது.

10இல் ராகு இருப்பதால், வீண் அபவாதம், அலைச்சல் ஆகியவை தோன்றி மறையும். எனவே வெளிவட்டாரப் பழக்கங்களைக் குறைத்து கொள்ளவும். உங்களை நெருங்கி வரும் சொந்தங்களை, குறைகூறாமல் அப் படியே ஏற்றுக் கொள்ளுங்கள். எப்போதும் உங்களுக்கு துணையாய் இருப்பார்கள்.

**இந்த மாதம் மேஷ ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

15-06-08 26.40 மணி முதல் 18-06-08 மணி 15.16 வரை, ஜூலை 13-07-08 காலை 09.10 மணிமுதல் 15-06-08 மணி 21.46 வரை

## நட்சத்திரப் பலன்கள்:

**அசுவினி 1,2,3,4 பாதங்கள்:**

நீங்கள் விரும்பிய பலன் கிடைக்கும். சொந்த பந்தங்களால் மதிக்கப்படுவீர்கள்.

**பரணி 1,2,3,4 பாதங்கள்:**

புதிய நட்பும், உறவுகளின் வரவும் உங்களை மகிழ்ச்சிப்படுத்தும்.

**கார்த்திகை 1ஆம் பாதம் :**

உங்களின் நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

**பரிகாரங்கள்:**

உங்கள் ராசி நாதனான செவ்வாயின் அருள் பெற, கந்தசஷ்டி கவசம் படித்து வாருங்கள். புதன்கிழமை தோறும் விஷ்ணுவுக்கு துளசி மாலை சாற்றி வழிபட்டு வந்தால், புதிய உத் வேகத்துடன் செயல்படும் வாய்ப்பு கிடைக்கும்.

துர்க்கை, பிள்ளையார் ஆகிய இருவருக்கும் உரிய துதியை படித்து வர, துயரங்கள் யாவும் கரைந்து விடும். சனிக்கிழமைகளில், சனி பகவான் சன்னதியில் தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால், நலம் யாவும் உங்களை நாடி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு

## ஆனி மாதம்

## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி 1,2,3,4, பாதங்கள், மிருகசீரிடம் 1,2 பாதங்கள்.)**

**(பெயரின் முதல் எழுத்து இ-உ-ஏ-ஒ-வ-வி-வு-வே-வோ உடையவர்களுக்கும்)**

**சிரித்த முகத்துடன் விளங்கும் ரிஷப ராசி நேயர்களே!**

உறவுகளின் வருகையால் இல்லத்தில் கலகலப்பு நிறைந்திருக்கும்.

குரு பகவான் 8இல் இருப்பதால், பொருளாதார ரீதியாக, வாக்குறுதிகளை அள்ளி வீசாமலிருப்பது நலம். சூரியன் 2ஆம் இடத்தில் இருப்பதால், கண்களைப் பராமரிப்பதில் தனி கவனம் செலுத்தி வாருங்கள்.

ராகு 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால், சில காரியங்கள் நீங்கள் விரும்பியவாறு அமையாது, சற்றே தாமதமாகும் நிலை உருவாகும். ஜூன் 21ஆம் திகதி வரை 3ஆம் இடத்தில் கேதுவோடு சஞ்சரிக்கும் செவ்வாயும், புதிய இடம் மற்றும் வாகனம் வாங்குதல் என்று பரபரப்பான சந்தோஷத்தைத் தருவார்.

22ஆம் திகதி முதல் 4இல் உள்ள சனியோடு இணைவதால், சற்று சிரமங்கள் தோன்றி மறையும்.




எந்த பிரச்சினை வந்தாலும், அதில் வெற்றி காணப்போகிறீர்கள். உங்களின் சாதூரியமான பேச்சால், சில முக்கிய காரியங்களை சாதித்துக் கொள்ளும் வேளை இது! துணிவுடன் செயல்பட்டால் வெற்றி உங்களுக்கே!

**பெண்களுக்கு:**

இந்த மாதம், உங்கள் ராசிநாதனான சுக்ரன் 3ஆம் இடங்களில் சஞ்சரிக்கிறார். சுப நிகழ்ச்சி, விருந்து, வேடிக்கை ஆகியவற்றில் கலந்து கொண்டு, மகிழ்தல் என்று அமர்க்களப்படுத்தி விடுவார்! புதிய பொருட்களும் வந்து சேரும். சந்தோஷ அலுப்புடன் பல பிரயாணங்களை மேற்கொள்வீர்கள்.

அலைச்சல் அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு:**

சுப பலன் தரும் இடங்களில் சுக்ரன் இருப்பதால், உல்லாசப் பயணம், கேளிக்கை என்று மகிழ்வுடன் பொழுது செல்லும். நட்புக்கென்று அதிக நேரம் ஒதுக்கி வைப்பீர்கள்.

நண்பர்களும், உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வார்கள். குரு 8-ல் இருப்பதால், படிப்புக்கான பணம் கட்டும் பொறுப்புகளைப் பிறரிடம் தராமல் இருப்பது நலம்.

2-ல் சூரியனின் சஞ்சாரத்தால், ஒவ்வாமை தோன்றும் வாய்ப்பிருப்பதால், உணவு மற்றும் மருந்து விஷயங்களில் எச்சரிக்கையாக செயல்படவும். புதனின் நிலையை மனதில் கொண்டு, பாடங்களை சுமையாய் சேர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமல், உடனுக்குடன் படித்து வருதல் நலம் பயக்கும்.

ஜூன் 21ஆம் திகதி வரை செவ்வாய் 3-ல் உள்ள கேதுவோடு இருப்பதால், செய்முறைப் பயிற்சிகள் முதலியவை சிரமமின்றி முடியும்.

பிறகு 4இல் உள்ள சனியோடு செவ்வாய் இணைவதால், பதற்றத்திற்கு இடம் தராமல், பொறுமையுடன் செயல்படுங்கள். ராகு 9இல் இருப்பதால், உரையாடல்களில், கிண்டல், கேலிப்பேச்சு ஆகியவை கலக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த சூழலிலும், கோபத்திற்கு தகுந்த அணை போடுவது அவசியம். பணிவான போக்கு, விரும்பிய பலனைத் தரும்.

**பணிபுரிபவர்களுக்கு:**

உங்கள் ராசிநாதனான சுக்ரன், அன்பான சந்திப்பு, கலைத்திறமைக்குரிய அங்கீகாரம் ஆகியவற்றை அளிப்பார். குரு 8இல் இருப்பதால், இயன்ற வரை உதவிகள் செய்வதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். நெருங்கிய நட்பாயினும், எவருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போடாமலிருப்பதே சிறந்தது.

சூரியன், புதன் ஆகிய இருவரும் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பிரச்சினைகளில் பாரபட்சமின்றி செயல் பட்டால், மறைமுக எதிர்ப்பு, நிர்ப்பந்தம் ஆகியவை உங்கள் அருகே வராது.

உங்கள் சொல்லுக்கு உரிய மதிப்பும், மரியாதையும் குறையாது. ஜூன் 21ஆம் திகதி வரை 3இல் கேதுவோடு வலம் வரும் செவ்வாய், கிடப்பில் கிடந்த கடன் விண்ணப்பங்களும், கோரிய தொகை கிடைக்குமாறு செய்திடுவார்.

அதன் பிறகு 5இல் உள்ள சனியோடு சேர்வதால், 'தானுண்டு, தன் வேலையுண்டு' என்று இருந்து வாருங்கள்.

அலுவலக வட்டாரத்தில் அமைதியுடன் வேலை செய்ய முடியும். ராகு 9இல் இருப்பதால், எவ்வளவு தான் பாடுபட்டாலும், உங்களுக்கு வரும் நல்ல பெயரை மற்றவர்கள் தட்டிக் கொண்டு போவர்.

எனவே இயன்ற வரை பணிகளையும், உங்களை நாடி வரும் கோப்புகளையும் உடனுக்குடன் முடித்து அனுப்பி விடுங்கள். நம் பணியை முடித்து விட்டோம் என்கிற மனநிறைவாவது இருக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

இந்த மாதம், உங்கள் ராசியிலிருந்து 2,3 ஆகிய இடங்களில் அமரப் போகும் சுக்ரன் சுக போக வாழ்வை அனுபவிக்கும் வாய்ப்பை அள்ளித்தருவார். வெளியூர் பிரயாணங்கள் லாபகரமாய் அமையும். உங்களின் அலுவலகத்தில் நீங்கள் செய்யும் மாறுதல்கள் மனதிற்கு இனிமை சேர்க்கும் விதமாக அமையும்.



குருபகவான் 8-ல் இருப்பதால், பொருளாதாரத்தில் தேவையான கையிருப்பு வைத்துக் கொண்டால், பணச்சிக்கல் ஏதும் இராது. புதிய செலவுகளையும், முதலீடுகளையும் சற்று தள்ளிப் போடுதல் நல்லது.

உங்களிடம் பணி புரியும் ஊழியர்களை அன்பால் கட்டி வையுங்கள். விசுவாசமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொள்வார்கள்.

ஜூன் 21ஆம் திகதி வரை கேதுவுடன் இருக்கும் செவ்வாய், சொத்து சம்பந்தமான விஷயங்களை சுமூகமாக முடித்து வைப்பார். 22ஆம் திகதி முதல், 4இல் உள்ள சனியுடன் இணைவதால், மூத்தோரிடம் பணிவாய் இருப்பது நன்மை தரும்.

இந்த மாதம், சூரியன், புதன் இருவரும் சாதகமற்ற இடத்தில் இருப்பதால், உயர்மட்டக் குழு விவாதங்களையும், ரகசியங்களையும் பிறரிடம் வெளியிடாமல் இருந்தால், உங்களின் நற்பெயருக்கு எந்த பங்கமும் வராது.

ராகு 9ஆம் இடத்தில் இருப்பதால், பழைய வழக்கு விவகாரங்கள் மீண்டும் தலை தூக்கும் வாய்ப்பு உள்ளதால், ஆரவாரமின்றி அமைதியாய் உங்கள் பணியில் முழுக்கவனம் செலுத்தி வாருங்கள்.

**வியாபாரிகளுக்கு:**

சுக்ரனின் அருளால், புதிய யுக்திகளை மேற்கொள்வதன் மூலம் லாபம் கணிசமாய் அதிகரிக்கும். விரிவாக்கத்திற்கு ஏற்றவாறு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் உயரும். நிறுவன வளர்ச்சி நன்றாக இருக்கும்.

பெண் பணியாளர்கள் உங்களின் வியாபார வளர்ச்சிக்கு துணையாய் இருப்பார்கள். குரு 8-ல் இருப்பதால் அடுத்தவர்கள் வார்த்தைகளை நம்பி, சரக்கு பரிமாற்றம் செய்வதை இதமாக மறுத்து விடுங்கள். காசோலைகளின் பயன்பாட்டில் கருத்துடன் இருந்தால், பொருளாதாரச் சிக்கல் ஏதும் எழாது.

ஜூன் 21ஆம் திகதி வரை கேதுவுடன் இருக்கும் செவ்வாய் தேங்கிக் கிடந்த சரக்குகளையும் விற்று காசாக்கித் தந்திடுவார். 22ஆம் திகதியிலிருந்து சனியுடன் சஞ்சரிப்பதால், பங்குதாரர்கள் இடையே சில சச்சரவுகள் ஏற்பட்டு விலகும்.

சூரியன் உங்கள் ராசியிலிருந்து 2ஆம் இடத்திலும், புதன் 1, 2 ஆகிய இடங்களில் இருப்பதால், உடம்புக்குத் தேவையான ஓய்வை அளித்து, பணியில் ஈடுபட்டால், ஆரோக்கியம் சீராக இருக்கும். மருத்துவச் செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

ராகு 9இல் இருப்பதால், சரக்கு தொடர்பான கணக்கு வழக்குகளை நிலுவை இன்றி, முறையாக முடித்து வைத்துக் கொள்ளுங்கள்.

எவரிடமும் சொல்ல வேண்டியிராது. பொறுப்புகளை தகுந்த நபரிடம் ஒப்படைத்து விட்டால், நிம்மதியாய் வாணிகம் செய்ய முடியும்.

**கலைஞர்களுக்கு:**

புகழேணியில் இடம் பெற வேண்டும் என்ற ஆசையை சுக்ரன் நிறைவேற்றி வைப்பார். திறமைக்குரிய அங்கீகாரமும், பாராட்டும், உங்களை புதிய முயற்சிகளில் ஈடுபடுத்தும். நட்பும், சுற்றமும் உங்களின் நன்மைக்காக பாடுபடும். குடும்பத்தில் நிலவும் மகிழ்ச்சியும் உங்களின் வளர்ச்சிக்கு ஆதரவாக அமையும்.

குரு 8இல் இருப்பதால், வங்கிக்கான கடன் தொகைகளை குறித்த கெடுவுக்குள் செலுத்தி விட்டால், அபராதம் கட்டாதவாறு தப்பித்துக் கொள்ளலாம்.

சூரியன் 2இல் இருப்பதால், தொழில்துறையில் சில சிக்கல்களை சாமர்த்தியமாக கையாளும் நிலை ஏற்படும். பொருள் சிக்கனத்தோடு சொல் சிக்கனத்தையும் மேற்கொள்வது நன்மையாக இருக்கும்.

புதன் 1, 2 ஆகிய இடங்களில் இருப்பதால், குடும்ப விஷயங்கள் அம்பலம் ஆகாத வண்ணம், பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து விடுவது நல்லது. அந்தரங்க விஷயங்களில், அன்னியர் தலையீடு இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

3இல் உள்ள கேதுவுடன் ஜூன் 21ஆம் திகதி வரை இருக்கும் செவ்வாய், விலை உயர்ந்த வாகனங்கள் வாங்கி மகிழும் வாய்ப்பை அளிப்பார்.

22ஆம் திகதி முதல் 4இல் உள்ள சனியுடன் இருப்பதால், நீண்ட வெளியூர் பிரயாணங்களில், விலை உயர்ந்த உடைமைகளை தகுந்த பாதுகாப்பாய் வைத்துக் கொள்ளுங்கள்.

**இந்த மாதம் ரிஷப ராசிக்காரர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாட்கள்:**

18-06-08 15:17 மணி முதல் 20-06-08 மணி 24:12 வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**கார்த்திகை 2,3,4 பாதங்கள்:**

இழுபறியாய் இருந்த பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும்.

**ரோகிணி 1,2,3,4 பாதங்கள்:**

புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும் விதமாக இருக்கும்.

**மிருகசீரிடம் 1,2,3 பாதங்கள்:**

உங்களின் சேமிப்பால், பொருளாதாரம் சீராக இருக்கும்.

**பரிகாரங்கள்:**

சூரியனார் கோவிலுக்கு உங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி வையுங்கள். ஆதவனின் அருள் கிடைக்கும்.

சனிக்கிழமைகளில் பெருமாளை தரிசனம் செய்து வர, புதனும் பொலிவான வாழ்வைத் தருவார். சனிக்கும், ராகுவிற்கும் உரிய துதிப் பாடல்கள் சொல்லி வாருங்கள்.

சங்கடங்கள் யாவும் சடுதியில் விலகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டமா சித்தி பெற்று அற்புதங்கள் நிகழ்த்தும் சித்தர்கள்

மனிதன் தன் புலன்களுக்கும், அறிவுக்கும் எட்டாத விடயங்களைப் பொறுத்தமட்டில், அவற்றைப்பற்றிய மிகைப்படுத்தப்பட்ட உண்மைகளை அல்லது பொய்களை தீவிரமாக நம்புகின்றான். பாம்புகள், ஆவிகள், பேய், மதக்கோட்பாடுகள் போன்றவற்றை பற்றி உலகினரின் நம்பிக்கையில் சிறிதளவே உண்மையாய் இருக்கின்றது. இந்த வரிசையில் சித்தர்களும், இரசமணியும், நவபாஷாணமும் சேரும்.

புலன்களுக்குப் புலப்படாத எதையுமே புதிர்களாய் எண்ணுவது என்பது மனித இனம் இன்றளவும் கடைப்பிடித்து வரும் புதிரான போக்கு.

**உண்மையில் சித்தர்கள் யார்?**

சித்தர்கள் என்போர் சித்தத்தை தம்முள் அடக்கியாண்டு, தியான சக்திமூலம் மனதை உள்முகமாக திருப்பி, எங்கும் நிறை பரப்பிரும்மத்தோடு தங்கள் ஜீவனை ஒன்றாக்கிய தெய்வீக நிலை அடைந்தவர்கள்.

நினைத்த நேரத்தில் முக்தியையும், உடலைத் துறக்கும் வித்தையையும் அறிந்தவர்கள். பிறப்பு-இறப்பு, இன்பம்-துன்பம், நன்மை- தீமை, இருள்-ஒளி என்ற இருமைகளை எல்லாம் கடந்து ஒன்றே என்ற பரப்பிரும்மத்தோடு இணைந்தவர்கள்.

சித்தர்களைப் பொறுத்த மட்டில் வயதோ, ஆயுள் காலத்துக்கு அளவோ, மரணம் என்பதோ எதுவும் இல்லை. இவை எல்லாவற்றையும் கடந்தவர்கள் அஷ்டமாசித்தி பெற்றவர்கள். இறைவனை சிந்திபவர்களுக்கும், நல்லவர்களுக்கும், தேவை உள்ளோருக்கும் உபயோகிப்பவர்கள்.

கூடுவிட்டு கூடு பாய்தல், நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு செல்லுதல், இரசவாதம், இரசமணி, நவபாஷாணம் செய்தல், இறந்தவர்களை உயிர்ப்பித்தல் போன்ற அஷ்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள்.

குண்டலினி சக்தியை எழுப்பி மூலாதாரத்தில் நிறுத்தி எந்நேரமும் இறை உணர்வோடு வாழ்பவர்கள்.

யுகங்களைக் கடந்து வாழத் தெரிந்த சித்தர்களின் சரீரப் பாதுகாப்பு இரகசியங்களை நாம் அறியாமல் போனது, நம் துரதிர்ஷ்டம்.

பாரத தேசம் மட்டுமல்லாது உலகின் பல்வேறு நாடுகளிலும் சித்தர்கள் இறைவா வரத்துடன் அருள் பாலித்து வருகின்றனர். இவர்கள் அனைவருமே பாரதத்தில்தான் வாழ்ந்தனர்.

முக்திநிலை அடைந்து சமாதி அடைந்ததும் இங்கே தான். ஆயினும் அவர்களில் பதினெண்கீழ் சித்தர்கள் என்று சிறப்பாகக் கூறப்படுபவர்களை பற்றியும் மற்றும் சில சித்த புருஷர்களை பற்றியும் காணலாம்.

**1) சிவவாக்கியர்:**

பிறக்கும்போது சிவ நாமத்தை உச்சரித்துக் கொண்டே பிறந்தவர். இடையறாத சிவ நாம ஜெபத்தால் உடலை தங்கமயமாக ஆக்க முடியும் என்றவர். 4000 ஆண்டுகளுக்கும் மேல் வாழ்ந்த தாக கூறப்படுகிறது. இவருடைய நாடி பரிக்ஷை, சிவ வாக்கியர் 1000 எனும் நூல்கள் பிரசித்தமானவை.

**(33ஆம் பக்கம் பார்க்க)**



சட்டை நாதர்



அகஸ்தியர்



பாம்பாட்டி சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடனைக் களைந்த கண்ணன்

அவர் ஒரு காலத்தில் பெரிய பணக்காரர். சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்ந்தவர். இன்றோ கடன் பிரச்சினைகளால் பெருந் துயரத்தோடு வாழ்பவர். கடன் சுமையோ நாளுக்கு நாள் ஏறி அனைவரும் கைவிட்ட சூழ்நிலை. பார்க்காத சோதிடர் இல்லை; செய்யாத பரிகாரமும் இல்லை.



கடைசியாக என்னிடம் வந்தார். கண்ணீர் விட்டு அழுதார். கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கடன் கொடுத்தவர்களுக்கு துரோகி ஆகி விடுவேனோ? என்று கலங்கினார். அவரின் பரிதாபகரமான நிலையை உணர்ந்த நான், ஸ்ரீமத் பகவத் கீதையிலிருந்து பக்தியோகம் என்ற 12ஆம் அத்தியாயத்தில் ஏழாவது ஸ்லோகத்தை எழுதிக் கொடுத்து, சில முறைகளையும் சொல்லிக் கொடுத்து, பாராயணம் செய்துவிட்டு, 50 நாட்களுக்கு பின் என்னை சந்திக்கக் கூறினேன்.

இரண்டு மாதம் கழித்து என்னை அவர் சந்தித்தபோது, புதிய மனிதராக மாறி இருந்தார். தனது கடன் தீர புதுவழி கிடைத்து விட்டதாகவும், நலிந்து போன தனது தொழிலும், வாழ்வும் புத்தொளி பெற்றதாகக் கூறினார். பக்தியோகத்தின் அந்த ஏழாவது ஸ்லோகம் பின் வருமாறு:

**"தோஷாமஹம் ஸமுத்தர்தா
ம்ருத்யுஸம் ஸாரஸாகராத்!
பவாமி நசிராத் பார்த்த மய்யா
வேணித சேதஸாம்!!**

இதன் பொருள்; "யார் எல்லாக் கருமங்களையும் என்னிடம் அர்ப்பணித்து, என்னையே குறிக்கோளாகக் கொண்டு, மற்றொன்றை நினைக்காத யோகத்தினால் என்னைத் தியானம் செய்து உபாசிக்கிறார்களோ, அவர்களை ஜனன, மரணமாகிய சம்சாரத்திலிருந்து உடனே கரை சேர்த்து விடுவேன்"

அதாவது, கர்ம வினைகளிலிருந்து, பக்தன் தீவிர உபாசனை, முழுமையான பக்தி, எல்லாவற்றையும் இறைவனுக்காக அர்ப்பணித்தல் மூலம் ஆன்ம முன்னேற்றம் அடையலாம்.

இதைத்தான் வராஹ புராணத்தில் "நயாமி பரமம் ஸ்தானம் அர்சிராதி கதிம்வினா கருட ஸ்கந்தம் ஆரோப்ய யதேச்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனிவாரித'' என்று சொல்லப்பட்டுள்ளது.

அதாவது ஆன்மீக முன்னேற்றத்துக்கு அஷ் டாங்க யோகம் பயில வேண்டிய அவசியமில்லை. பக்தியும், இறை விசுவாசம் மட்டுமே போதும். அந்த மனநிலை வரும் போது, தாய்ப்பூனை எவ் வாறு குட்டிப்பூனையைப் பாதுகாக்கிறதோ, அவ் வாறு இறைவனும் நம்மைப் பாதுகாப்பான் என்பது உறுதி. நம் உடல், பொருள், மனம் அனைத்தையும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடம் ஒப்படைத்து சரணாகதி அடைந்து விட்டால், ஸ்ரீ பகவான் சதாசர்வ காலமும் நமக்கு அனுக்கிரகம் அளிப்பார். மேலே கூறப்பட்ட வராஹ புராண ஸ்லோகத்தில் ஸ்ரீ மஹாலட்சுமியின் அருளைப் பெறும் பீஜ மந்திரம் உள்ளீடாக மறைந்துள்ளது.

இதை எப்படி பாராயணம் செய்வது என்றால், பசும் சாணத்தால் பூசி மெழுகப்பட்ட சுத்தமான தனி பூஜையறையில் ஸ்ரீ கிருஷ்ணர் விக்ரகமோ (அ) திருஉருவப்படமோ ஸ்தாபித்து, இளம் துளசி மாலை சாற்றி, அவல் பாயாசம் சிறிது நைவேத்தியம் வைக்க வேண்டும். பின்னர்

**"ஸ்ரீ ருக்மணி ஸத்யபாமா ஸவேத ஸ்ரீ**
**கிருஷ்ண பரமாத்மந:**
**ப்ரஸாதேத குணபாதா நிவ்ருத்திபூவர்வக**
**ஸீக பராப்த்யர்த்தம் ஸ்ரீ மத் பகவத் கீதாஸ்லோக**
**பாராயணம் அஹம் கிரிஸ்யே!"**

என்ற மந்திரத்தை மூன்று முறை சொல்லி சங்கல்பம் செய்ய வேண்டும். பின்னர் முன்பு சொன்ன பகவத்கீதை ஸ்லோகத்தை 1,500 முறை காலையும், மாலையும் (சூரிய அஸ்தமனத்திற்கு பின்) 3000 முறை ஜெபிக்க வேண்டும். இப்படித் தொடர்ந்து 54 நாட்கள் ஜெபிக்க வேண்டும். 1,50,000 தடவைக்கு மேல் உரு ஏற்றப்படும் இந்த ஸ்லோகம் வாழ்வில் வியக்கத்தகு மாற்றங்களை ஏற்படுத்துவதை கண்கூடாகக் காணலாம்.

54 நாட்கள் இந்த பாராயண பூஜையை தொடர்ந்து செய்வதில் சிரமங்களும், பிரச்சினை களும் தோன்றலாம். இறைவனே நம் மனோ தைரியத்தை பரிசோதிக்க இவ்வாறு செய்கிறான் என்பதை உணர்ந்து, பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை பரிபூரணமாக சரணடைந்து, காரியமாற்றினால் வெற்றி நமதே!

இதுபோன்ற 200 ஸ்லோகங்கள் ஸ்ரீ மத் பகவத் கீதையின் 18 அத்தியாயங்களிலும் நிவாரண மருந்துபோல் நிறைந்துள்ளன. அதனை சற்று சிரமப்பட்டு தேடினோமென்றால் அந்த அற்புதமான மாணிக்கக்கல் அனைவருக்கும் கிடைக்கும் என நான் உறுதி கூறுகிறேன்.

**யோகி ஸ்ரீ இராமானந்த குரு,**
செல்: 94424 26434


# தெய்வீக நிவர்த்தி
# ஸ்ரீ ராகவேந்திரர் பிரசன்னம்

உடல், மனம் மற்றும் அனைத்து மனித குல
பிரச்சனைகளுக்கும் நிவர்த்திக்கும்



தொடர்பு கொள்ள
ஆன்மீக அன்னை
**ஸ்ரீ ராணி மாதாஜி**

M 54 / H 73. மல்லிகை நகர்,
ஆனையூர், மதுரை – 625 017.

Phone:04522662573
Cell:9487182077,9842220397

Website: www.sriranimaatha.org E.mail: mathaji@sriranimaatha.org info@sriranimaatha.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு

## ஆனி மாதம்

## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(மிருகசீரிடம் 3,4 பாதங்கள்)**

**(பெயரின் முதல் எழுத்து கா, கி, கு, க, ஞ, ச, கே, கோ, ஹ உள்ளவர்களுக்கும்)**

# உங்களின் வசீகரப் பேச்சால் பிறரை கவரும் மிதுன ராசி நேயர்களே!




துணிந்து செயல்பட்டால் வெற்றி என் பதை உணர்ந்து, அதற்குத்தக்கவாறு திட்டம் தீட்டுவதில் நீங்கள் வல்லவர். உங்கள் பேச்சாற்றலால், புதிய வாய்ப்புகளை கவர்ந்திழுத்துக் கொள்வீர்கள்.

**பெண்களுக்கு:**

இந்த மாதம் உங்கள் ராசி மற்றும் 2ஆம் இடத்தில் உலா வரப்போகும் சுக்ரன் மற்றும் 7ஆம் இடத்தில் இருக்கும் குருவின் அருளால் குடும்பத்தில் சந்தோஷம் கூடும். கணவன் வழி செலவழிக்கும் சூழல் இருப்பதால், வரவுக்கு மீறியே செலவு செய்வீர்கள்.

கணவன் வழி உறவால், அனுகூலம் உண்டு. புதிய பொருட்களின் சேர்க்கையால் இல்லம் பொலிவுடன் விளங்கும்.

சூரியனுடன், புதன் ஜுலை 6ஆம் திகதி வரை உங்கள் ராசியில் இருப்பதாலும், பிறகு புதன் குடும்ப ஸ்தானத்திற்கு செல்வதாலும், சில சமயங்களில் உங்களின் வார்த்தையை மீறி, பிள்ளைகள் சில காரியங்களை செய்யும் வாய்ப்பிருப்பதால், அவர்களின் போக்கிலேயே சென்று நல்வழிப்படுத்துங்கள்.

செவ்வாய் ஜுன் 21ஆம் திகதி வரை 2இல் உள்ள கேதுவுடன் இருப்பதால், சில உடல் உபாதைகள் தோன்றி மறையும். எனவே வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுங்கள். 22ஆம் திகதி முதல் செவ்வாய் 3இல் உள்ள சனியுடன் இருப்பதால் மனை விஷயங்கள் விரைவில் முடிந்து விடும். மந்தகதியில் இருந்த மனை விஷயங்கள் மனம் விரும்பியவாறு துரித கதியில் நடக்கும். ராகு 8-ல் இருப்பதால், சிலர் திடீர் மாற்றங்களால், வெளியூரில் தங்க நேரிடும்.

**மாணவர்களுக்கு:**

இந்த மாதம் புதன் 1,2 ஆகிய இடங்களில் இருப்பதால், கல்வி சம்பந்தமான பொறுப்புகள் சற்று கூடுதலாகும். சூரியனும் உங்கள் ராசியில் இருப்பதால், பாடங்களைப் பயில்வதற்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும். முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்தினால், மதிப்பெண்களை எளிதில் பெற முடியும்.

சுக்ரன் 1ஆம், 2ஆம் இடங்களில் இருப்பதால் நட்பின் பலமும், பயனும் அதிகரிக்கும். அவர்களும் உங்களை ஊக்கப்படுத்துவதில் பெருமை கொள்வார், குரு 7ஆம் இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்ப தால், கையில் பணப் புழக்கம் சீராக இருக்கும். தேவைகளுக்கு உரிய பணம் கிடைப்பதில் சிரமம் ஏதுமிராது. செவ்வாய், ஜூன் 21ஆம் திகதி வரை 2இல் உள்ள கேதுவுடன் இருப்பதால், நண்பர்களிடையே சிறுபூசல்கள் தோன்றி மறையும். ஜூன் 22ஆம் திகதி முதல், செவ்வாய் 3இல் உள்ள சனியோடு அமர்வதால், உயர் கல்விக்கான முயற்சி வெற்றிகரமாக முடியும்.

விரும்பிய துறைக்கான சிறப்புத் தேர்வில், உங்களின் முழுத்திறனும் வெளிப்படும். சிலருக்கு கல்விக்கான முழு உதவித் தொகையும் கிடைக்கும். ராகு 8இல் இருப்பதால், பகற்கனவிற்கு இடம் தராமல், சூழ்நிலையை ஒத்துழைப்புக்கு குறையாதவாறு பார்த்துக் கொண்டால், நிம்மதியாய் படிப்பில் கவனம் செலுத்த இயலும்.

**பணிபுரிபவர்களுக்கு:**

சுக்ரன் 1,2 ஆகிய இடங்களில் உள்ளதால், உங்கள் கலாரசனை சிறந்த முறையில் பரிமளிக்கும். புதிய முயற்சிகள் பாராட்டைக் கொண்டு வரும். சூரியன் உங்கள் ராசியில் இருப்பதாலும், புதன் 1,2 ஆகிய இடங்களில் இருப்பதாலும் உயர் அதிகாரிகளிடம் பொறுமையை இழக்காமல், நிதானமாக உரையாடுங்கள்.

7இல் குரு இருக்கும் பலத்தால், வாழ்க்கைத் துணை மூலம் உங்களின் பொருளாதாரம் உயர்வான நிலையில் அமையும். கடன் தொல்லைகள் குறையும். உயர் பதவிக்கான விண்ணப்பம், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். வெளி வட்டாரப் பழக்கம் மூலம் காரியங்கள் சாதகமாய் முடியும். ஜூன் 21ஆம் திகதி வரை செவ்வாய் 2இல் உள்ள கேதுவோடு இருப்பதால், கடை நிலை ஊழியர் களிடம், கண்டிப்பு கனிவு இரண்டையும் தேவையான அளவு காட்டி வாருங்கள்.

பணிகளை முடிப்பதற்கு இடைஞ்சல் ஏதும் இராது. 22ஆம் திகதி முதல், செவ்வாய் 3-ல் உள்ள சனியோடு அமர்வதால், கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். வெளியூர் பயணங்கள் இனிமையான நினைவுகளை அலசும் விதமாக அமையும். ராகு 8-ல் இருப்பதால், பணம் புழங்கும் இடங்களில் பணி புரிபவர்கள், பேச்சில் அதிக கவனம் செலுத்தாமல், பணவிஷயங்களில் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சுக்ரன் சாதகமாக இருப்பதால், பொது வாழ்வில் உங்களின் தகுதி மேலும் உயரும். உங்களின் அழகும், திறமையும் கூடும். போர்க்கொடி பிடித்து வந்தவர்கள், பணிவோடு நடந்து கொள்வார்கள். வீட்டை அழகு படுத்தும் முயற்சி, எண்ணம் போலவே வண்ணமயமாய் அமையும். சூரியன் உங்கள் ராசியில் இருப்பதால், ஊக்கத்துடன் செயல் பட்டாலும், சில காரியங்கள் இழுபறியாக இருக்கும்.



புதன் 1, 2 ஆகிய இடங்களில் உலா வருவதால், தேவையற்ற விஷயங்களில் தலையிடாமல் இருங்கள். ஜூன் 21ஆம் திகதி வரை செவ்வாய், 2இல் கேதுவுடன் இருப்பதால், வலியச் சென்று உதவி செய் தாலும், உறவுகள் மனம் திறந்து பாராட்டுவதில் சிக்கனமாகவே இருப்பார்கள்.

ஜூன் 22ஆம் திகதியிலிருந்து செவ்வாய் 3-ல் உள்ள சனியோடு இணைவதால், பொது நன்மைக்கான விஷயங்களில் புதிய ஊக்கத் துடன் செயல்படுவீர்கள். ராகு 8இல் இருப்ப தால், நீங்கள் விரும்பி பழகும் சிலர் விலகிச் செல்வர்.

நம்பிக்கை வைத்தவர்கள் ஓசைப்படாமல் ஒதுங்கி விடும் சூழல் உருவாகும். குரு இருக்கும் இடம் சாதகமாய் இருப்பதால், பண வரவு தாராளமாக இருக்கும். குடும்பத்தினர் விரும்பிய ஆபரணங்களை வாங்கி அவர்களை மகிழ்விப்பீர்கள். நீண்ட நாட்களாக தடைப்பட்டி ருந்த சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வாய்ப்பு கனிந்து வருவதால், உற்சாகத்துடன் ஓடியாடி வேலை செய்வீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

சுக்ரனின் அருளால், நூதன புதிய முயற்சிகள் மூலம் வியாபாரம் விருத்தியாகும். பணியாளர்களின் ஒத்துழைப்பு பாராட்டும் விதமாய் இருக்கும். புதிய ஒப்பந்தங்களோடு, லாபமும் உங்களைத் தேடி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றி, உங்கள் நற்பெயரை தக்க வைத்துக் கொள்வீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சந்திக்க நினைத்தவரே உங்களை நாடி வந்து உதவி செய்வார். சூரியன் உங்கள் ராசியில் இருப்பதால், அரசு தொடர்பான ஆவணங்கள், ரசீதுகள் ஆகியவற்றைத் தக்க முறையில் பாதுகாப்பாய் வைத்துக் கொள்ளுங்கள். புதன் 1, 2 ஆகிய இடங்களில் இருப்பதால், கணக்கு விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வாருங்கள்.

ஜுன் 21ஆம் திகதி வரை செவ்வாய் 2இல் கேதுவோடு இருப்பதால், பராமரிப்பு செலவுகள் அதிகமாகும். 22ஆம் திகதி முதல் செவ்வாய் 3இல் உள்ள சனியோடு இணைவதால், வியாபார விரிவாக்கத்திற்காக, புதிய சரக்கு வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

குருவின் பலத்தால் வெளிநாடுகளில் வியாபாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் செயலாக்க வடிவமாய் மாறும், கடல் கடந்து உங்களின் வியாபார எல்லை விரியும்.

பொருளாதார உயர்வு மூலம் பல வசதிகளை அனுபவிப்பீர்கள். ராகு 8-ல் இருப்பதால், அதிகாரத்தில் கட்டுப்பாடாக இருந்தால், ஆரோக்கியமும் உங்களுடன் நல்ல விதத்தில் ஒத்துழைக்கும்.

**கலைஞர்களுக்கு:**

சுக்ரன் பல ஆபரண வகைகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை உங்கள் முன் குவித்து வைப்பார். விதவிதமாக அலங்காரங்கள் செய்துகொண்டு, ரசிகர்களை கவர்ந்து விடுவீர்கள்.

சக கலைஞர்களின் ஆதரவால் நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதனை படைக்கும். பட்டப்பாட்டிற்கான பலன் பாராட்டுகளையும், பரிசுகளையும் கொண்டு வரும்.

சூரியன் உங்கள் ராசியில் இருப்பதால், பொது இடங்களில் காரசாரமான விவாதங்களில் ஈடுபடாதீர்கள். குரு வாழ்வில் பல புதிய திருப்பங்களை உண்டாக்குவார்.

தாராளமான பணப்புழக்கம் தனித் தெம்பை தரும். கண்ணில்பட்ட பொருட்களையெல்லாம் வாங்கி விடுவீர்கள். புதன் இந்த மாதம் 1, 2 இடங்களில் இருப்பதால், வங்கிக் கணக்குகளில் சிக்கல் இல்லாதவாறு, அவ்வப்போது கணக்குகளை சரி பாருங்கள்.

செவ்வாய் ஜுன் 21ஆம் திகதி வரை 2இல் உள்ள கேதுவோடு இருப்பதால், பணியாளர்களிடம் அளவுடன் பழகி வருவது நல்லது. 22ஆம் திகதிக்கு பிறகு செவ்வாய், 3இல் சனியோடு இருப்பதால், தொல்லைத் தந்த விஷமிகள் வாய் மூடிக் கிடப்பார்கள்.

கிடப்பில் இருந்த புதிய திட்டங்கள் மீண்டும்



இறக்கைக் கட்டிக் கொண்டு பறக்கும். ராகு 8-ல் இருப்பதால், நல்லவரைப் போல் நடிப்பவரிடம் எச்சரிக்கையாய் பழகுவது அவசியம்.

**இந்த மாதம் மிதுன ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

20-06-08 மணி 27.13 முதல் 23-06-08 13.36 மணி வரை

## நட்சத்திரப் பலன்கள்:

**மிருகசீரிடம் 3,4 பாதங்கள்:**

உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

**திருவாதிரை 1,2,3,4, பாதங்கள்:**

பிள்ளைகளால் உங்களின் கௌரவம் மேலும் உயரும்.

**புனர்பூசம் 1,2,3 பாதங்கள்:**

மறைமுக எதிரிகளை வெல்வீர்கள்.

**பரிகாரங்கள்:**

ஞாயிற்றுக்கிழமைகளில் கதிரவனை வலம் வந்து வணங்கி வாருங்கள். விரும்பிய வண்ணம் விருப்பங்களை நிறைவேற்றுவார். புதன் கிழமைதோறும் புதனை ஆராதனை செய்து வர, புதிய திருப்பங்களைத் தந்தருள்வார். ராகு, கேதுவிற்குரிய பாடல்களை பாடி வாருங்கள். நல்லவை உங்களை நாடி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி தடை ஏதும் இல்லை – வெற்றி நிச்சயம்



## பார்வையாளர்களை சந்திக்கும் நேரம்

**தினசரி காலை 11 மணி முதல்**
**தினசரி மதியம் 2 மணி வரை**
**பிரதி செவ்வாய் விடுமுறை**



## முன் அனுமதி பெற்று வருதல் அவசியம்

ஸ்ரீ தேவதை யட்சிணிகளிடம் நேரடியாக கேட்டு உங்களின் எத்தகைய பிரச்சினைகளும் முற்றிலும் தீர்க்கப்படும். மேலும் பிரசன்ன ஜோதிடத்தின் மூலம் உங்கள் வருங்கால வாழ்க்கைப் பலன்கள் துல்லியமாக கூறப்படும்.



தொழில், வியாபார பிரச்சினைகள் குடும்பம், கணவன் மனைவி சிக்கல்கள், தீராத நோய்கள், தீயசக்தி பாதிப்புகள் கல்வி உத்யோகம் வெளிநாடு சென்றிடவும், அரசியல், சினிமா இவற்றில் வெற்றி அடைய அதர்வண வேதம், திருமந்திரம் ஆகியவைகளின் வழி சிறப்பு பரிகார ஹோமங்கள் செய்து பூரண நிவாரணம் தரப்படும்.

**வீடுகளை இடிக்காமல் இந்திய, சீன வாஸ்த்துப்படி சரியான பரிகாரம் செய்து தரப்படும்**

ஜனவசியம், பணவசியம், தரும் மஹாமேரு மற்றும் ரசமணிகள், ரசவிக்ரகங்கள், ஸ்ரீசக்ரம், சுதர்சன, ஸ்ரீகணபதி, வாஸ்து நவக்கிரக, மஹாலஷ்மி, குபேர, ப்ரதியங்கரா, பைரவ, தன்வந்திரி ஆகிய அனைத்து வித யந்திரங்கள் பூஜை செய்து தரப்படும்

**5000 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்துபோன அரிய நவபாஷான மருந்து மீண்டும் உலகிலேயே முதல் முறையாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டு சகல நோய்களும் தீர்க்கப்படுகிறது.**



குருஜியுடன் இத்தாலி நாட்டு பக்தர்

**குபேர, சர்வகாரிய சரஸ்வதி அஞ்சனங்கள் உட்பட அனைத்துவிதமான அஞ்சனங்களும் முறைப்படி பூஜை செய்து தரப்படும்.**

மேலும் உங்கள் வாழ்க்கை பிரச்சினைகளுக்கு தபால் வழியில் தீர்வு கூறப்படும். அதற்கு உங்கள் பிரச்சினைகளை தெளிவாக எழுதி, சுயவிலாசமிட்ட கவர் உடன் SRI



குருஜியுடன் அமெரிக்கா நாட்டு பக்தர்

# ஸ்ரீ இராமன் ஜோதிட நிலையம்

**யோகி ஸ்ரீ இராமானந்த குரு**

விழுப்புரம் மெயின் ரோடு, காடகனூர் அஞ்சல் - 605 755, திருக்கோவிலூர் Tk., விழுப்புரம் Dist, தமிழ்நாடு, இந்தியா. செல்: 94424 26434, 97904 14806, 99764 59986

e-mail: venkatmscec@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனிவர்கள் அருளிய நாடி சோதிடம்



### நாடி சோதிடம் என்றால் என்ன?

இந்தியாவின் தமிழ்நாட்டில் பழங்காலம் தொட்டு நடைமுறையில் உள்ள ஒரு வகையான சோதிடம் தான் நாடி சோதிடமாகும். மனிதர்களின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் குறித்த நம்பிக்கையைப் பற்றி அடிப்படையாகக் கொண்டு, பழங்காலத்தில் முனிவர்கள், பனை ஓலைகளில் பலன்களை எழுதியுள்ளனர்.

இந்து மத நம்பிக்கைகளின்படி, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ஒட்டு மொத்த உலகத்தின், கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றி அறியக்கூடிய ஆற்றலை, சில முனிவர்கள் பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. அவ்வாறு ஆற்றல் படைத்த முனிவர்கள், இந்த பூமியில் வசித்தவர்கள், வசிக்ககூடியவர்களின் எதிர்காலம் பற்றி பனை ஓலைகளில் குறிப்புகளாக எழுதியுள்ளனர்.

தமிழின் பண்டைய வடிவமான வட்டெழுத்துக்களில், இந்தக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பனை ஓலைச்சுவடிகளை எழுதியவர்கள் யார் என்பது பற்றி முழுமையாகத் தெரியவில்லை. பல்வேறு காலகட்டங்களில் பலர் இந்த ஓலைச்சுவடிகளை எழுதியிருக்கலாம் என கருதப்படுகிறது. அகஸ்தியர், பிருகு, கவுசிகர், வியாசர், காகபுஜந்தர், வால்மீகி மற்றும் வசிட்டர் ஆகிய முனிவர்கள், இந்த ஓலைச்சுவடிகளை எழுதியதாக கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் வைத்தீஸ்வரன் கோயிலைச் சுற்றியுள்ள புகழ் பெற்ற சோதிடர்களால், நாடி சோதிடம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நாடி சோதிடத்திற்கான மூல ஆதாரங்களை கண்டுபிடிக்க வேண்டுமெனில் 2000 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். இந்த ஓலைச்சுவடிகள், தமிழகத்தின் தஞ்சாவூரில் உள்ள புகழ்பெற்ற சரஸ்வதி மகால் நூலகத்தில் தொடக்கத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது.

ஓலைச்சுவடிகள் மீது மிகுந்த ஆர்வம் காட்டிய பிரித்தானிய ஆட்சியாளர்கள், அதிலிருந்து மூலிகைகள், மருந்துகள் மற்றும் எதிர்காலம் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான ஓலைச்சுவடிகளை தங்களின் விசுவாசிகளுக்கு அளித்து விட்டனர். அதில் பல ஓலைச்சுவடிகள் அழிக்கப்பட்டு விட்டன. எஞ்சியவை, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஏலம் விடப்பட்டன.

இந்த ஓலைச்சுவடிகளை, வைத்தீஸ்வரன் கோயில் சோதிடர்களின் குடும்பங்கள் சேகரித்து அவற்றை தங்களின் உடமையாக்கிக் கொண்டுள்ளன. இந்த நாடி சோதிடத்தை பரம்பரை, பரம்பரையாக சில குடும்பங்கள் செய்து வருகின்றன. உயிரோடு இருப்பவர்கள் அல்லது இறந்தவர்கள் என அனைத்து மக்களுக்கும் பலன்களை தெரிவிக்கும் இந்த சோதிடத்தில் கூறப்படும் தகவல்கள் அனைத்தும் உண்மையல்ல என சில சோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சில எதிர்கால பலன்கள் மட்டும், இந்த ஓலைச்சுவடிகளில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருப்பதாக நாடி சோதிடர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களும், எதிர்கால பலன்களும் ஒரு சிலருக்கு மிகச்சரியாக நாடி சோதிடத்தில் பொருந்துவதாகவும் கூறப்படுகிறது. நாடி சோதிட பலன்கள் பாடல் வடிவில் தமிழில் எழுதப்பட்டுள்ளதால், அவற்றை படித்துப் பார்த்து சோதிடர்கள் நமக்குரிய பலன்களைத் தெரிவிக்கின்றனர். அதே நேரத்தில், தமிழ் பாடல்களில் புலமை பெற்றிருந்தால், சோதிடர்களின் உதவியின்றி ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ளவற்றை எளிதில் நாமே படித்து தெரிந்து கொள்ளலாம்.

கடந்த காலத்தைப் பற்றி நாடி சோதிடம் தெரிவிக்கும் தகவல்கள் சரியாக இருப்பதாக சோதிடர்கள் தெரிவிக்கின்றனர். அதே நேரத்தில், எதிர்காலத்தைப் பற்றி தெரிவிக்கும் பலன்கள், அந்த அளவிற்கு சரியாக இருப்பதில்லை' என்றும் கூறப்படுகிறது. ஒரு சிலருக்குத் தான் கடந்த காலம் மற்றும் எதிர் காலம் பற்றி, நாடி சோதிடர்கள் தெரிவிக்கும் பலன்கள் மிகச்சரியாக பொருந்துகின்றன.

சில நாடி சோதிடர்கள், இறைவன் (அல்லது கண்ணுக்கு தெரியாத ஆவி) தங்களது காதில் தெரிவிக்கும் தகவல்களின் மூலம் ஓலைச் சுவடிகளைப் பார்த்து பலன்களை சொல்வதாக தெரிவிக்கின்றனர். ஆனால், இது முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பொதுவாக, நாடி சோதிடர்கள் பலன்கள் சொல்வதற்காக, ஆண்களின் வலது கைரேகையையும், பெண்களின் இடது கைரேகையையும் கேட்பது வழக்கம். அதன் அடிப்படையில், பொருத்தமான ஓலைச் சுவடிகளை அவர்கள் தேடிக் கண்டுபிடிப்பர்.

இறுதியில், ஒரு சில ஓலைச்சுவடி கட்டுகளைக் கொண்டு வருவர். ஒவ்வொரு ஓலைச்சுவடியிலும், சிலருக்கான பலன்கள் இருக்கும். அவர்களின் பிறப்பு, உறவு சம்பந்தப்பட்ட தகவல்கள் அதில் இடம் பெற்றிருக்கும். பலன் கேட்பவரிடம், நாடி சோதிடர் தொடர்ச்சியாக பல்வேறு கேள்விகளைக் கேட்பார். அதன் அடிப்படையில், பொருத்தமான ஓலைச் சுவடியை அவர் கண்டுபிடிப்பர். இத்தகைய கேள்விகளுக்கு ஆம் அல்லது இல்லை என்று பதிலளிக்க வேண்டும். நாடி சோதிடர் கேட்கும் கேள்விகள் அனைத்திற்கும் 'ஆம்' என தொடர்ச்சியாக பதில் அளித்தால், அவர் வைத்திருக்கும் ஓலைச்சுவடி, பலன் கேட்பவருக்கு உரியது எனத் தீர்மானிக்கப் படுகிறது. இவ்வாறு சரியான ஓலைச் சுவடியைக் கண்டுபிடித்தால், அதில் பலன் கேட்பவரின் பெயர், பெற்றோர்களின் பெயர், மனைவியின் பெயர் மற்றும் அவரின் எதிர்காலம் பற்றிய பிற பலன்கள் இடம் பெற்றிருப்பதாகக் கூறுகிறார்கள். ஓலைச் சுவடியின் முதல் காண்டத்தில் (முதல் பகுதி),



பலன் கேட்பவரைப்பற்றி, பொதுவான தகவல்கள் இடம் பெற்றிருக்கும். திருமணம், தொழில் போன்ற ஒவ்வொன்றுக்கும் ஒரு காண்டம் உள்ளது.

**முதல் காண்டம்:**

ஜாதகத்தின் 12 ராசிகளின் அடிப்படையில், பலன் கேட்பவரின் பொதுவான வாழ்க்கை, வயது போன்ற தகவல்கள் இடம் பெற்றிருக்கும். எஞ்சியுள்ள 11 காண்டங்களின் பலன்கள் சுருக்கமாக இதில் கொடுக்கப்பட்டிருக்கும்.

**இரண்டாவது காண்டம்:**

இந்தக் காண்டத்தில் குடும்பம், வாழ்க்கை, கண்கள், பணம், உள்ளுணர்வு பற்றி விளக்கப்படும்.

**மூன்றாவது காண்டம்:**

இக்காண்டத்தில் சகோதரர்கள், சகோதரிகள், பலன் கேட்பவருக்கும், அவர்களுக்கும் உள்ள உறவு நிலை குறித்து விளக்கப்படும்.

**நான்காவது காண்டம்:**

இதில் தாய் மற்றும் வீடு, நிலம், வாகன வசதிகள் குறித்த பலன்கள் இடம் பெற்றிருக்கும்.

**ஐந்தாவது காண்டம்:**

குழந்தைப்பேறு, பிறப்புக்காலம், குழந்தை எப்போது பிறக்கும், குழந்தை இல்லாமைக்குக் காரணம், குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை குறித்த பலன்கள் இடம் பெற்றிருக்கும்.

**ஆறாவது காண்டம்:**

நோய், கடன், வழக்குகள் போன்றவற்றால் சந்திக்க வேண்டிய துயரங்கள் குறித்த பலன்கள் இடம் பெற்றிருக்கும்

**ஏழாவது காண்டம்:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் மற்றும் திருமண வாழ்க்கையின் நிலை குறித்த பலன்கள் இடம் பெற்றிருக்கும். வருங்கால மனைவியின் பெயர், ஜாதகம், திருமண வயது, மனைவியின் குணநலன்கள் குறித்த குறிப்புகள் தெரிவிக்கப்படும்.

**எட்டாவது காண்டம்:**

இந்தக் காண்டத்தில் ஆயுள் குறித்த பலன்கள் பற்றி தெரிவிக்கப்படும். விபத்துக்கள் மற்றும் அபாயங்கள் எப்போது ஏற்படும் என்பது பற்றி தெரிவிக்கப்படும்.

**ஒன்பதாவது காண்டம்:**

தந்தை, வசதி வாய்ப்புகள், புனித இடங்களுக்கு செல்வது குறித்த தகவல்கள், அதிர்ஷ்டம், குரு மற்றும் சாமியார்களின் போதனையால் கிடைக்கும் நன்மைகள், சமூக உதவி மற்றும் சமூக வாழ்க்கை குறித்த பலன்கள் தெரிவிக்கப்படும்.

**பத்தாவது காண்டம்:**

படிப்பு, வேலை, தொழில், வியாபாரம், தொழில் ஏற்றம் மற்றும் இறக்கம், எதிர்கால வளர்ச்சி மற்றும் வசதி, வேலையிழப்பு அல்லது தொழிலில் நஷ்டம் போன்ற பலன்கள் இடம் பெற்றிருக்கும்.



**பதினோராவது காண்டம்:**

இரண்டாவது அல்லது மூன்றாவது திருமணம், வியாபாரத்தில் லாபம் உள்ளிட்ட பலன்கள்.

**பன்னிரெண்டாவது காண்டம் :**

செலவுகள், வெளி நாட்டு சுற்றுப்பயணம், அடுத்த பிறப்பு மற்றும் துறவறம் குறித்த பலன்கள் பற்றித் தெரிவிக்கப் படும்.

### காண்டங்கள்

**13. சாந்தி பரிகாரம்:**

கடந்த கால வாழ்க்கை அல்லது பிறப்பு, பாவங்கள் மற்றும் புண்ணியங்கள் குறித்த பலன்கள் தெரிவிக்கப்படும். இதற்குப் பரிகாரமாக செய்ய வேண்டிய சடங்குகள் என்ன என்பது பற்றிய பலன்கள் குறித்தும் விளக்கப்படும்.

**14. ரக்ஷ காண்டம்:**

பொறாமை பிடித்த சக்திகளால் ஏற்படும் தீமைகளிலிருந்து, நம்மை நாமே காத்துக் கொள்வதற்கான மந்திர ரக்ஷாவை உருவாக்குவதற்கான முறைகள் குறித்து தெரிவிக்கப்படும். ஒருவர் மேற்கொள்ளும் செயல்களுக்கு ஏற்ப, சிறப்பான பலன்கள் கிடைப்பதை ரக்ஷா உறுதிப்படுத்துகிறது.

**15. ஔடத காண்டம்:**

மருந்துகள், நோய்களிலிருந்து குணமாக உட்கொள்ள வேண்டிய சிகிச்சைகள் மற்றும் மருந்துகள் குறித்து விளக்கப்படும். தொடக்கத்தில் முதல் காண்டம் குறித்து மட்டும், பலன் கேட்பவரிடம் தெரிவிக்கப்படும். பின்னர், திருமணம், தொழில், உடல்நலம் போன்ற குறிப்பிட்ட சில பலன்கள் வேண்டுமெனில், அது குறித்து வாசிக்கப்படும். எதிர்காலத்தில் துயரங்கள் நிகழாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய சடங்குகள் குறித்தும் பலன் கேட்பவருக்கு தெரிவிக்கப்படும்.

நாடி சோதிட நிபுணர்கள், நாடி சோதிடம் மிகவும் சக்திவாய்ந்தது என்றும், சரியாக இருக்கும் என்றும் நம்புகின்றனர். இதில், கணிப்புகள் எதுவும் இல்லை. பனை ஓலையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதைப் படித்துத் தெரிவிக்கும் பணி தான் மேற்கொள்ளப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். நாடி சோதிடர்களைப் பொறுத்தவரை, பிற சோதிடர்கள் போன்று சரியாக பலன்கள் சொல்வதற்கு சிறப்பான புலமை இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நடப்பவற்றை சொல்லும் நாடி சோதிடம்

நடப்பவற்றை முன் கூட்டியே சொல்லும் கலையான சோதிடத்தில் நாடி சோதிடமும் ஒரு வகை யாகும். இந்த சோதிடத்தில் பெரும்பாலான நேரங்களில், சோதிடம் கேட்பவரின் பெயர் சரியாக சொல்லப்படுவதாக கூறப்படுகிறது. இதில் துரதிஷ்டம் என்னவெனில், நாடி சோதிடத்தில் பயன்படுத்தப்படும் தொழில் சூத்திரங்கள், சோதிடம் பார்ப்பவரின் வாரிசுகள் மற்றும் இரத்த சம்பந்தமான உறவுகளைத் தவிர்த்து, பிறருக்கு கற்றுத் தரப்படுவதில்லை.

ஏனெனில், தவறான நபர்களிடம் நாடி சோதிடத்தின் ரகசியங்கள் சிக்கினால், தவறான காரியங்களுக்கு பயன்படுத்தப்படும் என்ற அச்சமே இதற்கு காரணமாகும். அதனால் தான், இதன் தொழில் சூத்திரங்கள், மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

சுயநலம் அல்லது பேராசையும் இதற்கு மற்றொரு காரணமாகும். ஆனால், இத்தொழிலின் சூத்திரங்களை, தகுதியான சிலருக்கு கற்றுக் கொடுக்க முன்வந்தால், அதன் மூலம், நாடி சோதிடத்தின் பலனை பெற விரும்புபவர்கள் உண்மையிலேயே பலனடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்





தலைப்பு அனைவருக்கும் தெரிந்ததுதான். சூர்ப்பனகை லெட்சுமணனால் மூக்கறுக்கப்பட்டது முன் ஜென்ம வினைப்பயன் என்பது பலருக்கும் தெரியாத செய்தி. எனவே, அவர்கள் முன் ஜென்ம வரலாற்றுச் சம்பவத்திற்குச் செல்வோம்.

சத்திய விரதன் என்ற ஒரு அரசன் சங்கசூடணன் என்ற ஒரே ஒரு ஆண் மகனைப் பெற்றுத் திகழ்ந் தான். ஆனந்த குரு என்ற ஆச்சாரியாரிடம், அக்கால வழக்கப்படி கல்வி கற்க (குருகுலம்) சங்கசூடணன் அனுப்பப்பட்டான். அவனுடன் தனவந்தர்கள் பலரின் புதல்வர்களும் அந்த ஆச்சாரி யாரிடம் கற்று வந்தனர். அக்குருவின் மகள் சுமுகி என்பவளும் அந்த மாணாக்கர்களுடன் தன் தந்தையிடம் கல்வி கற்று வந்தாள்.

சுமுகி வயது வந்த பின்... தன் தந்தையின் கட்டளைப்படி வீட்டிற்குள்ளே தனியாக கல்வி கற்க ஆரம்பித்தாள். சுமுகிக்கு சங்கசூடணன் மீது கொள்ளை ஆசை. அவள் தனிமைப்படுத்தப்பட்ட வுடன் அவன் மீது இன்னும் ஆசை அதிகமாகியது. ஒருநாள் சங்கசூடணனுக்கு ஒரு பாடத்தில் சந்தேகம். மாலை முடிந்த பின் கல்விக்கூடத்தி லிருந்து தன் குருநாதர் வீட்டிற்குச் சென்று, அவரி டம் சந்தேகம் தெளிவுபெற சென்றான். அவன் சென்ற வேளையில் குருவானவர் அருகிலுள்ள சிவன் கோவிலுக்கு அர்த்த சாம பூஜைக்காகச் சென்றிருந்தார். தனித்து இருந்த சுமுகி... சங்கசூடணின் வருகையைப் பார்த்து மகிழ்ந்து, அவனை வரவேற்று உபசரித்தாள். அவளது வார்த்தைகள் தடம் புரண்டது. சங்கசூடணன் அவளுக்கு புத்திமதி பலவாறு சொன்னான்.

ஒரு குருவின் மகள் தனக்கு சகோதரி முறை யாகும் என்று எடுத்துச் சொன்னான். சுமுகி அவனது வார்த்தைகளை காதில் போட்டுக் கொள் ளாமல் அவனது கையைப் பிடித்து இழுத்தாள்.

வெகுண்டு எழுந்த சங்கசூடணன், 'இப்பிறவி யில் மட்டுமல்ல, அடுத்த பிறவியிலும் நீதான் என் உடன்பிறப்பு' என்று சொல்லிவிட்டு, குருநாதர் குடிலை விட்டு ஓடி வந்து விட்டான். சுமுகியின் ஆசை நிறைவேறாததால், சினம் கொண்டாள். தலைவிரி கோலத்தில் அழுது கொண்டு இருந்தாள்.

கோயிலில் இருந்து திரும்பி வந்த தந்தையிடம், சங்கசூடணனைப் பற்றி உண்மைக்கு மாறாக பழித்தும், தன்னை மானபங்கப்படுத்த எத்தனித் தான் என்றும் சொன்னாள்.

குருநாதரும் மன்னன் சத்திய விரதனை உடன் சந்தித்து தன் மகள் கூறிய விஷயத்தைச் சொல்ல... அம்மன்னனும் தன் மகனை எதும் விசாரிக்காமல் சங்கசூடணனை வரவழைத்து மாறுகால் மாறு கை வாங்கி விட்டான்.

ஒரு கையும், ஒரு காலும் வெட்டப்பட்ட நிலையில் பூமியில் புரண்டு வலியால் துடிதுடித்துக் கொண்டிருந்த சங்கசூடணன், 'தெய்வமே! சத்தியமும், நேர்மையும் செத்துவிட்டதா? என்ன கொடுமை இது?' என்று தரையில்... இருந்த ஒரே கையால் ஓங்கி அடித்தான். பூமி பிளந்தது. ஆதிசேஷன் அவன் கண்களுக்கு புலப்பட்டான்.

''சங்கசூடணனே, நீ சத்தியவான். உனக்கு சுமுகியால் உன் உறுப்புகள் போய்விட்டதுபோல் அடுத்த பிறவியில் நானே அவளது உடலுறுப்பை அறுப்பேன்'' என்று சொல்லி ஆதிசேஷன் சங்கசூடணனை தேற்றினார்.

அந்த சத்தியம் தவறாத சங்கசூடணனே, அடுத்த பிறவியில் ராவணனின் சகோதரனான விபீஷணனாய்ப் பிறந்தான். சங்கசூடணன் சொன்ன மாதிரியே சுமுகி அவனுக்கு உடன் பிறப்பாய் சூர்ப்பனகையாய் பிறந்தாள். ஆதிசேஷனின் வார்த்தைப்படியே.. ஆதிசேஷனே ஸ்ரீராமனின் தம்பியான... அதாவது லெட்சுமணனாக அவதரித்து... சூர்ப்பனகை (முன் ஜென்ம சுமுகி)யின் மூக்கை அறுக்க வேண்டிய சந்தர்ப்பமும், சம்பவமும் நடந்தேறின.

எந்த வினைக்கு நல்லதோ கெட்டதோ, அதற்கு எதிர்வினை பலனாக இச்ஜென்மத்தில் இல்லை யென்றாலும், மறு ஜென்மத்தில் உண்டு என்பது சத்தியம். அதற்கேற்றவாறு கிரக அமைவுகள் ஜாதகத்தில் சம்பந்தப்பட்டவருக்கு அமைவதும் உண்மை.

அருள்வாக்கு ஜோதிடம், ஜோதிட திலகம்

**ஆர்.எஸ். சுந்தரானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதாரி ஆண்டு

ஆனி மாதம்

[15.06.08 முதல் 15.07.08 வரை]

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம் 1,2,3,4 பாதங்கள், ஆயில்யம் 1,2,3,4 பாதங்கள்

பெயரின் முதல் எழுத்து ஹி-ஹீ-ஹே-ஹோ-ட-டி-டு-டே-டோ ஆகியவற்றை முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும்)

## தயாள குணம் கொண்ட கடக ராசி நேயர்களே!

உள்ள கேதுவுடனும், பிறகு 2ஆம் இடமான குடும்ப ஸ்தானத்திலுள்ள சனியோடு இருப்பதால், நெருக்கடியான சூழலிலும், புன்னகையையே பதிலாக தந்து வாருங்கள். குடும்ப ஒற்றுமை குலையாமல் இருக்கும்.

ஜூலை 7ஆம் திகதி முதல் புதன் 12இல் உள்ள சூரியனோடு அமர்வதால், அவசர முடிவுகளைத் தவிர்த்து, தகுந்த ஆலோசனையுடன் செயல்பட்டு வாருங்கள். குரு 6லிருப்பதால், பண விஷயங் களில், வாக்குறுதிகள் கொடுக்காமல் இருப்பது நல்லது.

ராகு ஸப்தம ஸ்தானத்தில் இருப்பதால், வாழ்க்கைத் துணைவரின் உடல் நலத்தில் தனிக்கவனம் செலுத்தி வந்தால், மருத்துவச் செலவுகள் குறையும்.




உங்களின் முழு முயற்சியுடன், நம்பிக்கையையும் சேர்த்துக் கொண்டு செயலாற்றும் வேளை இது! எதற்கும் கலங்காது, கருமமே கண்ணாக இருந்தால் நினைத்த செயல் வெற்றி கரமாய் முடியும். உங்களின் மனத் தைரியம் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

**பெண்களுக்கு:**

இந்த மாதம் சுக்ரன் சுப பலன்களைத் தரும் 12ஆம் இடத்திலும், உங்கள் ராசியிலும் இருப்பதால், மனம் விரும்பும் ஆடை ஆபரண வகைகளை அணிந்து மகிழ்வீர்கள். செவ்வாய், ஜுன் 21ஆம் திகதி வரை உங்களின் ராசியில்

**மாணவர்களுக்கு:**

சுக்ரனின் பலத்தால், விலையுயர்ந்த ஆடை வகைகளை அணிந்து, பொலிவுடன் திகழ்வீர்கள். ஜூலை 6ஆம் திகதி வரை புதன் 11ஆம் இடத்தில் இருப்பதால், நண்பர்களின் மத்தியில் உங்களின் புகழ் பெருகும். நட்புடன் மகிழ்வாக நேரம் செலவழிப்பீர்கள்.

7ஆம் திகதி முதல் 12இல் உள்ள சூரியனோடு புதன் இருப்பதால், மாதத் தேர்வுகளை, அலட்சியமாக எண்ணாமல், ஆழ்ந்த கவனத்து டன் எழுதுவது அவசியம்.

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை உங்கள் ராசியில் உள்ள கேதுவோடு இருப்பதால், காரசார மான உணவு, பேச்சு ஆகிய இரண்டையும் தவிர்த்தல் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் 22ஆம் திகதி முதல் செவ்வாய், சனியோடு 2இல் இருப்பதால், உங்களின் வாகனங்களை இரவலாகத் தருவதை குறைத்துக் கொண்டால், வீண் செலவு கள் எட்டிப் பாராது. குரு 6இல் இருப்பதால், பணத்தினை பத்திரமாக வையுங்கள்.

7இல் ராகு இருப்பதால், சிலர் கல்வி தொடர்பாக மலைப்பாங்கான இடங்களுக்கு பயணங்கள் மேற்கொள் வார் கள்.



**பணியில் இருப்பவர்களுக்கு:**

12, 1 ஆகிய இடங்களில் சுக்ரன் இருப்பதால், கேளிக்கை, விழாக்கள், வினோத விளையாட்டுகள் ஆகிய வற்றில் பங்கேற்று, பல பரிசுகளையும் பெற்று களிப்படைவீர்கள், ஜூலை 6ஆம் திகதி வரை புதன் 11ஆம் இடத்தில் இருப்பதால், உங்களின் கருத்துக்கும், பேச்சுக்கும் உரிய மதிப்பினை அளிப்பார்கள்.

7ஆம் திகதி முதல், புதன் 12இல் உள்ள சூரியனோடு இணைவதால், பணி நேரங்களில் வெளியில் செல்வதைத் தவிர்த்தால், அதிகாரி களின் கெடுபிடிக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ளலாம்.

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை உங்கள் ராசியில் உள்ள கேதுவோடு சஞ்சரிப்பதால், இயந்திரங்களை இயக்குபவர் கள், தகுந்த பாதுகாப்புடன் பணியில் ஈடுபடுவது நலம்.

22ஆம் திகதி முதல் 2இல் உள்ள சனியோடு செவ்வாய் இணைவதால், பேச்சு வார்த்தைகளில் இனிமை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

குரு 6இல் இருப்பதால் தேவையற்ற விஷயங் களில் ஈடுபடாமல், பணியில் மட்டும் கவனம் செலுத்தி வாருங்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சுக்ரனின் சகாயத்தால், பெண்களின் ஆதரவு கூடும். மூத்த பெண் தலைவர்களின் ஆலோ சனையும் தகுந்த சமயத்தில் வழிகாட்டியாய் விளங்கும்.

ஜூலை 6ஆம் திகதி வரை புதன் 11ஆம் இடத்தில் இருப்பதால், பொதுக் கூட்டங்கள், விவாதங்கள் ஆகியவற்றில் உங்களின் பங் கேற்பு ஆக்கபூர்வமாக இருக்கும்.

7ஆம் திகதி முதல் 12இல் உள்ள சூரிய னோடு புதன் இருப்பதால், சில இடங்களில், நிலைமைக் கேற்றவாறு சாதூர்யமாக பேசி சமாளிக்க வேண்டியிருக்கும்.

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை உங்கள் ராசியில் உள்ள கேதுவோடு சஞ்சரிப்பதால், அந்நிய மனிதர்களிடம், அளவோடு பழகுவது அவசியம்.

ஜூன் 22 முதல் சனியோடு 2ஆம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், குடும்ப அமைதிக்கு பங்கம் நேராதவாறு திட்டமிட்ட பணிகளை முடித்துக் கொள்வதில் உறுதியாக இருங்கள்.

அமைதியான சூழலில் அநேக பணிகளை முடிக்க முடியும். குரு 6இல் இருப்பதால், பெருந் தொகையைக் கையாளும்போது, பாரபட்சமின்றி நடந்து கொண்டால், உங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏதும் நேராது.

**வியாபாரிகளுக்கு:**

சாதகமான சுக்ரனால், ஆபரண வகைகள், கலைப்பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றில் இலாபம் கொழிக்கும். வியாபார விரிவாக்கம் நல்ல விதமாக அமையும்.

ஜூலை 6ஆம் திகதி வரை புதன் 11ஆம் இடத்தில் இருப்பதால், வங்கிகளின் மூலம் தேவையான உதவிகள் கிடைக்கும். புதன் 7ஆம் திகதி முதல் 12இல் உள்ள சூரியனோடு சஞ்சரிப் பதால், பங்குதாரரிடையே சிறு சலசலப்பு தோன்றி மறையும்.

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை ராசி யிலுள்ள கேதுவோடு இருப்பதால் நம்பிக்கைக் குரிய சில பணியாட்கள் நிறுவனத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகிச் செல்லும் சூழல் உண்டாகும். செவ்வாய், ஜூன் 22 முதல் சனியோடு இருப்பதால், வாகன பராமரிப்பிற்கென்று சில்லறைச் செலவுகள் செய்ய நேரிடும்.

வாகனங்களுக்குரிய காப்பீடு முதலியவைகளை உரிய கெடுவுக்குள் செலுத்தி விட்டால், தண்டம் கட்ட வேண்டியிராது. ராகு 7இல் இருப்பதால், பங்குதாரர்களை அரவணைத்துச் செல்லுங்கள்.

குரு 6இல் இருப்பதால், நிறுவனம் தொடர்பான ஆவணங்களை, பத்திரப் படுத்துவது நல்லது.

**கலைஞர்களுக்கு:**

சுக்ரனின் தயவால் புதிய வாய்ப்புகளும் வரும். அவற்றின் மூலம் உங்களின் திறமையும் பிரகாசிக்கும். ஜூலை 6ஆம் திகதி வரை புதன் 11ஆம் இடத்தில் இருப்பதால், சக கலைஞர்களின் ஒத்துழைப்பு மூலம் புதிய முயற்சிகள் வெற்றிகரமாய் முடியும்.

7ஆம் திகதி முதல் 12இல் உள்ள சூரியனோடு புதன் இருப்பதால், சிலர் வாக்கு கொடுத்துவிட்டு, சங்கடப்பட நேரிடும். எனவே நிதானமான செயல்பாடு சாலச் சிறந்தது.

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை ராசியில் உள்ள கேதுவோடு இருப்பதால், நிகழ்ச்சிகளுக்கு எடுத்துச் செல்லும் ஆபரணங்கள் மற்றும் பொருட்கள் மீதும் உங்களின் கவனம் இருந்தால் பதற்றமின்றி செயல்பட முடியும்.

ஜூன் 22ஆம் திகதியிலிருந்து செவ்வாய் 2இல் உள்ள சனியோடு சேர்வதால், மின்சாதனப் பொருட்களை கவனமாக கையாளுங்கள்.

ராகு 7இல் இருப்பதால், இணக்கமாக, இதமாக நடந்து கொண்டால், குடும்பத்தில் அமைதி நிலவும். குரு இருக்கும் இடம் 6.

யாரை நம்பியும் பணம் கொடுக்காமலிருந்தால், நஷ்டங்களும், கஷ்டங்களும் உங்கள் அருகே வராது. மன உளைச்சல், சந்தேகம், குழப்பம் ஆகியவை வராதவாறு, பொறுமையுடனும், திறமையுடனும் செயல்பட்டு வந்தால், திறமைக்குரிய பாராட்டு கிடைக்கும்.

**இந்த மாத கடக ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

15.06.2008 மணி 26.40 முதல் 18.06.2008 மணி 15.16 வரை. ஜூலை 13.07.2008 காலை 09.10 மணி முதல் 15.06.2008 மணி 21.46 வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**புனர்பூசம் 4ஆம் பாதம் :**



ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகப்படுத்துங்கள். கடன் தொல்லைகள் குறையும். கொடுக்கல், வாங்கலில் அளவான முதலீடு செய்து வர, நஷ்டம் என்ற நெருக்கடி தோன்றாது.

**பூசம் 1, 2, 3, 4, பாதங்கள்:**

முயன்றால் முடியாததில்லை என்பதை உணர்ந்து, முழு மூச்சாக செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். அண்டை அயலாரிடம், தராதரமறிந்து பழகி வந்தால், அநாவசியத் தொந்தரவுகள் அருகே வாராது.

**ஆயில்யம் 1, 2, 3, 4 பாதங்கள்:**

''யாதும் ஊரே, யாவரும் கேளீர்'' என்பதை நடைமுறைப்படுத்தி வாருங்கள். எல்லா காரியங்களும் கைகூடி வரும். எதிரிகளின் கொட்டம் அடங்கும்.

**பரிகாரங்கள்:**

குரு பகவானின் தரிசனம் சிக்கலை நீக்கி சந்தோஷத்தை நல்கும். செவ்வாய்க்கிழமைகளில், முருகனை வேண்டி வந்தால், செவ்வாய் பகவான் செம்மையான பலன்களை மனமுவந்து தருவார். ஆதவன் வழிபாடு ஆதாயம் நல்கும் வழியைக் காட்டும். சனிக்கிழமைகளில் சர்ப்பக்கிரகங் களான ராகு, கேதுவை முறைப்படி வணங்கி னால், நலமே கூடும். சனியால் சஞ்சலம் எழாதிருக்க, அம்பாளின் பாதத்தை சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள். கனிவுடன் விரும்பியதை நல்குவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19ஆம் பக்கத் தொடர்ச்சி..)

**2) கயிலை கம்பிளி சட்டமுனி:**

இவர் ரோம் நகரிலிருந்து வந்தவர். இவருக்கு ரோமரிஷி என்ற பெயரும் உண்டு. அஷ்டமா சித்திகளை பெற்றிருந்தார். ரோமரிஷி வைத்தியம் ஆயிரம், நாகாரூடம் என்பன இவர் எழுதிய நூல்களில் சில.

**3) மகா போக முனிவர்:**

சீனத்தில் பிறந்தவர். எல்லா மஹா மந்திரங்களையும் மிக இளம் வயதிலேயே அறிந்து கொண்டவர். நவ பாஷாணங்களால் பழனியில் முருகன் சிலை வடித்தவர். இரஸவாதம், ககன வித்தை (ஆகாயத்தில் பறப்பது) அறிந்தவர். சீனமக்களுக்கு ஆகாயக் கப்பல், பறக்கும் இயந்திரம் செய்து தந்தவர். இவரின் முக்கிய நூல்கள் போகர் வைத்தியம் ஆயிரம், போகர் பன்றெண்டாயிரம் என்பன.

**4) காக புஜண்டர்:**

தமிழகத்தில் திருச்சி நகரினைச் சேர்ந்தவர். காகத்தின் வடிவெடுத்துக் கொள்பவர். இவர் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர். ஆதி சித்தர் என்றழைக்கப்பட்டார். ''ஆதியென்ற சித்தருக்கும் ஆதியானேன்'' என்று அவரே தன்னைப்பற்றி கூறியுள்ளார். எதிர்ப்படும் மனிதர்களிடம் அவர்களின் பிறவி, எத்தனையாவது பிறவி என்று கண்டுரைப்பதில் வல்லவர். வசிஷ்டருக்கு, இந்த அண்டத்தில் எட்டாவது பிறவி என்று உணர்த்தியவர். காக புஜண்ட ஞானம், காக்கா காவியம் 33 என்பன இவரின் நூல்கள்.

**5) புலிப்பாணி சித்தர்:**

சீனத்தில் பிறந்தவர். போக முனிவரின் சீடர். போகர் பழனியில் நவபாஷாண முருகன் சிலை வடிவமைத்தபோது, அவருக்கு தேவையான அபூர்வ மூலிகைகளைக் கொண்டு வருவதும், சிலை அமைக்கும் பணியில் உதவியதும், போகரின் கட்டளை ஏற்று அவருக்குப்பின் அந்நவபாஷாணச் சிலையை போஷிக்கும் பணியைச் செய்தவர் புலிப்பாணிச் சித்தராவார். இவருடைய பிரபலமான நூல்கள் புலிப்பாணி ஜாலம் 325, புலிப்பாணி வைத்தியம் 500 என்பன.

**6) சட்டை முனிச் சித்தர்:**

இலங்கையில் பிறந்து தமிழகத்திற்கு வந்தார். போகரை ஒரு கோவிலில் கண்டு ஞானசூரியனாய் தகிக்கும் அவரின் ஒளிவட்டத்தில், தானும் ஐக்கியமாக வேண்டி, தன் குடும்பத்தை துறந்து போகரின் சீடரானவர். எளிமையான சொற்களால் பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் அவர் எழுதிய நூல்கள், சட்டை முனி கற்பம் நூறு. சட்டை முனி நிகண்டு 1200.

**7) அகப்பேய் சித்தர்:**

ஒரு நெசவாளராகப் பிறந்தவர். வியாசரை குருவாகப் பாவித்தவர். ஜோதி மரத்தின் அடியில் அமர்ந்து யோக சாதனை புரிந்தவர். அகப்பேய் என்று முடியும் பாடல்களால், அகப்பேய் பூரண ஞானம் 15, அகப்பேய் சித்தர் பாடல் 90 ஆகிய நூல்களை படைத்தவர்.

**8) அழுகணிச் சித்தர்:**

இவ்வுலகின் போக வாழ்வைத் துறந்து உடனே ஞான மார்க்கத்தில் செல்ல உபதேசித்தார். அரிய வகை மூலிகைகளை கண்டுபிடித்து, மக்களின் நோய்களை தீர்த்தவர். அழுகணி, தொழுகணி என்ற அபூர்வ மூலிகைகளால் அற்புதங்களை நிகழ்த்தியதால் அழுகணிச் சித்தர் எனப்பெயர் பெற்றார். அழுகணி வைத்தியம், அழுகணி யோகம் என்ற நூல்களை படைத்துள்ளார்.

**9) குதம்பைச் சித்தர்:**

குதம்பைச் சித்தரின் தாய் தன் அழகிய மகனின் காதுகளில் குதம்பை எனும் அணிகலனை அணிவித்து அழகு பார்த்ததால் அவர் இப்பெயர் பெற்றார். அவருடைய பதினாறாவது வயதில் ஞானி ஒருவர், தன்னை அறியும் வித்தையை குதம்பை சித்தருக்கு உபதேசிக்க, அத்தோடு பந்தங்களைத் துறந்து ஞான வழியில் சென்றார். பரப்பிரம்ம, ஜீவாத்மா பற்றி மிக எளிய நடையில் எழுதியுள்ளார். குதம்பை ஞான சூத்ரம் பதினெட்டு, குதம்பை சித்தர் பாடல்கள் இவர் படைப்புகள்.

- தொடரும்


சிவவாக்கியர்


குதம்பை சித்தர்


போகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Diploma in **Computerized Accounting**

## ACC Pac + Quick Book + M.Y.O.B + Tally

***Full Time ( 9.00 am - 5.00 pm )***
Monday - Friday : 1 week
Saturday- Sunday : 2 weeks
Sunday Only : 4 weeks

**Evening Batch ( 6.00 pm - 8.pm )**
Monday - Friday : 3 weeks
Saturday- Sunday : 4 weeks

Course Fee : ~~14750~~/=
Full Time : 1 week

Offer Fee
**2500/=**

## Dip. in Software Technology

- Computer Systems
- Computer Hardware & Networking
- Programming ( Vb 6.0 / Java / C++)
- Database Management System
- **Project**

**Duration : 3 Months** **Course Fee : 19000/=**

Offer Fee
**9500/=**

## Diploma in English

- Grammar
- English Literature
- Linquistic Studies
- Project Writing & Team Work
- Listening & Conversation
- Translation

Duration : 4 Months
Course Fee : 19000/=

Offer Fee
**9500/=**

## Dip. in Information Technology

Computer Systems
Web Publishing
Programming
Web Database Systems
Structured Query Language
Essentials of E-Commerce
Operation Systems

Duration : 8 Months

Offer Fee
**28000/=**

## Diploma in Multimedia

Maya
3D Studio Max
Adobe Premier
Adobe Photoshop CS2
Flash MX
Dream weaver
Animation Techniques

Duration : 6 Months
Course Fee : 39000/=

Offer Fee
**11500/=**

## Computer Hardware Engineering

Assembling
Repairing
Trouble Shooting
Partion & Formatting
System Diagnostics
Installation
Networking

Duration : 2 Weeks
Course Fee : 12000/=

Offer Fee
**2000/=**

## Diploma in MOBILE PHONE Repairing

Offer
**4700/=**

Hardware & Software
Software Installation & unlocking
All Types of Mobile Phones
Troubleshooting & Maintenance
Replace IC & Spares
Hot air gun / Soldering / Flashing
Repairing (Ribbon Types Phone)

- Full & Unlimited Practical
- Free Diagram CD
- Free Internet

**Full Time : 2 Weeks**
**Mon. to Friday : 5.30pm to 8.30pm**
**Saturday Only - 6 weeks.**
**Sunday Only - 6 weeks.**

## Auto CAD 2006

**2D & 3D Modeling**
**Final Project**

**Course fee : 13400/=**
**Duration : 2 Months**

Offer Fee
**6700/=**

College of
**iCM** ®
Info computing & management




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடக்கலைத் துறையில் புதிய பரிமாணம்

## Why Study @ *i*CM :

- Highly qualified & experienced Panel of Lectures
- Individual Computer & Air-condition class Rooms
- Flexible Time Table
- Well Designed Course Structure
- Dual Qualifications
- Industrial Training with Basic Salary

## மற்றும்

UK & வெளிவிவகார அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ்
குறுகிய காலத்தில் 100% தொழிற்திறன் பயிற்சி
மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்ட பாடநெறி

**New Intakes on June / July**



## Certificate in Quantity Surveying

Duration : 5 Months

## Diploma in Quantity Surveying

Duration : 12 Months

## Certificate in Construction Technology & Building Studies

Duration : 5 Months

Our Recognitions :

ACU National
Australian Catholic University
Brisbane Sydney Canberra Ballarat Melbourne

City & Guilds

**6, Ramakrishna Terrace**
**Ramakrishna Road ,**
**Wellawatte. Colombo -06.**
**Tel : 011-2580603 / 0779 329252**
**www.icmstudy.com**

College of
*i*CM®
Info computing & management




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு

## ஆனி மாதம்

## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(மகம் 1,2,3,4 பாதங்கள், பூரம் 1,2,3,4 பாதங்கள், உத்திரம் 1ஆம் பாதம்)**

(பெயரின் முதல் எழுத்து ம,மீ,மு,மே, மோ,ட,டி,டு,டே உடையவர்களுக்கும்)

**எதிலும் தனித்து விளங்க வேண்டும் என்று செயல்படும் சிம்ம ராசி நேயர்களே!**

அருள் பாலிப்பதால், தொட்ட காரியம் யாவும் துலங்கும். பேச்சில் கம்பீரம் கூடும்.

சுக்ரனும் நற்பலன்களை நல்கும் 11, 12 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கிறார். புதிய உறவுகள், புதிய நட்பு என்று பெருமிதமாய் வளைய வரப்போகிறீர்கள். இந்த மாதம் நவக்கிரக நாயகனாம் சூரியனும் 11-ல் இருப்பதால், இது வரை தொந்தரவு தந்த நோய்கள், உபாதைகள் யாவும் நீங்கி, ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

புதன் பகவானும் தன் பங்குக்கு உரிய நன்மையைத் தரும் 10-ம் இடத்தில், ஜூன் 7-ம் திகதி வரை சஞ்சரிப்பதால், பிள்ளைகளின் முன்னேற்றம் உங்களுக்கு சாதகமாக அமையும். ஜூன் 8 முதல் 11-ல் உள்ள சூரியனோடு புதன் இணைவதால், இழுபறியான வேலைகள் சடுதியில் முடிந்து விடும்.




கலகலப்புடன் பணியாற்றி காரியங்களை கச்சிதமாக முடிக்கும் தருணம் இது! சுப காரியங்கள் உங்களின் சந்தோஷத்தையும் பரபரப்பையும் அதிகமாக்கும். நிலம் சம்பந்தப்பட்ட வேலைகள் சாதகமாக நடைபெறும்.

**பெண்களுக்கு:**

இந்த மாதம், மங்களங்களைத் தரும் குரு பகவான், வள்ளலாக நற்பலன்களை வாரித் தரும் 5ஆம் இடத்தில் வீற்றிருக்கிறார். சுபநிகழ்ச்சி, விருந்து, சந்தோஷம் என்று திகைக்க வைத்திடுவார். உங்கள் ராசியில் சனி இருப்பதால், சிறிய விஷயங்களையும் சிரத்தையுடன் செய்து வந்தால், சிறப்பான பலன் கிடைக்கும். ராகு பகவானும் அவர் பங்குக்கு ஆறில் அமர்ந்து

செவ்வாய், ஜூன் 21ஆம் திகதி வரை 11இல் இருப்பதால், வீடு கட்டும் பணிக்கான திட்டங்கள் சீரிய முறையில் நடக்கும். ஜூன் 22 முதல் செவ்வாய், 12இல் உள்ள கேதுவோடு இணைவதால், சற்று அலைச்சல் அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு:**

இந்த மாதம் குரு சாதகமாக இருப்பதால், உங்களின் பேச்சில் உற்சாகம் கூடும். கணனி தொடர்பான பாடம் பயில்பவர்களுக்கு, பூரிப்பான செய்திகள் கிடைக்கும். சுக்ரனின் சகாயத்தால் நட்பு வட்டம் மேலும் விரிவாகும்.

இதுவரை உங்களை எதிரியாய் எண்ணியவர்கள், இணக்கமாக நடந்து கொள்வார்கள். பொழுதுபோக்கு, உல்லாசம் என்று அனுபவித்து மகிழ்வீர்கள். ராகு 6இல் உள்ளதால், உங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் காலமிது. படித்து முடித்த சிலருக்கு உயர்ந்த பதவி தேடி வரும். 11இல் உள்ள சூரியனோடு செவ்வாயும் புதனும் இணைந்திருப்பதால், தேர்வுகளின் முடிவுகள் தித்திப்பைத் தரும். ஆசிரியர்களின் உதவி மற்றும் வழிகாட்டுதல் மூலம் ஆசைப் பட்ட பாடம் கிடைக்கும்.

இனி எழுதும் தேர்வுகளும் எளிதாகவே இருக்கும். இந்த மாதம் சனி உங்கள் ராசியில் இருப்பதால், சிலர் உயர்கல்வியின் பொருட்டு வெளியூர் செல்வர். அவ்வப்போது சளி தொந்தரவுகள் தோன்றி மறையும். ஜூன் 22ஆம் திகதி முதல் செவ்வாய் 12இல் உள்ள கேது வோடு இணைவதால், உங்களின் வாகனங் களைப் பராமரிப்பதில் அலட்சியம் காட்டாமல் இருந்தால், வீண் செலவுகள் குறை யும். வெளியூர் பயணங்களின் போது பிறரு டன் உணவு, மற்றும் தின்பண்டங்களின் பரிமாற் றங்களைத் தவிர்த்து விடுங்கள்.

**பணிபுரிபவர்களுக்கு:**

குரு 5இல் இருப்பதால், மேலதிகாரிகளின் பாராட்டு மழையில் நனைந்து மகிழ்வீர்கள். உங்களின் ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் பிறரை இணைக்கும் பாலமாக இருக்கும். உங்கள் ராசியில் சனி அமர்ந்திருப்பதால், சற்றே பொறுப்புகள் அதிகரிக்கும்.

ராகு 6இல் இருப்பதால், இதுவரை கிடப்பில் போடப்பட்டு, மன உளைச்சலைத் தந்த வழக்கு கள் சாதகமாக முடியும். வராமலிருந்த சம்பள பாக்கியும் வந்துவிடும். சுக்ரனின் பலத்தால், பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். விரும்பிய பொருட்களை வாங்கும் வாய்ப்பு பெருகும். உங்கள் ராசிநாதனான சூரியன் 11ஆம் இடத்தில் இருப்பதால், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் புதிய சலுகைகளைப் பெறுவார்கள்.

ஜூன் 8 முதல் புதன் சூரியனோடு இருப்பதால், உயர்மட்டக்குழு ஆகியவற்றில் உங்களின் சொல்லாற்றல், பிறரைக் கவர்ந்தி ழுக்கும். ஜூன் 21 வரை செவ்வாயும் 11இல் சஞ்சரிப்பதால், பொறியாளர்கள் மற்றும் கட்டுமானத் துறையில் உள்ளவர்களின் ஆற்றல் மேலும் மெருகு பெறும். ஜூன் 22 முதல் செவ்வாய் 12இல் உள்ள கேதுவோடு சஞ்சரிப்பதால், மின் துறைகளில் பணிபுரிபவர் கள், மின் உபகரணங்களை கவனமாகப் பயன் படுத்துவது நல்லது.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

குருவின் அருளால், பிள்ளைகளிடத்தில் பாசத்தைப் பொழிவீர்கள். சுக்ரன், பெண்கள் மூலம் பல சகாயங்களைத் தந்திடுவார். பெண் கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள் வார்கள். புதன் இந்த மாதம் நல்ல நிலையில் இருப்பதால், அரசாங்க காரியங்கள் சுமுகமாக முடியும்.

பிரச்சினைக்குரிய தீர்வுகளையும் தீர்க்கமாக எடுப்பீர்கள். உடனிருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். சனி உங்கள் ராசியில் இருப்பதால், சுறுசுறுப்பாக நடந்த சில பணிகளில் தேக்க நிலை உருவாகும்.

சூரியன் 11இல் இருப்பதால், பாராட்டுப் பத்திரங்கள் பாங்காய் கிடைக்கும். ராகு பகவான் 6இல் இருப்பதால், இதுவரை கொட்ட மடித்த எதிரிகள், இருந்த இடம் தெரியாமல் மறைந்து கொள்வார்கள்.

பயமுறுத்தி வந்த சில விஷயங்கள், பஞ்சாய் பறந்துவிடும். புதன் ஜூன் 7ஆம் திகதி வரை 10இல் இருப்பதால், கணக்கு வழக்குகள் லாபத் தைத் தரும்.

ஜூன் 8 முதல், புதன் 11ஆம் இடம் செல்வதாலும், செவ்வாய் ஜூன் 21 வரை 11இல் இருப்பதாலும், இரட்டை நாயனம் போல் இருவரும் நற்பலன்களை இரட்டிப்பாக்கு வார்கள். ஜூன் 22 முதல் செவ்வாய் 12இல் உள்ள கேதுவோடு சேர்வதால், பணியாளர்களி டம் நயமாக நடந்து கொள்ளுங்கள்.

**வியாபாரிகளுக்கு:**

எதிர்பார்த்ததைவிட அதிக லாபத்தை குரு வின் கடாட்சம் தரும். விரிவாக்கம், வாடிக்கை யாளர் தேவை என்று தேனீ போல் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருப்பீர்கள். தேடிச் சென்று சரக்கு தந்தநிலை மாறி, நாடி வந்து பெற்றுக் கொள்ளும் அளவுக்கு நிலைமை உயரும்.

சுக்ரனின் அனுக்கிரகத்தால், வாடிக்கையா ளர்களிடமிருந்து நற்சான்றிதழ் வந்த வண்ணம் இருக்கும். சூரியன் உங்கள் ராசியில் இருப்ப தால், உஷ்ணம் சம்பந்தமான உபாதைகள் அவ்வப்போது தலைகாட்டும். எனவே குளிர்ச்சி தரும் பானங்களும், உணவு வகைகளும் உணவுப் பட்டியலில் அவசியம் இருக்கட்டும்.

சூரியன் 11இல் இருப்பதால், அரசின் ஆதரவு உறுதுணையாக இருக்கும். புதன், ஜூன் 7ஆம் திகதி வரை 10-ல் இருப்பதால், அசையாத சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். ஜூன் 8 முதல், புதன் 11ஆம் இடம் செல்வ தாலும், செவ்வாயும் ஜூன் 21 வரை 11இல் இருப்பதாலும், பொருட்காட்சிகள் மூலம் சரக்குகள் யாவும் விற்றுத் தீர்ந்துவிடும்.

ஜூன் 22 முதல் செவ்வாய் 12இல் உள்ள கேதுவோடு சேர்வதால், பணிபுரிபவர்களின் உடல் நலம் பாதிப்பு ஏற்படாதவாறு, பணியில் தகுந்த மாற்றங்கள் மேற்கொள்ளுங்கள்.

**கலைஞர்களுக்கு:**

குரு புதிய வீடு மற்றும் வாகனம் வாங்கும் பாக்கியத்தை தந்தருள்வார். வீட்டை அழகு படுத்தும் பணியில் முனைப்புடன் செயல்பட, சுக்ரன் துணையாய் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன விளக்குகள், கலைப் பொருட்கள் என்று இல்லம் புதுப் பொலிவுடன் இருக்கும். சந்தோஷமாக அலுத்துக் கொள்ளும் அளவுக்கு வாய்ப்புகள் கிட்டும்.

சனி உங்கள் ராசியில் இருப்பதால் ஓய்வின்றி அங்கும் இங்கும் சுற்றித் திரியும்படி சில பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

ராகு 6இல் இருப்பதால், இது வரை கனவாக இருந்த ஆசைகள் நனவாகும். உங்களின் பெயரை தக்க வைத்துக் கொள்வதற்காக உழைத்த உழைப்பின் பலனை பூரணமாக அடைவீர்கள்.

புதன், ஜூன் 7ஆம் திகதி வரை 10இல் இருப்பதால், வசதிக்கேற்ப வாழ்வின் தரமும், வருமானமும் உயரும்.

ஜூன் 8 முதல், புதன் 11ஆம் இடம் செல்வதாலும், செவ்வாயும் ஜூன் 21 வரை 11இல் உள்ள சூரியனோடு இருப்பதாலும் வெளி நாட்டுப் பயணங்கள் இனிமையாக அமையும்.

புதிய கலைகளைப் பயிலும் வாய்ப்புகள் கிடைக்கும். ஜூன் 22 முதல் செவ்வாய் 12இல் உள்ள கேதுவோடு சேர்வதால், சகோதர வழி உறவுகள் சற்றே விலகிச் செல்லும்.

**இந்த மாதம் சிம்ம ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

25.06.2008 மணி 21.30 முதல் 27.06.2008 26.10 மணி வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**மகம் 1,2,3,4 பாதங்கள்:**

செய்தி, போக்குவரத்துத் துறைகளில் இருப்பவர்களின் திறமை, பிறரின் கவனத்தை ஈர்க்கும் விதமாகத் திகழும்.

வெளி வட்டாரப் பழக்கம் மூலம் புதிய வாய்ப்புகள் மற்றும் ஒப்பந்தங்கள் கிடைக்கும். தீட்டும் திட்டங்கள் விரும்பிய பலனைத் தரும்.

**பூரம் 1,2,3,4 பாதங்கள்:**

குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும். மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக் கிறது. பணவரவு சரளமாக இருக்கும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:**

விலகிச் சென்ற பலர், மீண்டும் உறவுகளை புதுப்பித்துக் கொள்வார்கள். அரசு வகை காரியங்கள் தடையின்றி நிறைவேறும். பிரபலங் களின் நட்பு கிடைக்கும்.

**பரிகாரங்கள்:**

செவ்வாய், சனி, கேது ஆகிய மூவரையும் துதித்து வாருங்கள். ஏமாற்றங்கள் என்ற நிலை மாறி, நல்ல மாற்றங்கள் உண்டாகும்.

விலாங்கு மீனாய் வழுக்கிச் சென்ற வாய்ப்பு, வாசலில் நிற்க, மூவரும் அருள்வார்கள். வாட்டங்கள் விலகி, வளம் பல பெருகும்.

# தில்லுமுல்லு திருவாதிரை

தில்லுமுல்லு திருவாதிரை என்று பலரும் சொல்வதைக் கேட்டிருப் பீர்கள் இதனை இப்படி சொல்லக் கூடாது! திருவாதிரையில் பிறந்தவர்களுக்கு தில்லுமுல்லு தெரியாது என்று தான் சொல்ல வேண்டும்! திருவாதிரை ஈஸ்வரனின் நட்சத்திரம், அதாவது ஈஸ்வரன் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர். அதனால் தான் சிவன் கோயில்களில் திருவாதிரை நட்சத்திரத்தன்று 'ஆருத்ரா தரிசனம்' என்ற வழிபாடு நடக்கிறது.



ஈஸ்வரனை எண்ணி தவம் செய்தவர்களுக்கு, கேட்கும் வரங்களை கொடுத்தவர் தான் ஈஸ்வரன். இருமுறை ஒரு அசுரன் சிவனை நோக்கி தவமிருந்தான். சிவன் அவன் முன்னே தோன்றி, அவன் கேட்ட வரத்தை கொடுத்தார். அவன்கேட்ட வரம் - நான் எவர் மீதும் கை வைத்தாலும் அவன் எரிந்துவிட வேண்டும். சிவன் வரத்தைக் கொடுத்த வுடன், அதனை பரி சோதித்துப் பார்க்க, சிவன் தலை மீதே கை வைக்க வந்தான் அசுரன். அவருக்கு தில்லுமுல்லு தெரிந்திருந்தால், இந்த வரத்தை கொடுத்திருப்பாரா? மகாவிஷ்ணு மோகினி அவதார மெடுத்து வந்து அந்த சமயத்தில் ஈஸ்வரனைக் காப்பாற்றி, அந்த அசுரன் தன் கையை தன் தலை மீதே வைத்து பஸ்பமாக செய்தார். ஆத லால் திருவாதிரையில் பிறந்தவர்களுக்கு தில்லு முல்லு தெரியாது என்று தான் சொல்ல வேண்டும்.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் திருவாதிரையில் பிறந் தவர். அவரை உங்க நட்சத்திரம் என்ன என்று கேட்டால், - ஆருத்ரா - என்று தான் சொல்வார். திருவாதிரை என்று சொன்னால், எங்கே தன்னை தில்லுமுல்லு திருவாதிரை என்று சொல்லி விடுவார்களோ என்று 'ஆருத்ரா' என்று தான் சொல்வார். ஒரு நட்சத்திரத்தில் பிறந்து விட்டால் மட்டும் ஒருவரை நல்லவர் என்றோ, கெட்டவர் என்றோ கூற முடியாது. கூறவும் கூடாது.

ஜோதிஷ சித்தாந்த வித்தகர்
- கிருபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு
## ஆனி மாதம்
## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(உத்திரம் 2,3,4 பாதங்கள், ஹஸ்தம் 1,2,3,4 பாதங்கள், சித்திரை 1,2 பாதங்கள்**

**பெயரின் முதல் எழுத்து டோ-பா-பி-பூ- ஷ- ண-டா-பே-போ உடையவர்களுக்கும்)**

## எந்த விஷயத்தையும் பக்குவமாக செய்யும் கன்னி ராசி நேயர்களே!




நம்பிக்கையுடன் செயல்படும் குணம், வெற்றிக்கு வழி வகுக்கும். நல்ல உள்ளங்களின் ஆதரவும், ஆசியும் உங்களுக்கு கவசமாய் விளங்கும்.

**பெண்களுக்கு:**

இந்த மாதம் 11இல் உள்ள கேது சிறந்த பலன்களைத் தருவார். உறவினர் இடையே உங்களின் மதிப்பு உயரும். ஜூன் 21ஆம் திகதி வரை அவருடன் சஞ்சரிக்கும் செவ்வாய் உங்களின் வாழ்விற்கு இனிமையைச் சேர்ப்பார்.

ஜூன் 22 முதல் செவ்வாய் 12இல் உள்ள சனியோடு இணைவதால், குடும்பத்தில் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே கோப தாபங்களைக் குறைத்து, பொறுமையாய் இருங்கள்.

குரு 4இல் இருப்பதால், உடலில் சில அசௌகரியங்கள் தோன்றி மறையும். தகுந்த மருந்துகளை உட்கொண்டால், ஆரோக்கியம் ஓரளவுக்கு நன்றாக இருக்கும். ராகு 5இல் இருப்பதால், ஆன்மீகப் பணிக்கென்று அதிக நேரம் ஒதுக்கி வைப்பீர்கள்.

குல தெய்வ வழிபாடு, வளமான வாய்ப்புகளை உருவாக்கித் தரும். புதன் - ஜூலை 6ஆம் திகதி வரை 9ஆம் இடத்தில் இருப்பதால், அக்கம் பக்கத்தாரின் விஷயங்களில், அளவாகப் பழகுவது நல்லது.

அதன் பிறகு 10இல் உள்ள சூரியனோடு புதன் இணைவதால், குடும்பத்துடன் சுற்றுலா சென்று மகிழும் வாய்ப்பு கிட்டும். அதன் பிறகு சுக்ரன் 11ஆம் இடம் செல்வதால், கணவரின் முழுமையான அன்பைப் பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு:**

கேதுவின் அருளால், ஆசிரியர்கள் தரும் ஊக்கம், புதிய உத்வேகத்தை அளிக்கும். ஜூன் 21ஆம் திகதி வரை அவருடன் சஞ்சரிக்கும் செவ்வாயும் தன் பங்குக்கு, புதிய நட்புகளை அறிமுகப்படுத்துவார்.

ஜூன் 22 முதல் செவ்வாய், 12இல் உள்ள சனியோடு சேர்வதால், முக்கியமான பாடங்களை கவனமாகப் படித்து வாருங்கள். 4இல் குரு உள்ளதால், ஏனோதானோவென்று பணிகளைச் செய்யாமல், தகுந்த திட்டப்படி செய்தால், குழப்பங்கள் தீரும்.

ராகு 5இல் இருப்பதால், உங்களை நாடி வருபவர்களின் இயல்பை அறிந்து உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால், நற்பெயருக்கு எந்த சேதமும் ஏற் படாது.

புதன் ஜூலை 6ஆம் திகதி வரை 9ஆம் இடத்தில் இருப்பதால், கவனத் தடுமாற்றம், மறதி ஆகியவை உங்களை அலைக்கழிக்கும். ஜூலை 7ஆம் திகதி முதல் 10இல் இருப்பதால், வெளிவட்டாரப் பழக்கங்களில் தராதரமறிந்து பழகி வந்தால், வீண் சங்கடங்கள் உங்களை அண்டாது. ஜூலை 8 முதல் சுக்ரன் 11ஆம் இடம் செல்வதால் புதிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள்.

**பணியில் இருப்பவர்களுக்கு:**

கேதுவால் கலகலப்பான சூழலில் பணி புரிவீர்கள். செவ்வாயும் ஜூன் 21 வரை 11இல் இருப்பதால், உயர்மட்டத்தில் உங்களின் சொல்வாக்கும், செல்வாக்கும் பெருகும். அதன்



பிறகு செவ்வாய் 12இல் உள்ள சனியுடன் அமர்வதால், சில எதிர்ப்புகளை சமாளிக்கும் சூழல் உருவாகும்.

குரு 4இல் உள்ளதால், பணி தொடர்பான கோப்புகளை, சேகரிப்பதில் அதிக நேரம் செலவு செய்வீர்கள். ராகு 5இல் இருப்பதால், பதற்றத்தைத் தூண்டும் சூழலிலும் நிதானமாக செயல்பட்டால், உங்களின் புகழ் மேலும் பெருகும்.

புதன் ஜூலை 6ஆம் திகதி வரை 9ஆம் இடத்தில் இருப்பதால், கொடுக்கல்-வாங்கல் ஆகியவற்றில் நாணயம், நாநயம் ஆகிய இரண்டையும் மேற்கொள்ளுங்கள்.

ஜூலை 7வரை சுக்ரன் 10-ல் இருப்பதால், வீண் அபராதங்களுக்கு இடமளிக்காதவாறு உறுதியாய் இருப்பது சாலச்சிறந்தது. அதன் பிறகு சுக்ரன் 11ஆம் இடம் செல்கிறார். பெண் ஊழியர்களின் ஆதரவால் பணிகள் விரைவில் முடியும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

செவ்வாய் ஜூன் 21ஆம் திகதி வரை 11இல் உள்ள கேதுவோடு இருப்பதால் உடனிருப்பவர்களின் ஆதரவு மேலும் பெருகும்.

வழக்குகள் தொடர்பாக அலைச்சல், மன உளைச்சல் ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ராகு 5இல் இருப்பதால், பூர்வீகச்சொத்து சம்பந்தமாக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

புதன் ஜூலை 6ம்- திகதி வரை 9-ம் இடத்தில் இருப்பதால், நெருக்கமான நட்பில் சிறு விரி சல்கள் ஏற்படக்கூடும்.

அதன் பிறகு புதன் தசம கேந்திரத்தில் உள்ள ஆதவனோடு சஞ்சாரம் செய்வதால், அரசு வட் டார பழக்கங்கள் மூலம் காரியங் கள் பலிதமாகும்.

உயர்ந்த மனிதர்களின் ஆதரவும் அனுசரணையாகவே இருக்கும். ஜூலை 7 வரை சுக்ரன் 10இல் இருப்பதால், புதியவர் களை நம்பி பொறுப்புக்களை தராதிருப்பது நல்லது.

ஜூலை 7இற்குப் பிறகு சுக்ரனின் பலத்தால், சந்தோஷத் திற்கு உகந்த வாய்ப்புகள் வரும். இனிய அனுபவங்களை பெற்று மகிழ்வதோடு நெருக்கமானவர்களின் பிரியமும் உங்களை உற்சாகப்படுத்தும்.

**வியாபாரிகளுக்கு:**

ஜூன் 21ஆம் திகதி வரை கேதுவோடு செவ்வாய் 11இல் இருப்பதால், தொழிலுக்குத் தேவையான தொகை, வங்கி மூலம் கிடைக்கப் பெறும். தேவையற்ற செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

பங்குதாரர்கள் உங்களின் எண்ணத்திற்கு உறுதுணையாய் இருப்பதுடன், செயலாற்றவும் உதவிக்கரம் நீட்டுவார்கள். ஜூன் 22 முதல் சனியுடன் செவ்வாய் இணைவதால், நம்பிக்கை வைத்தவர்களில் சிலர் ஏமாற்றங்களைத் தருவார்கள்.

குரு 4இல் இருப்பதால், தேவைக்கேற்ற சரக்குகளை மட்டும் கொள்முதல் செய்தால், லாபத்திற்கு குந்தகம் ஏதுமிராது. ராகு பஞ்சம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தானத்தில் இருப்பதால், சலுகைகளை வழங்குவதில் பாரபட்சமின்றி நடந்து கொண்டால், புதிய ஒப்பந்தங்கள் உங்கள் வசமாகும்.

புதன் ஜூலை 6ஆம் திகதி வரை 9ஆம் இடத்தில் இருப்பதால், நயமான பேச்சின் மூலமே வியாபாரம் சிறக்கும் என்பதை உணர்ந்து செயலாற்றுங்கள். அதன் பிறகு புதன் 10இல் உள்ள சூரியனோடு பயணம் செய்வதால், கை தவறிய வாய்ப்புகள், கனிந்து வரும் காலமிது.

ஆதாயத்தைப் பெருக்கும் முயற்சிக்கு தகுந்த பலன் இருக்கும். சுக்ரன் ஜூலை 7 வரை 10இல் இருப்பதால், நிறுவனத்திற்குத் தேவையான கருவிகளை முறையான பராமரிப்பை மேற்கொண்டால், பணிகளுக்கு எந்த இடையூறும் நேராது. 7ஆம் திகதிக்குப் பிறகு சுக்ரன் சாதகமான சூழலையும், நட்பையும் உருவாக்குவார்.

**கலைஞர்களுக்கு:**

ஜூன் 21ஆம் திகதி வரை கேதுவோடு செவ்வாய் இருப்பதால், இதுவரை இருந்த மறைமுக எதிர்ப்புகள் விலகி விடும். இணக்கமான சூழலில் பணி புரிவதால், மறைந்து கிடந்த ஆற்றல்கள் வெளிப்படுவதுடன், பாராட்டுகளும் பெற்று மகிழ்வீர்கள்.

ஜூன் 22 முதல் செவ்வாய் சனியுடன் அமர்வதால், உங்களால் நன்மை அடைந்தவர்களே, குறைகளை அள்ளி வீசுவார்கள். மௌனமாய் இருத்தலே சிறந்த வழியாகும்.

குரு இருக்கும் இடம் சாதகமான நிலையில் இல்லை என்பதால், பண விஷயங்களில் வாக்குறுதிகளை தவிர்த்தல் மிக்க நன்று.

ராகு 5இல் இருப்பதால், சக கலைஞர்களின் குறைகளை பெரிதுபடுத்தாமல் இங்கிதமாக நடந்து கொண்டால், கூட்டு முயற்சி சிறப்பாக அமையும்.

புதன் ஜூலை 6ஆம் திகதி வரை 9ஆம் இடத்தில் இருப்பதால், தகுந்த ஆலோசனைகளுக்குப்பின் முக்கியமான முடிவுகளை எடுத்தால், நஷ்டம் ஏதும் வராது.

ஆறாம் திகதிக்குப் பிறகு, புதன் சூரியனுடன் பயணம் செய்வதால், உறவினர்களிடம் இருந்த பகை விலகும். விலகியவர்கள், விரும்பி வருவார்கள். 10, 11 ஆகிய இடங்களில் சுக்ரன் இருப்பதால், பெண்களுக்காக பணம் செலவழிக்கும் காலமிது.

**இந்த மாதம் கன்னி ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

27-06-2008 மணி 26.11 முதல் 29-06-2008 27.51 மணி வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**உத்திரம் 2,3,4 பாதங்கள்:**

சொந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நல்ல வளர்ச்சி உண்டாகும். மூதாதையரின் சொத்து கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

பேச்சுவார்த்தைகளில் கவனமாய் இருந்தால் நினைத்த காரியம் கைகூடும்.

**ஹஸ்தம் 1,2,3,4 பாதங்கள்:**

மாணவர்களின் தடைப்பட்ட கல்வி தொடரும். வாக்குத்திறனால், பட்டிமன்றங்களில், பேச்சுப்போட்டிகளில் வெற்றி கிடைக்கும். உங்களின் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**சித்திரை 1, 2 பாதங்கள்:**

குடும்பத்தில் வாக்கு வாதங்கள் வலுக்காதவாறு பார்த்துக் கொள்வது நல்லது. வாரிசுகளால் நன்மை அடைவீர்கள்.

கூட்டுத் தொழிலில் உள்ளவர்கள் கவனமாக இருந்தால், லாபம் கணிசமாக உயரும்.

**பரிகாரங்கள்:**

செவ்வாய்க்கிழமைதோறும் துர்க்கை சன்னதியில் தீபம் ஏற்றி வாருங்கள். ராகு ரம்மியமான பலன்களைத் தருவார்.



சனிக்குரிய ப்ரீதியை செய்து வந்தால், சங்கடங்கள் சடுதியில் விலகும்.

குருவின் பாதம் பற்றி வந்தால், வாழ்வில் வசந்தத்தை வாரி வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களால் ஏற்றம் பெறலாம்



அதிர்ஷ்டமாக வாழ உலகில் அனைவருக்கும் ஆசைதான். ஆனால் சிலர் மிக மகிழ்வான உல்லாச வாழ்க்கை வாழ்கின்றனர், மற்றும் பலரோ பல மேடு-பள்ளங்களைக் கடந்து வந்தும், சுபிட்சமாக வாழ முடிவதில்லை, இது ஏன்?

நம் பூவுலகில் அனைத்து நிகழ்வுகளும் எண்ணால்தான் ஆளப்படுகின்றன. எண்ணும், எழுத்தும்தான் உலகை ஆண்டு கொண்டிருக்கின்றன. இதை யாராலும் மறுக்க முடியாது. இதனால் தான் 'எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றனர்.

ஒரு மனிதனுடைய வாழ்வு மற்றும் தாழ்வு நிச்சயமாக அவனின் பிறப்பு எண், விதி எண், பெயர் எண் ஆகியவற்றைப் பொறுத்துத்தான் அமையும். 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என்பது பழைய கதை.

ஆனால் இன்றோ 'குளோனிங்' முறையில் உயிர்களைப் படைத்துக் கொண்டிருக்கும் இக்காலத்திலும் உலகம் முழுக்க ஒத்துக் கொள்ளப்பட்டதொரு மெய்யான விஞ்ஞானக் கலைதான் 'எண் கணிதம்' ஆகும். இதைச் சரியாக பயன்படுத்திக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

### எண் கணிதம் தோன்றிய வரலாறு

நியூமராலஜி எப்பொழுது, எங்கே தோன்றியது என்பது யாருக்கும் தெரியவில்லை.

சால்டியன் என்ற ஆதிகாலத்தவரும், சீனர்களும், நமது பாரத மகான்களும், கிரேக்க வல்லுனர் பிதகோரஸும் இந்த விஞ்ஞானக் கலை வளர ஆக்கபூர்வத் தொண்டுகள் புரிந்தது தெரிய வருகிறது.

சால்டியன் முறை பல ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த ஆயிரம் ஆண்டுகளாக உலகம் முழுக்க இக்கலைக்கு நல்ல வரவேற்பு இருந்து வந்துள்ளதாக தெரிகிறது.

### பெயர் மாற்றிக் கொள்வதால் ஏற்படும் நன்மைகள்

அதிகப் பசியுடன் இருப்பவருக்கு தண்ணீர் தந்தாலே பசி அடங்கி விடுகிறது. அறுசுவை உணவு படைத்தால் எப்படி இருக்கும்!

இதுபோலத்தான் பெயர் சரியாக அமையாதவர்களுக்கு, விதி எண்ணிற்கேற்ப பெயரை சரி செய்து கொள்வது மிகச் சிறப்பாகும்.

ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் பேனாவை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். மூடியை கழற்றிவிட்டு பார்க்கும்போது, எழுதும் ஊசிப் பகுதி பிறப்பு எண் என்றும், பேனாவின் நடுப்பகுதி மாதம் என்றும், பேனாவின் பின் பகுதி பிறந்த வருடம் என்றும் மூன்றையும் கூட்டி வந்த எண், விதி எண் என்றும் கொள்வோம்.

இப்பொழுது இந்த பேனாவிற்கு மற்றொரு கம்பெனியின் மூடியை சேர்த்தால், அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகச் சேராது. ஏனெனில் இதன் அளவு வேறு, அதன் அளவு வேறு. இதுவே இவ்வாறிருக்கும் பொழுது, வாழ்க்கையை நலமாக இட்டுச் செல்ல வேண்டிய பெயர் எண் சரியாக அமையவில்லை யானால் என்ன செய்ய வேண்டும்? பிறந்த திகதியை நாம் மாற்ற இயலாது.

பேனாவிற்கு சரியான மூடி சேர்த்தது போன்று, பெயரையும் மாற்றிச் சரி செய்து கொண்டால் வாழ்வு நன்றாக இருக்கும்.

நாம் மந்திரமோ, மாயமோ, விபூதியோ, மையோ போடவில்லை. கணிதத்தின் அடிப்படையில் எணகளைக் கொண்டு வந்து கணக்குப் போடுகிறோம்.



சரியான சூத்திரத்தை உபயோகிக்கிறோம். அப்பொழுது விடையும் சரியாகத்தானே இருக்கும். இந்தக் கலை எந்த ஒரு நாட்டிற்கும், மதத்திற்கும், ஜாதிக்கும் சொந்த மில்லை.

கணிதத்துக்கு மதச்சாயம் பூசுவது, மனிதரின் அறிவுக்கு உகந்ததல்ல. கோள்கள் அனைவருக்கும் பொதுவானவை. ஒரு குறிப்பிட்ட, நன்மை தரும் கோளின் முழுமையான பிடிக்குள் உட்படுவதே எண் கணிதத்தின் தத்துவம்.

நமக்கு அருகில் உள்ள நாடு திபெத் ஆகும். நல்ல வளர்ச்சியடைந்த நாடு, இயற்கை வளம் நிறைந்த நாடு. அங்கு வைத்தியத்தால் சரி செய்ய முடியாத, மிகப்பெரிய மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளை, மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்துவிடுவர்.

பிறகு அவரின் சொந்த பந்தங்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் இனிய நண்பர்களுக்கும், உள்ளூர் பிரமுகர்களுக்கும், நல் இதயம் கொண்டோர்களுக்கும், மகான்கள் அனைவருக்கும் நோயாளியின் வீட்டிலிருந்து ஆள் அனுப்புவர். குறிப்பிட்ட நாளில் நோயாளியின் பெயர் மாற்றும் விழா நடைபெறுகிறது, தவறாது கலந்து கொள்ளுங்கள் என்று சொல்வார்கள். அவர்கள் அனைவரும் வந்து நோயாளியின் புதிய பெயரைச் சொல்லி வாழ்த்திச் செல்வார்களாம். இவ்வாறு பெயர் மாற்றிக் கொண்டு வாழ்த்துப் பெற்ற எத்தனையோ பேர் இன்றும் நலமோடு வாழ்கின்றனர் என்பது இந்த விஞ்ஞான யுகத்தில் வேடிக்கை யானது என நினைக்கலாம்.

ஆனால் நோயாளிகளின் பழைய பெயர் எண் அவருக்கு மரணத்திற்கு ஒப்பான சங்கடத்தை ஏற்படுத்தியது. புதிய பெயர் எண்ணால் சங்கடம் தவிர்க்கப்பட்டுள்ளது. இன்றும் நாம் இதை திபெத் சென்றால் காணலாம். எனவே இது ஒரு மிகச் சரியான கணிதமே என்பதை உணர வேண்டும்.


எண்கணித நிபுணர்

**ஜே.என்.எஸ். செல்வம்**

+91 - 98424 90001


## சோம்பேறித்தனம் விலக சூரிய துதி



ஸர்வ மங்கள
மாங்கல்யே சிவே
ஸர்வார்த்த ஸாதகே
சரண்யே த்ரயம்பகே
தேவி நாராயணீ
நமோஸ்துதே

(பெண்கள் இந்த மந்திரத்தை மனத்திற்கு, எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தாலே, வறுமை நீங்கி, அஷ்டலக்ஷ்மியின் அருட்கடாக்ஷம் கிட்டும் என்பது திண்ணம்)


**சந்நிதியான் திருமணசேவை**

SANNITHIYAN MARRIAGE SERVICE



**இந்து, கிறிஸ்தவர்கள்**
**சகல சமூகப்பிரிவினர்களுக்கான**
**(உள்நாடு & வெளிநாடு)**
**துரித விவாக சேவை**
தொடர்புகளுக்கு T. குணரட்ணராஜா
**285,1/1, காலி வீதி,**
**வெள்ளவத்தை,கொழும்பு 06.**
**Tel: 060 2172980,**
**Mobile: 0773 573055**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு

## ஆனி மாதம்

[15.06.08 முதல் 15.07.08 வரை]

**சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி 1,2,3,4 பாதங்கள், விசாகம் 1,2,3 பாதங்கள்**

**(பெயரின் முதல் எழுத்து ரா-ரி-ரு-ரே-ரோ-தா- தி-து-தே உடையவர்களுக்கும்)**

## செயல்களில் விறு விறுப்பும், விவேகமும் உடைய துலா ராசி நேயர்களே!

யும், புதிய மனிதர்களையும் சந்திப்பார்கள்.

8இல் இருக்கும் புதன், புத்திரர்கள் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவர். பெரியோர்களின் நல்லாசி கிடைக்கும். சுக்ரன் ஜூலை 7 வரை 9இல் இருப்பதால், பொருள்களின் நல்லாசி கிடைக்கும். சுக்ரன் ஜூலை 7 வரை 9இல் இருப்ப தால், பொருள்களின் சேர்க்கைக்கு பஞ்சமிராது. 8ஆம் திகதி முதல் சுக்ரன் 10ஆம் இடத்தில் இருப்ப தால் விருப்பமானவர்களின் மனத்தில் இடம் பெற போராட வேண்டியிருக்கும்.

சூரியனும் 9இல் இருப்பதால், கண் சம்பந்த மான வியாதிகள் வந்து விலகும். செவ்வாய் ஜூன் 21 வரை 10இல் இருப்பதால், சொத்து விவகாரங்களில் இழுபறியான நிலைமை நிலவும். வாக்குவாதங்கள் வலுக்கும். ஜூன் 22ஆம் திகதி முதல்

## துலாம்



செவ்வாய் 10ஆம் இடம் சென்று சனியுடன் அமர்கிறார். கடன் தொல்லைகள் விலகும். நூதன துறைகளில், உங்களின் ஆர்வத்துக்குரிய மதிப்பு கிடைக்கும்.

திருமணம் முதலிய சுப காரியங்கள் திருப்திகரமாய் நடந்தேறும். பல போட்டிகள் இருந்தாலும் வெற்றி பெறுவது உறுதி. இரசாயனம் சம்பந்தப்பட்ட தொழில்கள் மூலம் அதிக லாபம் கிட்டும்.

### பெண்களுக்கு:

இந்த மாதம் 11இல் அமர்ந்திருக்கும் சனியால் தடைப்பட்ட பல காரியங்கள் துரித கதியில் முடியும். வாடகை வீட்டில் குடியிருந்தவர்கள், சொந்த இல்லத்திற்கு செல்லும் பாக்கியம் கிடைக்கும்.

குருவின் பார்வையால், கன்னிப் பெண்களுக்கு மண மாலை சூடும் யோகம் வாய்க்கும். ராகு 4இல் இருப்பதால், சிலர் புதிய இடங்களை

### மாணவர்களுக்கு:

சனியின் அருளால் மனதில் இருந்த கலக்கம் நீங்கி, புதிய தெளிவு பிறக்கும். தைரியத்துடன் முடிவு எடுப்பீர்கள். சிலர் உயர்கல்வி பொருட்டு, வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு கனிந்து வரும். குருவும் அவர் பங்குக்கு, சிறந்த ஆசிரியர்களை அறிமுகப்படுத்துவார். நண்பர்கள் இடையே நிலவிய கசப்பு நீங்கும்.

ராகு 4இல் இருப்பதன் காரணமாக, வாழ்வில் வரும் வம்புச் சண்டைகளிலிருந்து ஒதுங்கியிருப்பது நல்லது. 8இல் உள்ள புதன் கடினமான கணிதப்பாடத்தை கற்கண்டாக ஆக்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்ரன் ஜூலை 7 வரை 9இல் இருப்பதால், உங்களின் நடை, உடை பாவனை ஆகியவற்றில் மெருகு அதிகரிக்கும்.

அதற்குப் பிறகு சுக்ரன் 10-ம் இடம் செல்வதால் எந்தச் சூழலிலும், கண்ணியமாக நடந்து கொள்வது அவசியம். சூரியன் 9இல் இருப்பதால், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி வாருங்கள். செவ்வாய் ஜூன் 21 வரை 10இல் இருப்பதால், வாகனங்களில் செல்லும்போது போட்டா போட்டியைத் தவிர்த்து விடுதல் நல்லது. ஜூன் 22 முதல் செவ்வாய் சனியுடன் இருக்கும் காரணத்தால், சாதகமான செயல்பாடுகள் அதிகரிப்பதை கண்கூடாகக் காண்பீர்கள்.

**பணிபுரிபவர்களுக்கு:**

சனியின் உதவியால் தடைப்பட்டிருந்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகியவை தீர்மானமாக உங்களை வந்தடையும். அடிமட்டத்தில் இருந்த திறமை அபாரமாய் வெளிப்படும். வெற்றி, புகழ் ஆகியவை கூடி வருவதுடன், கௌரவப் பதவிகளும் உங்களுக்காக காத்திருக்கும் காலமிது. ராகு 4இல் இருப்பதால் பணியிடத் தில், திடீரென்று சிறு குழப்பங்கள் தோன்றும்.

புதனின் அனுக்கிரகத்தால் அலுவலகத் தேர்வுகளின் மூலம் உங்களின் தரமும், தகுதியும் உயரும். சுக்ரன் ஜூலை முதல் வாரம் வரை சுக பாக்கியங்களை வழங்கும் இடத்தில் இருக்கி றார். உங்களைக் கண்டு ஒளிந்தவர்கள், வலிய வந்து பழகுவார்கள். அதன் பிறகு சுக்ரன் 10ஆம் இடம் செல்வதால், எடுக்கும் முயற்சிகள், சிறிது தேக்கத்திற்குப் பின் விறுவிறுவென்று நடை பெறும்.

எதிரிகளின் பலத்தை குரு குறைத்திடுவார். தடையற்ற பொருளாதாரம் தனித்தெம்பை அளிக்கும். சூரியன் 9இல் இருப்பதால், அதிகாரி களின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடும்.

ஜூன் 21 வரை செவ்வாய் 10இல் இருப்பதால், முக்கியமான பணிகளில் முழு கவனத்துடன் இருப்பது நல்லது. ஜூன் 22 முதல் செவ்வாய் சனியுடன் சேர்வதால், நினைத்ததை நடத்தி முடிக்கும் வல்லமை உண்டாகும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சனியின் அருளால் உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சி உண்டாகும். ஆரோக்கியம் பொலிவுடன் விளங்கும். இந்த மாதம் அதிக அளவிலான சுப பலன்களை குரு தந்தருள்வார். பிள்ளைகளின் திருமணம், ஆன்மீக விழாக் களில் கலந்து கொள்ளுதல் ஆகியவை தடை யின்றி நடக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சனியின் அருளால் உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சி உண்டாகும். நீங்கள் எதிர் கொள்ளும் திருப்பங்கள் வளத்தினை நோக்கி அழைத்துச் செல்லும் விதமாக அமையும். ஆரோக்கியம் பொலிவுடன் விளங்கும். இந்த மாதம் அதிக அளவிலான சுப பலன்களை குரு தந்தருள்வார்.

பிள்ளைகளின் திருமணம், ஆன்மீக விழாக் களில் கலந்து கொள்ளுதல் ஆகியவை தடையின்றி நடக்கும். பொதுப் பிரச்சினைகளை, திறம்படத் தீர்க்கும் வாய்ப்பை எட்டில் உள்ள புதன் நல்குவார். சூரியன் 9இல் இருப்பதால் மேலிடத்திலிருந்து வருபவர்களிடம் அள வோடு பழகி வாருங்கள்.

ஜூலை முதல் வாரம் வரை சுக்ரன் ஆபரணம், வண்ண உடை ஆகியவற்றினை தந்து மகிழ்விப்பார். குடும்ப உறவுகள் இதமாக வும், ஆறுதலாகவும் விளங்கும். அதன்பிறகு சுக்ரன் 10ஆம் இடம் செல்வதால், ஆயாசமும், அசதியும் அவ்வப்போது தலைகாட்டும்.

ஜூன் 21 வரை செவ்வாயும் 10-ல் இருப்பதால், தொழிலாளர்களின் கோரிக்கைக் காக போராட்டத்தில் குதிக்க வேண்டியிருக்கும். ஜூன் 22 முதல் செவ்வாய் சனியுடன் சேர்வ தால், உயர்வுடன் கூடிய அதிர்ஷ்டம் உங்கள் கதவைத் தட்டும்.

**வியாபாரிகளுக்கு:**

இதுவரை ஏட்டில் இருந்த லாபம் கையிலும் வந்து சேரும் வாய்ப்பை சனி தந்திடுவார். தேடிச்சென்றாலும் கிடைக்காத மனிதர்கள், உங்களை நாடி வந்து நல்லது செய்வார்கள். குருவும் வீடு, வாகனம், ஆகியவற்றின் மூலம் வரும் லாபத்தை அதிகப்படுத்துவார். பழைய பாக்கிகள் வசூலாகும்.

இக்கட்டான சூழ்நிலைகள் படிப்படியாகக் குறைந்துவிடும். தொழிலாளர்களின் நீண்ட நாள் பிரச்சினை சுமுகமாக முடிவதால், தொழிலில், ஆர்வமும், ஈடுபாடும் பன்மடங்காகப் பெரு கும். ராகு 4இல் இருப்பதால், கால தாமதமின்றி பணிகளை முடுக்கிவிடுதல் நன்று.

கிடப்பில் கிடந்த விண்ணப்பங்களை 8இல் உள்ள புதன், தகுந்த நேரத்தில் பரிசீலனைக்கு அனுப்பி வைப்பதுடன், தக்க சகாயத்தையும் தாராளமாய் தந்திடுவார். ஜூலை முதல் வாரம் வரை 9இல் இருக்கும் சுக்ரன் கலை நிகழ்ச்சிகள், விழாக்கள் ஆகியவற்றில் பங்கு கொள்ளச் செய்திடுவார்.

உறவினர்கள் மற்றும் நண்பர்களால் அதிக உதவி கிடைக்கும். பிறகு 10இல் சுக்ரன் இருப்ப தால், விரும்பிச் சென்றாலும், சில உறவுகள் விலகியே நிற்கும். ஜூன் 21 வரை சுமாரான பலன்களைத் தரும். செவ்வாய், 22ஆம் திகதி முதல் சனியுடன் 11இல் அமர்வதால் முழு வீச்சில் காரியங்களை நிறைவேற்றி வைப்பார்.

**கலைஞர்களுக்கு:**

தொழிலுக்கு உரிய கௌரவத்தை சனியின் பார்வை அளிக்கும். குடும்பத்தில் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். உறவுகளின் வருகை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகத்தைத் தரும். குருவின் பலத்தால் வருமானமும் கூடும். சுபச்செலவுகள் கூடும். திருமண வயதை உடையவர்களுக்கு விரும்பிய வாழ்க்கை அமையும்.

வாழ்க்கைத் துணையின் ஆதரவால், வாழ்வை உல்லாசமாய் அனுபவிக்கும் வாய்ப்புகளும் கை கூடிவரும். புதனின் பலத்தால் கடன்கள் அனைத்தையும் தீர்த்து விடுவீர்கள். சுற்றத்தாரோடு புண்ணிய தலங் களுக்கு சென்று வருவீர்கள்.

புதனின் பலத்தால், தொழிலில் இருந்த சிரமங்கள் எல்லாம் நீங்கிவிடும். ராகு 4இல் இருப்பதால், இடமாற்றல், ஊர்சுற்றல் இருந் தாலும், ஆதாயமான பலன்களே கிட்டும்.

சூரியன் 9இல் இருப்பதால், என்னதான் சுறுசுறுப்புடன் செயலாற்றினாலும், காரியங்கள் மந்த கதியிலேயே செல்லும். ஜூலை முதல் வாரம் வரை 9இல் உள்ள சுக்ரன் உங்களின் திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டி, புகழையும், பெயரையும் வாரி வழங்குவார். அதன் பிறகு சுக்ரன் 10ஆம் இடம் செல்வதால், கவனமாக இருந்தால், பொருள்கள் தவறிப் போவதைத் தவிர்க்க முடியும்.

ஜூன் 21 வரை செவ்வாயும், 10-ல் இருப்பதால், வாகனங்களில் செல்லும் போது, கொஞ்ச நேரமானாலும், நிதானமாகவே செல்வது நல்லது.

22ஆம் திகதி முதல் செவ்வாய் சனியுடன் 11இல் அமர்வதால், மூத்த கலைஞர்களின் ஒத்துழைப்பு, ஆசி ஆகியவை கிடைப்பதால், புது முயற்சிகளில் துணிவுடன் இறங்கி செயலாற்றுவீர்கள்.

**இந்த மாதம் துலா ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

29.06.2008 மணி 27.52 முதல் 01.07.2008 27.49 மணி வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**சித்திரை 3,4 பாதங்கள்:**

உழைத்த உழைப்பு வீண் போகாமல் நினைத்த காரியங்கள் கைகூடும். உங்கள் சுய முயற்சியால், உங்களுக்கென்று ஒரு இடத்தை உருவாக்கிக் கொள்வீர் கள்.



**ஸ்வாதி 1,2,3,4 பாதங்கள்:**

உங்களைச் சார்ந்தவர் கள் மூலம் நடக்க வேண் டிய வேலைகள் சீராக நடைபெறும். வருத் தப்பட வைத்தவர்கள், வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்வார்கள்.

**விசாகம் 1,2,3 பாதங் கள்:**

அவ்வப்போது அலைய நேர்ந்தாலும், உங்களுக்கு உரிய மதிப் பும், மரியாதையும் கட்டா யம் கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு வெற் றிச் செய்தி கிட்டும்.

**பரிகாரங்கள்:**

பிரதோஷ காலத்தில் சிவனை ஆராதித்து வாருங்கள். பகவான் மனம் குளிர்ந்து, பாங் கான பலன்களை தந்தருள் வார். பிரதி வெள்ளி தோறும் திருமகளை வழி பட, செய்தொழிலில் அபி விருத்தி உண்டாகும். ராகுவை வலம் வரு வோர்க்கு கவலைகள் யாவும் விலகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவுகள் பகையா? நட்பா?

## சாதகம் மூலம் அறியலாம்

இன்றைய நிலையில் 'கூட்டுக்குடும்பம்' என்ற வாழ்க்கை முறை அறவே அழிந்து போய் விட்டது என்றே கூறலாம். அத்துடன் உறவுகள், சொந்தங்கள் என்ற வகையில், எல்லோருமே பிரிந்து தனித்தனித் தீவுகளாக ஆகிப்போயினர். அநேக விடயங்களில் உறவுகள் மற்றும் சொந்தங்கள் வகையில் பரஸ்பர அன்பு ஏதுமின்றி, பகைமை பாராட்டும் நிலை ஏற்படுகின்ற கொடுமையையும் காண முடிகின்றது.

உடன் இருக்கும் உறவுகள் அனைவரும் பகையாய் மாறிவிடும் காரணத்தை சாதக ரீதியாக அறிய முயற்சிப்போம்:

1. சாதகத்தில் எந்ததொரு இலக்கினமாக இருந்தாலும், ராகு நின்ற ராசியில் அல்லது அதற்கு 7இல் இலக்கினத்திற்கு 5இற்குரியோன் உள்ளதா எனக்கவனிக்க வேண்டும்.

அவ்வாறு இருந்துவிட்டால், சாதகர் தங்களுடைய உறவுகள், சொந்தங்கள் வகையில் எல்லோருக்குமே பகையாக மாறிவிடுவர் என்பதை அனுபவத்தில் காணலாம். இப்படிப்பட்ட கிரக அமைப்பு உள்ளவர்கள் இயன்ற அளவு உறவுகள், சொந்தங்களைவிட்டு ஒதுங்கி, விலகி அல்லது பிரிந்து, தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் வீணான பல்வேறு சங்கடங்கள், துயரங்களிலிருந்து விடுபடலாம்.

2. சாதகத்தில் இலக்கினம் அல்லது 7ஆம் இடத்தில் கேது இருக்க, 3 அல்லது 9ஆம் இடத்தில் சுக்கிரனிருந்தால், சாதகர் தனது மைத்துனி முறை உறவுகளைவிட்டு விலகியிருக்க வேண்டியது அவசியமாகும்.

3. அதேபோல் சாதகத்தில் 2,3,6ஆம் இடங்களில் ஒன்றில் செவ்வாய் இருந்தாலும் அல்லது இலக்கினம் அல்லது 7ஆம் இடத்தில் கேது இருந்தாலும், சாதகியர் தங்களுடைய கொழுந்தன் முறை உறவுகளை விட்டு விலகியிருக்க வேண்டியது அவசிய மாகும்.

4. இலக்கினத்திற்கு 7இல் கேது இருந்தால் சாதகர் தங்கள் வாழ்க்கைத் துணையைப் பிரிந்து/ விலகி/ விவகாரத்துப் பெற்ற தங்களைவிடத் தாழ்ந்த நிலையிலுள்ளவரை முறைகேடான வகையில் திருமணம் செய்து கொள்ளக் கூடியவர்களாக இருப்பர். ஆனால் அதே சமயம் சாதகத்தில் கீழ்க் காணும் வகையில் கிரக அமைப்பு இருந்தால் அப்படிப்பட்டவர்கள், அவ்வாறானவர்களுடன் தொடர்பு/உறவு உள்ளவர்களாக இருக்கலாமே தவிர, முறைகேடான வகையில் திருமணம் செய்து கொள்ள முடியாதவர்களாகவே இருப்பர்.

5. பொதுவாகவே - இலக்கினம்

மேஷம் /துலாம் 1,4,9,10இல் செவ்வாய் - இருந்தால்

கடகம்/ மகரம் 4,10இல் சூரியனிருக்க 2, 4, 7, 10இல் சனி இருந்தால்

சிம்மம் 4,10இல் ராகு அல்லது கேது இருந்தால் சாதகர் தங்களுடைய பேச்சு மற்றும் செயல்களால் பிறபாலார்களை, எளிதாக வசீகரித்து விடக்கூடியவர்களாக இருப்பர்.

6. சாதகத்தில் இலக்கினம் அல்லது 7ஆம் இடத்தில் சுக்ரனிருக்க, 1,4,7,12இல் செவ்வாயும், 1, 5, 7,20இல் சனியும் இருந்தால் சாதகர்/சாதகி பிற பாலார்களின் வற்புறுத்தல், துன்புறுத்தல் போன்றவைகளுக்கு ஆளாக நேரிட்டுவிடுவதை அனுபவத்தில் காணலாம்.

7. சாதகத்தில்-இலக்கினத்தில் சனி இருக்க, 3இற்குரியோன் 3, 7, 10இல் இருந்தால் (மேஷ/கட/சிம்/விருச்சிக/தனுசு இலக்கினம் தவிர) 6இல் சனியிருக்க, 3இற்குரியோன் 3, 8, 12இல் இருந்தால் (மிதுனம் / விருச்சிகம் / தனுசு /கும்பம் / மீன இலக்கினம் தவிர) 9இல் சனி இருக்க, 3இற்குரியோன் 3, 6, 11இல் இருந்தால் (சிம்மம்/ விருச்சிகம்/ தனுசு/ மீன இலக்கினம் தவிர) சாதகர்/ சாதகிக்கு உறவு மற்றும் சொந்தங்களில் ஏதேனும் கூடாத் தொடர்புகள் ஏற்பட்டுவிடக் கூடும்.

8. இலக்கினாதிபதியும், 11இற்குரியோனும் சேர்ந்திருந்தாலும் அல்லது மேற்படி இருவரும் 3ஆம் இடத்தைப் பார்த்திருந்தாலும் அல்லது 3இற்குரியோன் வலுவிழந்திருந்தாலும் சாதகர் / சாதகி தங்களுடைய உடன்பிறப்புக்களின் சொத்துக்களை அபகரிக்கக் கூடியவர்களாயிருப்பர்.

9. பொதுவாகவே சாதகத்தில் சந்திரன் அல்லது சனியுடன் கேது சேர்ந்திருந்தால் சாதகர் / சாதகிக்கு அமையக்கூடிய வாழ்க்கைத்துணை கலகம், சண்டையிடக் கூடியவராகவே இருப்பர் எனலாம். ஆனால் திருமணமானபின் பணம், பொருள் சேர்க்கைக்குக் குறைவிராது.

10. பெண்கள் சாதகத்தில் மேஷம் அல்லது விருச்சிக ராசியில் சுக்ரனிருக்க, மகரம் அல்லது கும்பராசியில் சந்திரன் இருந்து பாவிகளின் பார்வை பெற்றிருந்தால், சாதகிக்கு நிறையவே காதலர்கள், நண்பர்கள் இருப்பர்.

11. இலக்கினத்திற்கு 3இற்குரியோன் 2ஆம் இடத்தில் இருந்தால் சாதகர்/சாதகி தங்கள் உடன் பிறப்பின் வாழ்க்கைத்துணை காரணமாக குடும்பத்தில் தொடர்ந்து பிரச்சினைகள், சண்டை சச்சரவுகளைச் சந்திக்க நேரிடும்.

12. மேஷம்/ரிஷபம்/மீனம் ஆகிய மூன்று இலக்கினங்கள் தவிர, ஏனையோர் சாதகத்தில் 5இல் சுக்கிரனிருந்ததால் தங்களுடைய மருமகள்/ மருமகன் மீது அளவு கடந்த பாசமுள்ளவர்களாக இருப்பர்.

சு.வே.சு.பிள்ளை
பாலக்காடு
செல்: 0091 99958 30388.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு
## ஆனி மாதம்
## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம் 1,2,3,4 பாதங்கள், கேட்டை 1,2,3,4 பாதங்கள்)**

**(பெயரின் முதல் எழுத்து தோ-ஈ-ந-நி-நு-நே- நோ-ய-இ-யு உடையவர்களுக்கும்)**

## மனசாட்சிக்கு மதிப்பளிக்கும் குணமுடைய விருச்சிக ராசி நேயர்களே !

துணிவு தானே பிறக்கும்.

ஜூலை 6 வரை புதனும், ஜூலை 7 வரை சுக்ரனும் ஸப்தம இடத்தில் இருப்பதால், விழலுக்கு இறைத்த நீராய் உங்களின் உழைப்பு வீணாகும் வாய்ப்பு உள்ளது.

எதிர்பார்த்த இடங்களிலிருந்து தான தர்ம உதவி கிட்டும். அஷ்டம ஸ்தானத்தில் உள்ள சூரியனால், செலவுகள் அதிகரிக்கும். ஜூலை 8ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானம் செல்லும் சுக்ரன் அபூர்வமான பொருட்களை அனுபவிக்கும் யோகத்தை அளிப்பார்.

ஜூன் 21 வரை, நவம ஸ்தானத்தில் செவ்வாயுடன் இருக்கும் கேது, புண்ணிய காரியங்களில் பங்கு கொள்ளச்செய்வார். ஜூன் 22 வரை செவ்வாய் 10இல் உள்ள சனியுடன் சஞ்சரிப்பதால், மின் உபகரணங்களைக் கவனத்துடன் கையாண்டு வாருங்கள்.




பூர்வீகத் தொழிலை செய்பவர்கள், புதிய இலக்கை நோக்கி பயணம் செய்வார்கள். குடும்பத்தில் சந்தோஷம் மலரும். வீடு, பூமி மீது உள்ள வில்லங்கம் விலகும்.

### பெண்களுக்கு:

உங்கள் ராசி 2-ல் குரு வீற்றிருப்பதால், பண வரவுக்கும் பஞ்சமில்லை. சுப நிகழ்வுகளுக்கும் பஞ்சமில்லை. தம்பதிகளிடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

உங்கள் வாக்கினால், நலமும், வளமும் வந்து சேரும். தந்தை வழி உறவுகள் அனுகூலமாக செயல்படும். தைரிய ஸ்தானமான 3இல் ராகு இருப்பதால், அதிரடி முடிவுகளை எடுக்கும்

### மாணவர்களுக்கு:

இந்த மாதம் நன்மை செய்ய குரு காத்திருக்கின்றார். உங்கள் மனதுக்குப் பிடித்த பாடங்களை மகிழ்வுடன் படிப்பீர்கள். கணனி தொடர்பான கல்வி பயிலும் வாய்ப்பும் வரும். சக மாணவர்களின் உதவி உடனுக்குடன் கிடைக்கும். ராகு 3இல் இடம் பெற்றிருப்பதால், மலையேற்றம் போன்றவற்றில் பங்கு கொள்வீர்கள்.

புதனும், சுக்ரனும் ஜூலை முதல் வாரம் வரை 7இல் இருப்பதால், முட்டுக்கட்டைகள் முயற்சியின் வேகத்தைக் குறைக்கும். மறதியும், சுகவீனமும் கை கோர்த்துக் கொள்ளும். சூரியன் 8-ல் இருப்பதால், அதிக காரமான உணவுகளை ஒதுக்கி விட்டால், வயிற்று வலி உங்களை வாட்டாது.

ஜூலை 8ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் சுக்ரனால், இதமான நட்பு மலரும். உறவின் முகங்களும் இனிமையைக் காட்டும். ஜூன் 21 வரை, 9ஆம் ஸ்தானத்தில் செவ்வாயு டன் இருக்கும் கேதுவால், பாடங்களும், பரீட்சைகளும் மலைப்பாய் காட்சி அளிக்கும்.

தேவையற்ற விமர்சனங்கள் உங்கள் உறுதி யைக் குலைக்கும். 10இல் சனி இருப்பதால், அனைவரிடமும் இங்கிதமாக நடந்து கொள் ளுங்கள். ஆதரவும், அனுசரணையும் குறை யாது.

**பணிபுரிபவர்களுக்கு:**

அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு, கையிருப்பு மேலும் வளரும். குருவின் கருணையால், ஏறுமாறாக நடந்து கொண்ட அதிகாரிகள், இணக்கமாக நடந்து கொள் வார்கள். சுப காரியங்களை உறுதி செய்ய நல்ல நேரம்.

ராகு 3இல் இருப்பதால், பணிகளில் இருந்த இறுக்கங்கள் விலகும். திட்டமிட்டபடி, பணி களை முடித்து, பெருமையுடன் வலம் வருவீர் கள். உயர்பதவிக்காக எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும்.

புதனும், சுக்ரனும் ஜூலை முதல் வாரம் வரை 7இல் இருப்பதால், நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று என்ற நிலை நிலவி வரும். இந்த மாதம் முழுவதும் சூரியன் 8இல் இருப்பதால், ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். ஜூலை 8 முதல் சுக்ரன் 8இல் இருப்பதால், கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வந்துவிடும்.

அதனால் மனமும் நிறைவடையும். ஜூன் 21 வரை, 9ஆம் ஸ்தானத்தில் செவ்வாயுடன் கேது இருப்பதால், சக பணியாளர்களின் விஷயங்களில் உங்கள் தலையீடைத் தவிருங் கள்.

உங்களின் கோபத்தைக் கட்டுக்குள் வைத் தால், இரத்த அழுத்தம் முதலியவை எப்போதும் எட்டிப் பாராது. சனி 10இல் இருப்பதால், அமைதியான அணுகுமுறையைக் கையாளுங் கள். பிரச்சினைகள் எல்லாம் தலைதூக்காமல் அமுங்கிவிடும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

நீங்கள் இழந்த புகழ், பெருமை அனைத்தை யும் 2இல் உள்ள குரு மீட்டுத் தருவார். முதுகில் குத்தியவர்களே மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு சிறப்பாக செயல்படுவீர்கள்.

பொருளாதாரத்தில் இருந்த தேக்க நிலையில் விலகி சரளமான பணப்புழக்கம் இருக்கும். ராகுவின் அருளால், பேயாய் ஆட்டிப் படைத்த பகை, அடங்கி ஒடுங்கிக் கிடக்கும். பாராட்டும், பதவியும் உங்களை நாடி வரும்.

பம்பரமாய் சுழன்று பணியாற்றி மகிழ்வீர் கள். புதனும், சுக்ரனும் ஜூலை முதல் வாரம் வரை 7இல் இருப்பதால், இல்லறம் நல்லறமாக திகழ, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.

உடல் உபாதைகள் தலை தூக்கினால், தகுந்த சிகிச்சையை எடுத்துக் கொள்ளுங்கள். சூரியன் 8இல் இருப்பதால், சில பணிகள் அனுமார் வாலாய் நீண்டு உங்கள் பொறுமையை சோதிக் கும். ஜூலை 8ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானம் செல்லும் சுக்ரன் இனிமையான அனுப வங்களை அள்ளித் தெளிப்பார்.

ஜூன் 21 வரை, 9ஆம் ஸ்தானத்தில் கேதுவு டன் செவ்வாய் இருப்பதால், பழைய வழக்கு கள் மீண்டும் தலைகாட்டுவதுடன், இனம் புரியாத பயத்தையும் தரும். சனி 10இல் இருப் பதால், தீய நட்பை புறம் தள்ளுவது நல்லது.

**வியாபாரிகளுக்கு:**

குருவின் கருணையால், ஏமாற்றங்கள் குறைந்து, ஏற்றம் பெறும் காலம். தொட்ட தெல்லாம் வெற்றியாய் முடியும். தொலைதூரப் பயணங்களால் நன்மை உண்டு. புதிய முதலீடு கள் லாபகரமாய் அமையும்.

ராகு 3இல் இருப்பதால், அதிர்ஷ்டம் கத வைத் தட்டும். பிரிந்து சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்து சேர்ந்து கொள்வார்கள். பிறரை அன்பால் கட்டி வைக்கும் திறமையால் உங்களின் செல்வாக்கு மேலும் உயரும்.

புதனும், சுக்ரனும் ஜூலை முதல் வாரம் வரை 7இல் இருப்பதால், உடனிருப்பவர்களின் போக்கில் விரும்பத்தகாத மாறுதல்கள் ஏற்படும். இதமான கண்டிப்பு பிணக்கு ஏற்படாமல் தடுக் கும்.

ஜூலை 8 முதல் சுக்ரன் 8இல் இருப்பதால், உங்களின் கலை உணர்ச்சி வியாபார வளர்ச் சிக்கு உதவியாக அமையும். ஆடை ஆபரணச் சேர்க்கை, வாகன வசதி எல்லாமே மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

ஜூன் 21 வரை, 9ஆம் ஸ்தானத்தில் கேதுவுடன் செவ்வாய் இருப்பதால், எதிரிகளின் பலம் அறிந்து மோதுதல் அவசியம்.

வாகனம் ஓட்டும் போது, கவனச் சிதறல் களுக்கு இடம் தராதீர்கள். சனி 10இல் இருப்ப தால், அசையாச் சொத்துக்களின் மராமத்திற் கென அதிக பணம் செலவழிக்கும் நிலை உரு வாகும்.

**கலைஞர்களுக்கு:**

2இல் உள்ள குரு எதிர்பார்த்த உதவி, பண வரவு ஆகியவற்றை அளிப்பார். மனச் சோர்வு கள் நீங்கி, தெளிவான சிந்தனை பிறக்கும். தொழிலில் நிலவிய சங்கடமும், சஞ்சலமும் பகலவனைக் கண்ட பனி போல் பட்டென்று மறையும். பெரிய மனிதர்களின் தயவால் எதிர் பார்த்த ஆதாயம் தடையின்றி கிடைக்கும்.

தைரிய ஸ்தானத்தில் ராகு இருப்பதால், எதிர்ப்புகளைப் பற்றி கவலைப்படாமல், நினைத்த இலக்கை அடையும் முயற்சியில் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுடன் இறங்கும் காலம் இது.

பொது விழாக்களில், பாராட்டும், கௌரவமும் கிடைக்கும். புதனும் சுக்ரனும் ஜூலை முதல் வாரம் வரை 7இல் இருப்பதால், குடும்ப உறுப்பினரின் உடல் நலத்தில் கவனமாய் இருந்தால், மருத்துவச் செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

சோம்பலை விரட்டி, தேனி போல் சுற்றி வந்தால், வாய்ப்புகளை எளிதில் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

சூரியன் 8இல் இருப்பதால், முறையான உணவும், ஓய்வும் அவசியம். கவனம், பொறுமை இருந்தால், எல்லாமே நன்மையாக முடியும் என்பதை உணர்ந்து திட்டம் தீட்டுங்கள்.

ஜூலை 8 முதல் சுக்ரன் 8இல் இருப்பதால், உறவுகள் காட்டும் அன்பும் பாசமும், உங்களை முன்னேற்றப் பாதையில் செலுத்தும். ஜூன் 21 வரை, 9ஆம் ஸ்தானத்தில் கேதுவுடன் செவ்வாய் இருப்பதால், உங்கள் ரகசியங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ளாமலிருப்பது நல்லது.

சனி 10இல் இருப்பதால், சக கலைஞர்களிடையே சலசலப்பு தோன்றி மறையும். அதனை பெரிதுபடுத்தாமல் இருப்பது நல்லது.

பூர்வீகச் சொத்து தொடர்பான விஷயங்களை தள்ளிப் போடுவதால், பாதிப்புகள் குறையும்.

**இந்த மாதம் விருச்சிக ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

01-06-2008 மணி 27.50 முதல் 03-06-2008 27.55 மணி வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

### விசாகம் 4ஆம் பாதம்:

பழைய வாகனத்தை விற்று புதிய விலை உயர்ந்த வாகனத்தை வாங்கி மகிழ்வீர்கள்.

பதவியில் இருப்பவர்களுக்கு புதிய இடமாற்றம் திறமையை மேலும் ஊக்குவிக்கும் விதமாக அமையும்.

நீண்ட காலமாகத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்காதவர்களும், இப்போது பச்சைக் கொடி காட்டி விடுவார்கள்.

### அனுஷம் 1, 2, 3, 4 பாதங்கள்:

தொழில் முன்னேற்றமும், பணவரவும் புத்துணர்ச்சியைத் தரும்.

### கேட்டை 1, 2, 3, 4 பாதங்கள்:

பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தற்காலிகப் பணியில் உள்ளவர்கள் நிரந்தரப் பணியில் அமர்வார்கள்.

### பரிகாரங்கள்:

மயில் மேல் பவனி வரும் வேலவனை மனதாரத் துதித்து வந்தால், செவ்வாயின் அருளால் மனம் விரும்பிய வாழ்க்கை கிடைக்கும்.

சனிக்கிழமைகளில், ஸ்ரீலட்சுமி நாராயணரை வழிபடவும். சனியும், புதனும் தடைகளைத் தகர்த்து விடுவார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008-ஆம் ஆண்டுக்கான எண் சோதிட கணிப்பு

## மிகப் பெரும் மாற்றங்களுக்கான ஆண்டு

உயிர்ப்பும், சக்தியும் நிறைந்ததான எண் 1-ஆல், இந்த 2008ஆம் வருடம் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. பிறக்கும் ஒவ்வொரு ஆண்டும் புதிய மாற்றங்களையும், புதிய ஆரம்பங்களையும் நமக்கு உறுதி அளிக்கின்றன. ஆனால் இந்த 2008ஆம் வருடமோ, வரலாற்றின் பக்கங்களில் பதிவாகப் போகிறது. இன்னுமொரு அடுத்த வருடம் போலல்ல இந்த ஆண்டு.

இனி வரும் பத்தாண்டுகளும், நம் சுய விருப்பங்களின் ஆண்டுகளாகும். ஒரு சிலரின் அல்லது தனிப்பட்ட நபரின் செயல்கள், நம் வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் வரும் பத்து ஆண்டுகளும் வித்தியாசமாக அமையப் போகின்றன.

எல்லாத்தரப்பு மக்களின் விருப்பங்களும், முன்னுரிமைகளும் மிகப் பெரும் அளவில் நல்வழியிலான நல்ல மாற்றங்களை கொண்டு வரப் போகின்றது.

தேர்தல் நேரமாகட்டும், மற்ற சமயங்களாகட்டும், நம் தலைவர்கள் வேறு எந்த வழியுமில்லாமல் நம்முடைய எழுச்சிக்கு மண்டியிடுவதை இனிவரும் காலங்களில் காணலாம்.

2008-ஆம் ஆண்டு நம்பிக்கையான ஆண்டு என்று சொல்ல ஆயிரம் காரணங்களுண்டு. 2008-ஆம் வருடத்தை எதிர்பாராத மாற்றங்கள், ஆச்சரியங்களின் ஆண்டு என்றே கூறலாம். அவற்றில் பல நம்பிக்கையளிப்பவை மட்டுமல்ல, இப்பூமியைக் காப்பாற்றுவதாகவே அமையும்.

ஆனாலும் வழி நடத்தும் 1ஆம் வட்டம் உறுதி யில்லாத 8ஆம் வட்டத்துடன் செல்வதால், அரசியல் அரங்கில் சில மிகப்பெரிய வருந்தத்தக்க நிகழ்வுகளை எதிர்பாருங்கள்.

பூமி அதிர்வுகளும், எரிமலைச் சீற்றங்களும் ஏற்படலாம். நாடுகளின் பொருளாதாரங்களில் வீழ்ச்சி ஏற்படும். ஆனால், அவை எல்லாமே அழிவையும், இருளையும் உண்டாக்கி விடாது.

தர்மம் மற்றும் ஆன்மீக மனங்களில் மிக முக்கிய மாற்றங்கள் ஏற்படும். கட்டுக்கோப்பான மதங்கள் எண்ணிக்கையிலும், பலத்திலும் குறையலாம். அதே நேரத்தில் சிறிய, நல்ல, ஆன்மீகக் குழுக்கள் மற்றும் மத அமைப்புகள் பலத்துடன் செயல்பாட்டிற்கு வரும். இது எப்படியென்றால் ஒருபுறம் பிரிவினை, மறுபுறம் சகிப்புத் தன்மையும், சகோதரத்துவமும், கைகோர்க்கும் நேரம்.

அதன்பின் சில ஆரம்பக் கட்ட குழப்பங்களுக்குப் பின், ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட ஆன்மீக மத நம்பிக்கையிலான அமைப்பு உருவாகி, அதன் கட்டுப்பாட்டில் உலகம் வரும் இந்த 2008ஆம் வருடத்தில்.

உங்கள் வாழ்க்கைப்பாதை எண் என்ன என்று தெரியும் அல்லவா?

(வாழ்க்கை பாதை எண் என்பது உங்கள் பிறந்த நாளின் கூட்டுத் தொகையே. (உ.ம்) 14ஆம் திகதி பிறந்தவர் என்றால் 1+4=5. அதாவது 14ஆம் திகதி பிறந்தவரின் வாழ்க்கைப் பாதை எண் 5.

5ஆம் எண்ணுக்கு நேரில் அமைந்துள்ள நட்சத்திரங்கள் தான் உங்களுக்கான மதிப்பெண்.)

முன் மாதிரி "எண் கணித ஆளுமை பட்டியல்" மூலம் கண்டுபிடியுங்கள்.

உங்களுடைய வாழ்க்கைப் பாதை கணிப்பைப் பற்றி வருத்தம் அடைந்தால், எண் கணித எதிர்கால கணிப்பு, 2008-ல் ஏற்ற, இறக்கங்களை எவ்வாறு கையாளலாம் என்று உபயோகமான வழிகாட்டலைத் தரும். இது உங்களின் சுய தகவல்களைச் சார்ந்து வருவது தான்.

| உங்கள் வாழ்க்கை பாதை எண் | மதிப்பெண் |
|---|---|
| 1 | ★★★★★ |
| 2 | ★★★ |
| 3 | ★★★★★ |
| 4 | ★★ |
| 5 | ★★★★★ |
| 6 | ★★★★ |
| 7 | ★★★★ |
| 8 | ★★★★ |
| 9 | ★★★ |
| 11 | ★★★ |
| 22 | ★★★★ |
| 33 | ★★★★ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன்





**சோதிடகேசரி வாசகர்கள் அளித்த பேராதரவினால், சுவாமி கமலாத்மானந்தர் அவர்களின் ஆன்மீகக் கேள்வி பதில் இந்த இதழிலும் தொடர்கிறது.......**

**கேள்வி: 'இறைவன்' என்பவன் எப்படிப் பட்டவர் என்று சுருக்கமாகச் சொல்லுங்கள்?**

**பதில்:** 'அன்பே சிவம்' என்று இந்துமதமும் 'கருணை வடிவானவர், என்று கிறிஸ்தவமும், அல்லா அளவற்ற அருளாளன்' என்று இஸ்லாமும் இறைவனைக் குறிப்பிடுகின்றன.

**கேள்வி: இறைவனை உணர்வது எப்படி?**

**பதில்:** இறைவன் தூய்மை வடிவினன், அமைதி வடிவினன். எனவே அமைதியும், தூய்மையும் கொண்ட தெளிந்த உள்ளத்தில் தான் இறைவனின் சொரூபம் பிரகாசிக்கும்.

**கேள்வி: நான் இறைவனைத் தேடுகிறேன். கிடைப்பானா?**

**பதில்:** இறைவனைப் பற்றிய உங்கள் தேடல் ஆத்மார்த்தமாக இருந்தால், தேடுவது கிடைக்கும்.

**கேள்வி: இறைவனை மகிழ்விப்பது எப்படி?**

**பதில்:** பசித்தவனுக்கே உணவு அளிப்பவன், உண்மையில் இறைவனுக்கே உணவு அளித்தவன் ஆகிறான். பிறருக்குப் பணி செய்து நாம் வாழ வேண்டும் என்றுதான் இறைவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறான். பிறருக்கு உதவாத வாழ்க்கை நடமாடும் பிண வாழ்க்கையாகும்.

''தன்னைச் சார்ந்த மக்களுக்கு உழைப்பது தான் உண்மையான இறை வழிபாடு'' என்று பசவேசர் கூறியிருக்கிறார்.

பிறருக்கு அருள் புரிபவர்களே இறையருளைப் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள். ஏழை எளியவர்களை மகிழ்விப்பது இறைவனை மகிழ்விப்பதே ஆகும்.

**கேள்வி: சிலருக்கு நல்வாழ்வு அமைகிறது. வேறு சிலருக்கு நல்வாழ்வு அமைவதில்லை. இறைவன் இதனால் பாரபட்சமுள்ளவன் என்று சொல்லலாம் அல்லவா?**

**பதில்:** முன்செய்த நல்வினை - தீவினைகளில் ஜீவனை இறைவன் ஈடுபடுத்துகிறானே தவிர, இறைவன் பாரபட்சம் இல்லாதவன்.

**கேள்வி: 'பக்தி' என்றால் என்ன? 'ஞானம்' என்றால் என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள்.**

**பதில்:** ''ஆன்மீக அனுபவம் இரண்டு வகைப் படும். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஐக்கிய மாவது ஒரு வகை. இறைவனுடைய தெய்வீக வடிவத்தை நேரில் தரிசிப்பது மற்றொரு வகை.

முன்னதற்கு ஞானம் என்றும், பின்னதற்கு பக்தி என்றும் பெயர்'' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

**கேள்வி: 'இந்தக் காலத்தில் நிறையப் பணம் (அல்லது அதிகாரம்) இருந்தால் தான், நல்ல ஆன்மீக வாழ்க்கையே ஒருவருக்குக் கிடைக் கும்' என்று நான் கூறுகிறேன். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

**பதில்:** நீங்கள் சொல்வதில் நிறையவே உண்மை இருக்கிறது என்பதை நான் மறுக்க வில்லை. ஆனால் அதே சமயம் இறைவனுக்குப் பிரியமானவராக இருப்பதற்கு நிறைந்த கல்வியோ, செல்வமோ, அதிகாரமோ தேவை யில்லை என்பதை, அருளாளர்கள் பலரின் வாழ்க்கை வரலாறுகள் உணர்த்தியுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**கேள்வி: கடவுள் நம்பிக்கை, சுயமுயற்சி ஆகிய இரண்டில் உயர்ந்தது எது? எதை நாம் பின்பற்ற வேண்டும்?**

**பதில்:** ஆன்மீக வாழ்க்கையில் சுயமுயற்சிக்கு முக்கிய இடம் இருக்கிறது. இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதன் சுயமுயற்சி செய்யாமல் சோம்பியிருந்தால், தெய்வக்கிருபை இருந்தாலும், உரிய பயன் தராது.

இது மழை பெய்தாலும் (நிலம் இருந்தும், விதையிருந்தும்) விதை விதைக்க வேண்டிய விவசாயி, விதியின் மேல் பழியைப் போட்டுச் சோம்பலால் விதை விதைக்காமல் போவது போன்றது.

எனவே இறைவனை நம்புவதோடு, சுயமுயற்சியும் கட்டாயம் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: மனிதன் தெய்வமாக முடியுமா?**

**பதில்:** மனிதன் தெய்வமும் ஆகலாம், மிருகமும் ஆகலாம். அறிவு வளர்ச்சிக்கும், தெய்வமாவதற்கும், உலக ஆசைகளும் உலகப் பற்றுகளும் தான் தடையாக இருக்கின்றன.

**கேள்வி: 'ஞானம்' என்றால் என்ன?**

**பதில்:** உள்ளது உள்ளபடி தன்னை யார் என்று உணர்வது ஞானம்.

**கேள்வி: தூய எண்ணத்திற்கும், ஆன்மிகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?**

**பதில்:** தூய எண்ணம் ஒவ்வொன்றும் இறைவனிடம் செய்யப்படும் பிரார்த்தனை போன்றது. மனம் தூய்மையாக இருந்தால் தான் எந்தப் பாவமும் நம்மை அணுகாது.

**கேள்வி: ஆன்மீக வாழ்க்கைக்கு உடல் தூய்மை முக்கியமா, உள்ளத் தூய்மை முக்கியமா?**

**பதில்:** பறவையின் இரண்டு சிறகுகள் போல, உடல் தூய்மை - உள்ளத்தூய்மை ஆகிய இரண்டுக்கும் ஆன்மீக வாழ்க்கையில் முக்கியத்துவம் இருக்கிறது என்பது தான் உண்மை.

எனினும் ஒப்பிடுவது என்று வந்தால், உள்ளத் தூய்மைக்கே முதலிடம் அமையும். இராமனிடம் சரண் புகுவதற்கு முன்பு விபீஷணன் நீராடிவிட்டு வரவில்லை; கீதையைக் கேட்பதற்கு முன்பு அர்ஜுனன் நீராடிவிட்டு வரவில்லை, அர்ஜுனன் நீராடி விட்டு வரவேண்டும் என்று கண்ணன் சொல்லவுமில்லை.

இது உள்ளத்தூய்மையே மிகவும் முக்கியம் என்பதை உணர்த்துகிறது.

**கேள்வி: மனதை அடக்குவது எப்படி?**

**பதில்:** மனதை அடக்குவது, அல்லது வெற்றி கொள்வது என்பது ஒரே நாளில் கைகூடாது. மீண்டும் மீண்டும், பயிற்சி செய்து, பயிற்சி செய்து தான் - மனதை இறைவனிடம் ஒருமுகப்படுத்துவதன் மூலம் - மன அடக்கம் பெற இயலும்.

மனதை வெற்றி கொள்வதற்குச் சிலருக்குச் சில ஆண்டுகள் ஆகும்; பலருக்குப் பல ஆண்டுகள் ஏன், பல பிறவிகள் கூட ஆகும். ''பயிற்சியாலும், வைராக்கியத்தாலும் மனதை அடக்க முடியும்'' என்று, கீதையில் கண்ணன் அருளியுள்ளார்.

மன அடக்கம் பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்வதால், இடைவிடாமல் மன அடக்கப் பயிற்சியை நாம் மேற்கொண்டிருக்க வேண்டும். மனம் தூய்மை பெறுமளவிற்கு, மனம் உள்முகமாகத் திரும்புகிறது.

**கேள்வி: 'யோகி' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?**

**பதில்:** யோகி என்ற சொல்



1. மனதைக் கட்டுப்படுத்தியவர்

2. மனதை இறைவனிடம் நிலை நிறுத்தியவர் ஆகிய பொருள்களைக் கொண்டது.

**கேள்வி: புலனடக்கத்திற்கும், ஆன்மீகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?**

**பதில்:** பொதுவாக மனிதன் குறைபாடு உள்ளவன், ஐம்புலன்களுக்கு அடிமையானவன். ஐம்புலன்களின் அடக்கத்திற்கேற்ப, ஒருவரிடம் மனக்கட்டுப்பாடு வளர்கிறது. புலனடக்கம் இல்லாத எவரும் மெய் ஞானம் பெற இயலாது.

**கேள்வி: மனதை இறைவனிடம் ஒருமுகப் படுத்த இயலாததற்கு என்ன காரணம்?**

**பதில்:** ஐம்புலன்கள் வஞ்சனை செய்வதால், மனம் இறைவனை விட்டு விலகிச் செல்கிறது. மனிதன், ஐம்புலனடக்கத்தால் தன்னைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

**கேள்வி: ஐம்புலன்களை அடக்குவது எப்படி?**

**பதில்:** இறைவனையும் அறத்தையும் பாதுகாப்பாகக் கொண்டால், ஐம்புலனடக்கம் தானாகவே அமைந்துவிடும். புலனின்பம் மனித வாழ்க்கையின் இலட்சியமல்ல; ஞானம் பெறுவது தான் மனித வாழ்க்கையின் ஒரே இலட்சியம்.

மேலும், மனநிம்மதி என்பது கானல் நீர் என்பது போல் - புலனின்பங்களின் பின்னால் ஓடும். மனிதனை விட்டு விலகி விலகிச் சென்றபடியே இருக்கும்.

**கேள்வி: 'தர்ம காரியம்' என்பதற்கு என்ன இலக்கணம்?**

**பதில்:** சமூக நலனுக்கு உதவுபவை அனைத்தும் தர்மச்செயலே, அறச்செயலே ஆகும். மனிதராகப் பிறந்தவர் ஒவ்வொருவரும், ஏதேனும் ஒரு விதத்தில் உலகிற்குக் கடன்பட்டவர்களே ஆவர்.

**கேள்வி: ஞானம், அஞ்ஞானம் ஆகிய இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை என்ன ?**

**பதில்:** நீரும், நெருப்பும் தம்மில் வேறுபட்டவை, மாறுபட்டவை. அதுபோல் ஞானமும், அஞ்ஞானமும் வேறுபட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதாரி ஆண்டு
ஆனி மாதம்
[15.06.08 முதல் 15.07.08 வரை]

(மூலம் 1,2,3,4 பாதங்கள்,
பூராடம் 1,2,3,4 பாதங்கள்,
உத்திராடம் 1 ஆம் பாதம்)

(பெயரின் முதல் எழுத்து
யே-யோ-ப-பி-பூ-த- ப-ட-பே
உடையவர்களுக்கும்)

## தன்னம்பிக்கையும் தைரியமும் நிறைந்த தனுசு ராசி நேயர்களே!




உங்களின் ராசிநாதனான குரு, குடும்ப உறவுகளின் நெருக்கத்தை அதிகரிப்பார். நீண்ட நாட்களாக குழந்தைப் பேறில்லாதவர்கள் இல்லத்தில் மழலை தவழும் யோகம் உண்டாகும்.

**பெண்களுக்கு:**

உங்கள் ராசியில் இருக்கும் குரு சிறிது அலைச்சலைத் தந்தாலும், மங்கள காரியங்களை மகிழ்வுடன் நிறைவேற்றி விடுவார். இரவல் நகை போட்ட நிலை மாறி, உங்களுடைய சொந்த நகைகளை அணிந்து மகிழும் காலமிது!

குடும்ப ஸ்தானத்தில் ராகு இருப்பதால், வாக்குவாதங்களை விலக்குவது நல்லது. நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற உகந்த காலமிது. ஆறாம் இடத்தில் உள்ள புதன், பிறருக்கு உங்களின் அருமையையும், பெருமையையும் உணர்த்துவார். ஸப்தம ஸ்தானத்தில் உள்ள சூரியனுடன் ஜூலை 7 வரை சுக்ரனும் இணைந்திருக்கும் காரணத்தால், செலவுகளுக்காக உங்களின் சேமிப்பு கரையும்.

ஜூலை 8ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானம் செல்லும் சுக்ரன் கலகலப்பான குடும்ப சூழலை உருவாக்குவார். சொந்த பந்தங்களின் வரவு மகிழ்ச்சிக்கு அடித்தளமாய் அமையும்.

ஜூன் 21 வரை அஷ்டமத்தில் செவ்வாயுடன் இருக்கும் கேது, இரத்த சம்பந்தமான உபாதைகளைத் தோற்றுவிப்பார். அதன் பிறகு செவ்வாய் 9-ல் அமர்வதால், தலைசுற்றல், மயக்கம் ஆகியவை வராதவாறு உணவில் கட்டுப்பாடாய் இருங்கள்.

சனி 9இல் இருப்பதால், குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் வந்தாலும், அதனை திறம்பட சமாளிக்க வேண்டியிருக்கும்.

**மாணவர்களுக்கு:**

தேடி வரும் வாய்ப்பை குரு தக்கவைத்து விடுவார். உங்கள் கௌரவத்தினை உயர்த்தும் செயல்களைச் செய்து, பிறரையும் கை தூக்கி விடுவீர்கள்.

ராகு வாக்கு ஸ்தானத்தில் இடம் பெற்றிருப்பதால், பேச்சில் கடுமை கூடாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். புதனின் அருளால், நட்புக்கு தனி மரியாதை கிடைக்கும். தள்ளிப் போட்டு வந்த காரியங்கள் உடன் முடியும்.

ஸப்தம ஸ்தானத்தில் உள்ள சூரியனுடன் ஜூலை 7 வரை சுக்ரனும் இருக்கிறார். மூன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று என்பது போல், எவ்வளவு பணம் வந்தாலும் செலவாகிவிடும்.

ஜூலை எட்டு முதல் சுக்ரன் எட்டில் இருப்பதால், எட்டிப் பார்க்கும் இடமெல்லாம் இனிய அனுபவம் வந்து சேரும். ஜூன் 21 வரை, அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாயுடன் கேது இருப்பதால், இரசாயனம் தொடர்பான செய்முறைகளில், எச்சரிக்கையாய் இருந்தால், சிறு காயங்களைத் தவிர்க்க முடியும்.

சனி 9இல் இருப்பதால், மூத்தவரிடம் இணக்கமாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.



### பணிபுரிபவர்களுக்கு:

உங்களின் பொருளாதார பிரச்சினைகளுக்கு குரு முற்றுப் புள்ளி வைத்து விடுவார். தொழிலில் ஸ்திரத் தன்மை ஏற்படும். நிகழும் மாற்றங்கள் நன்மையைக் கூட்டுவிக்கும். சிலர் அயல்நாடுகளுக்கு சென்று வருவார்கள். ராகு 2இல் இருப்பதால், பண பரிமாற்றத்தில் விழிப்புடன் இருங்கள்.

உங்களுக்கு கிடைக்க வேண்டிய நல்லதை சிலர் தடுக்க முயல்வார்கள். ஆறில் உள்ள புதன் எதிர்ப்புகளை முறியடித்து, உயர்ந்த பதவியில் அமர்த்தி வைப்பார். உங்கள் சொல்லிற்கு தகுந்த மரியாதை இருக்கும். நியாயமாக வர வேண்டிய சம்பள உயர்வு தானே வந்து சேரும்.

7ஆம் இடத்தில் ஜூலை 7 வரை சூரியனுடன் சுக்ரன் இருப்பதால், உயரதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாகும். ஜூலை 8ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானம் செல்லும் சுக்ரன் தன் பங்குக்கு கேளிக்கை, கொண்டாட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ள வைப்பதுடன் பரிசுகளையும் பெற்றுத் தருவார்.

பிறர் மெச்சும் வண்ணம் அழகான உடைகளை தேர்வு செய்வீர்கள். ஜூன் 21 வரை 8இல் உள்ள கேதுவுடன் செவ்வாயும் இருப்பதால், வெளியூர் பயணங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடும்.

எனவே எச்சரிக்கையாய் பயணம் செய்தல் அவசியம். ஜூன் 22 முதல் செவ்வாய் 9இல் உள்ள சனியுடன் தங்குவதால், உங்களுக்கு எதிரான சக்திகள் வலுப்பெறும். உறுதியுடன் இருந்து வாருங்கள். உழைப்பிற்குரிய பலன் தானே தேடி வரும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:

உடலில் நீண்ட காலமாய் இருந்த நோயை குரு தீர்த்திடுவார். உங்களின் பழைய பொலிவான தோற்றத்தைப் பெறுவீர்கள். மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி கொப்பளிக்கும். இல்லத்தில் நேச இழைகள் நெருங்கி வரும்.

ராகு 2இல் இருப்பதால், குடும்பத்தினரின் தேவைக்ளைப் பூர்த்தி செய்வதில் அலட்சியம் வேண்டாம்.

வெளியில் இருந்தாலும், பிறர் மூலம் அவர்களின் பணிகளை முடித்துவிட்டால், அமைதியான சூழல் உங்களின் சிந்தனைக்கு சாதகமாய் இருக்கும். புதன் 6-ல் இருப்பதால், பாராமுகம் காட்டியவர்களும் பிரியத்துடன் பழகி வருவார்கள். உங்களின் உதவி நாடி வருவார்கள்.

ஸப்தம ஸ்தானத்தில் உள்ள சூரியனுடன் ஜூலை 7 வரை சுக்ரனும் இணைந்திருக்கும் காரணத்தால், கனிவாகப் பேசி உங்கள் காரியங்களை முடித்துக் கொள்ளுங்கள். முன்பின் யோசியாமல் எந்த வேலையிலும் இறங்காதீர்கள்.

ஜூலை 8ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானம் செல்லும் சுக்ரன், இல்லத்தை அழகு படுத்தும் முயற்சியை மேற்கொள்ளச்செய்வார். பார்த்து பார்த்து அலங்காரப் பொருட்களை தேர்ந்தெடுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீர்கள். இல்லம் நவீனமயமாய் காட்சியளிக்கும். ஜூன் 21 வரை 8-ல் உள்ள கேதுவுடன் செவ்வாயும் இருப்பதால், பண சம்பந்தமான விஷயங்களை உங்களின் நேரடிப் பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஜூன் 22 முதல் செவ்வாய் 9-ல் உள்ள சனியுடன் இருக்கும் காரணத்தால், நண்பர்கள் உங்களை எதிரிகளாய் பார்க்கும் நிலை உண்டாகும். எனவே அனைவரையும் அனுசரித்துச் செல்லுங்கள்.

**வியாபாரிகளுக்கு:**

உங்கள் ராசியில் உள்ள குரு, வியாபார விருத்திக்கான வசதிகளை மேம்படுத்துவார். உற்சாகத்துடனும், தெம்புடனும் பணியாற்றுவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உங்களின் சின்ன சின்ன ஆசைகள் நிறைவேறும்.

ராகு வாக்கு ஸ்தானத்தில் இருப்பதால், நிதானமாகப் பேசி நினைத்த காரியத்தை பக்குவமாக முடித்துக் கொள்வது உங்கள் கையில் உள்ளது. உங்களுக்கு வரும் ஒப்பந்தங்களை சிலர் குறுக்கு வழியில் தட்டிப் பறிப்பார்கள்.

எனினும் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்கள் வசமே இருப்பார்கள். புதன் ஆறில் இருப்பதால், எதிர்ப்புகள் ஏதுமின்றி புதிய பதவியில் அமர்வீர்கள். குறை கூறியவர்களே உங்களுக்கு கை கட்டி சேவகம் புரிவார்கள்.

ஸப்தம ஸ்தானத்தில் உள்ள சூரியனுடன் ஜூலை 7 வரை சுக்ரனும் இணைந்திருப்பதால், விலை உயர்ந்த சாதனங்களை விவரமறிந்தவரிடம் கொடுத்து. பழுது பார்த்தால், வீண் செலவுகள் அதிகரிக்காது.

ஜூலை எட்டு முதல் சுக்ரன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து கொண்டு, புதிய ஒப்பந்தங்களை இலகுவாக வாங்கித் தருவார். பெரிய மனிதர்களின் சகாயத்தால், லாபம் வரும் வழிகள் மேலும் உயரும்.

ஜூன் 21 வரை 8-ல் உள்ள கேதுவுடன் செவ்வாயும் இருப்பதால், நயமாகப் பேசியே, பணியாளர்களிடம் வேலையை வாங்கிக் கொள்ளுங்கள்.

ஜூன் 22 முதல் செவ்வாய் 9-ல் உள்ள சனியுடன் இருப்பதால், தொலைதூர சரக்கு பரிமாற்றங்களுக்கு உரிய பாதுகாப்பை செம்மையாய் செய்து விட்டால் நஷ்டம் உங்கள் கையைக் கடிக்காது.

**கலைஞர்களுக்கு:**

குருவின் அருளால் ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் உங்களின் திறமையை பட்டை தீட்டிய வைரமாய் பிரகாசிக்கச் செய்யும். முன்னேற்றத்தில் இருந்த தேக்க நிலை மாறி பரபரப்புடன் செயல்படுவீர்கள். சிலர் அரசு விருதுகளையும், பட்டங்களையும் பெறும் நேரம் கூடி வரும்.

ராகு 2இல் இருப்பதால், பழகிய நண்பர்களின் சொல்லுக்கு கட்டுப்படும் நிலையும், அதனால் வருத்தமும் ஏற்படக் கூடும். மன்னிக்கவும், மறக்கவும் கற்றுக் கொண்டால், துன்பங்களும் தூசி போலாகி விடும். புதன் ஆறில் இருப்பதால், புதிய துறையில் கால் பதித்து, அதில் சாதனையும் செய்யும் பாக்கியம் கிடைக்கும்.

உங்களைக் கண்டு எட்டிச் சென்றவர்கள், சொந்தம் கொண்டாட வருவார்கள். ஸப்தம ஸ்தானத்தில் உள்ள சூரியனுடன் ஜூலை 7 வரை சுக்ரனும் இருப்பதால், வீண் சந்தேகங்களை வளர்த்துக் கொண்டு அவதிப்படாதீர்கள்.

நம்பிக்கையின் அடிப்படையில்தான் நல்ல உறவு மலரும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஜூலை 8 முதல் சுக்ரன் 8-ல் இருப்பதால், இது வரை எட்டாக் கனியாய் இருந்தவைகள் உங்கள் கரங்களில் வந்து சேரும். பெண் கலைஞர்களின் ஆதரவும் உங்களை உற்சாகப்படுத்தும். இந்த மாதம் செவ்வாய் 8இல் ஜூன் 22 முதல் 9இல் உள்ள சனியுடன் இருப்பதால், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று அலையாமல் அடக்கத்துடன் இருந்தால், நற்பெயரை தக்க வைத்துக் கொள்வது எளிது.

**இந்த மாதம் தனுசு ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

03-07-2008 மணி 27.56 முதல் 06-07-2008 06.06 மணி வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**மூலம் 1, 2, 3, 4 பாதங்கள்:**

விரும்பியவரையே மணந்து கொண்டு புது வாழ்க்கை தொடங்குவீர்கள்.

**பூராடம் 1, 2, 3, 4 பாதங்கள்:**

ஆரோக்கியம் என்னும் செல்வம் உங்களிடம் இருப்பதால், மற்றவை தானே வந்து சேரும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:**

உபத்திரவம் தந்தவர்கள், விலகி விடுவதால், உங்களின் செயலாற்றல் மேலும் சிறப்பாக இருக்கும்.

**பரிகாரங்கள்:**

செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கை துதி பாடி வாருங்கள். ராகுவால் வளம் பல சேரும். சூரியனையும், சுக்ரனையும் முறைப்படி வழிபட்டு வந்தால், செம்மையான வாழ்வு நிச்சயம் உண்டு.

சனிக்கிழமைகளில் அனுமனை ஆராதித்து வர, சனியும் உளம் குளிர்ந்து நல்வழி காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு

## ஆனி மாதம்

### [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(உத்ராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம் 1,2,3,4 பாதங்கள், அவிட்டம் 1,2 பாதங்கள்)**

(பெயரின் முதல் எழுத்து போ-ஜ-ஜி-கி-கு-கே-கோ-க-கீ உடையவர்களுக்கும்)

## பொறுமை நிறைந்த சனியின் ஆதிக்கத்தில் இருக்கும் மகர ராசி நேயர்களே!




சங்கு சுட்டாலும் வெண்மை தருவது போல, சோதனைகளை சாதனைகளாய் மாற்றும் திறன் உங்களுக்கு உண்டு.

**பெண்களுக்கு:**

இந்த மாதம் 6இல் உள்ள சூரியன் திடமான ஆரோக்கியத்தை அளிப்பார். உங்களின் கடின உழைப்பால் குடும்பம் உயர்வான நிலையில் இருக்கும். ஜூலை 7 வரை சுக்ரன் 6இல் இருந்து சில சிக்கல்களைத் தந்தாலும், யாரும் உங்களை ஏமாற்ற முடியாது. ஜூலை 8 முதல் சுக்ரன் ஏழாமிடம் சென்று அங்குள்ள கேதுவோடு இணைவதால், நடைமுறைக்கேற்றவாறு நடந்தால், அனைவரும் உங்களை பாராட்டி மகிழ்வார்கள். கணவரின் ஆரோக்கியத்தில் விசேஷ கவனம் செலுத்தி வந்தால், நினைத்தபோது வெளியிடங்களுக்குச் செல்ல முடியும்.

செவ்வாயும் ஜூன் 21 வரை 7இல் இருப்பதாலும், சூடான வாக்குவாதங்களைத் தவிர்த்தல் நல்லது. ஜூன் 22 முதல் செவ்வாய் 8ஆம் இடம் செல்வதாலும், அங்குள்ள சனியுடன் சேர்ந்து இருப்பதால், உங்கள் உடல் நலத்தில் தோன்றும் சிறிய உபாதைகளை அவ்வப்போது கவனித்தால், மருத்துவச் செலவுகள் கணிசமாய் குறைந்து விடும். உங்களின் உழைப்பால் குடும்பம் உயர்வான நிலையில் இருக்கும்.

ராகு உங்கள் ராசியில் இருப்பதால், பணியின் பளு அதிகரிக்கும். குரு 12இல் இருப்பதால், ஆன்மீகப் பணிகளில் அதிக ஈடுபாடு கொள்வீர்கள். உங்கள் பக்தியும் ஆழமாக வளரும். புதன் ஐந்தில் இருப்பதால், ஐயப்பாடு இன்றி ஆலோசனை செய்த பின் முடிவெடுத்தால் அலைய நேரிடாது.

**மாணவர்களுக்கு:**

சூரியன் ஆறில் இருப்பதன் பலனாக, எதிரியாய் இருந்தவர்களும் நட்பு பாராட்டும் சூழல் உருவாகும். பழைய பகைகளை மறந்து விட்டு, உறவுகளை புதுப்பித்துக் கொள்வார்கள். அங்கேயே உள்ள சுக்ரன், சிறிது தொய்வைத் தந்தாலும், படிப்பிற்கு எந்த பாதகமும் ஏற்படாது. ஜூலை 8 முதல் சுக்ரன் ஏழாமிடம் சென்று அங்குள்ள கேதுவோடு இணைவதால், கேளிக்கை, உல்லாசம் ஆகியவற்றைத் தவிர்த்து, பாடங்களில் உரிய கவனம் செலுத்தி வந்தால், மதிப்பெண் பெறுவது எளிதாக் இருக்கும்.

செவ்வாயும் ஜூன் 21 வரை 7இல் இருப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், வம்புதும்புகளுக்கு போகாமல் இருந்தால், எவர் முன்னும் சிரம் தாழ்த்த வேண்டியிராது.

ஜூன் 22 முதல் செவ்வாய் 8ஆம் இடத்தில் உள்ள சனியோடு சேர்வதால், துஷ்டரைக் கண்டவுடன் தூர விலகி விடுங்கள். ராகு உங்கள் ராசியில் இருப்பதால், புதிய வாகனங்கள் வாங்குவதைத் தள்ளி வைப்பது நலம். 12இல் உள்ள குருவால், ஆசிரியர்களின் கண்டிப் பிற்கு ஆளாக வேண்டியிருக்கும்.

**பணிபுரிபவர்களுக்கு:**

ஆறில் உள்ள சூரியன் விரும்பிய மாற்றங்களைத் தந்திடுவார். மேலதிகாரிகளின் ஆதரவால், ஆதாயங்கள் கிடைக்கும். 6இல் உள்ள சுக்ரன், ஆடம்பர செலவுகளை அதிகமாக்குவார். ஜூலை 8 முதல் சுக்ரன் 7இல் உள்ள கேதுவோடு இருப்பதால், வெளியிடங்களில், சொந்த விஷயங்களை அலசாதீர்கள். சட்டென்று எவரையும் நம்பி செயலில் இறங்காதிருப்பது சாலச் சிறந்தது.

ராகு உங்கள் ராசியில் அமர்ந்திருப்பதால், உங்கள் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை வெளியிடுவதில் கவனம் தேவை. செவ்வாயும் ஜூன் 21 வரை 7இல் இருப்பதால், எதிர்பாராத தடைகள் வந்து விலகும். ஜூன் 22 முதல் செவ்வாய் 8ஆம் இடம் சென்று சனியுடன் இருப்பதால், நம்பிக்கைக்கு பாத்திரமான பதவிகளில் இருப்பவர்கள், ரகசியங்கள் வெளியே கசியாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

ராசியில் உள்ள ராகு சில சமயம் எரிச்சலையும், பதற்றத்தையும் தோற்றுவிப்பார். பொறுமை காத்தால், வெற்றி உங்களதே! 12இல் உள்ள குரு பல பயணங்களை மேற்கொள்ளச் செய்து, ஓய்வில்லாமல் சுழல விடுவார்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**



ராகு ராசியில் இருப்பதால், நாவடக்கமும், மனவடக்கமும் மிக முக்கியம். பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடக்கும் காலமிது. எதிரிகளிடமிருந்து தள்ளியே இருங்கள். சூரியன் ஆறில் இருப்பதால், சுணக்கமும், சோம்பலும் விலகி விடும். உள்ளத்தில் தன்னம்பிக்கை துளிர் விடும். சுக்ரனும் ஜூலை 7 வரை ஆறில் இருப்பதால், பெண்களால், செலவினங்கள் அதிகரிக்கும்.

ஜூலை 8 முதல் சுக்ரன் 7இல் உள்ள கேதுவோடு சஞ்சரிப்பதால், இல்லத்தில் பனிப்போர் நிலவும். ஆபத்தான இடங்களுக்கு தனியாகச் செல்வதைத் தவிர்க்கவும். உங்கள் மேல் அக்கறை உள்ளவர்களின் ஆலோசனைகள் தகுந்த சமயத்தில் கை கொடுக்கும். செவ்வாயும் ஜூன் 21 வரை 7இல் இருப்பதால், இல்லத்தில் விலை உயர்ந்த பொருள்களை பாதுகாப்பாக வைப்பது நல்லது.

ஜூன் 22 முதல் செவ்வாய் 8ஆம் இடத்தில் உள்ள சனியுடன் இருப்பதால், சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது. ஆறில் உள்ள சூரியனால், உங்கள் பணியை மெச்சும் விதமாக நற்சான்றிதழ்கள் கிடைக்கப் பெறும். வியாபாரக் கூட்டங்களில், கௌரவப் பதவிகளை வகிக்கும் வாய்ப்பும் வரும். குரு 12இல் சஞ்சரிப்பதால், கொடுக்கல் - வாங்கலில் நிதானத்தைக் கடைப்பிடித்து வாருங்கள்.

**கலைஞர்களுக்கு:**

ராகு உங்கள் ராசியில் இருப்பதால், சோம்பலால் பணிகளை ஒத்திப் போட்டு, பிறகு அவசர கதியில் செயலாற்ற வேண்டியிருக்கும். சூரியன் ஆறில் இருப்பதால், எல்லா வசதிகள் வந்தாலும், அதனை அனுபவிப்பதில், சில தடைகளை சுக்ரன் ஏற்படுத்துவார். ஜூலை 8 முதல் சுக்ரன் 7இல் உள்ள கேதுவோடு இருப்பதால், கருத்துப் பரிமாற்றம் செய்யும் போது மோதல்கள் ஏற்படக் கூடும். எனவே பேச்சில் குளுமை குறையாமல் இருப்பது அவசியம்.

செவ்வாயும் ஜூன் 21 வரை 7இல் இருப்பதால், வாகனங்களில் தனியாக பயணம் செல்வதைக் குறைப்பது நல்லது. குடும்பத்தில், அடுத்தவரின் தலையீட்டால், குழப்பங்கள் உருவாகும். எந்த சூழலிலும், பொறுமையாய் இருங்கள். தேவையற்ற விவகாரங்களுக்காக பாடுபடும் நிலைமை உருவாகாதவாறு உங்கள் செயல்களையும், பணிகளையும் சீரமைத்துக் கொள்ளுங்கள். ஜூன் 22 முதல் செவ்வாய் 8ஆம் இடத்தில் உள்ள சனியுடன் இருப்பதால், ஊதாரித்தனமாக செலவு செய்வதை குறைத்து, உங்களது சேமிப்பில், பிரத்தியேக கவனம் செலுத்தி வாருங்கள். 12இல் உள்ள குருவால், பணப் புழக்கத்தில் ஏற்றத்தை விட இறக்கங்கள் அதிகமாக காணப்படும்.

**இந்த மாதம் மகர ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திராஷ்டம நாட்கள்:**

06-07-2008 மணி 06.07 முதல் 08-07-2008 11.47 மணி வரை

**நட்சத்திரப் பலன்கள்:**

**உத்ராடம் 2, 3, 4 பாதங்கள்:**

எதிர்பார்த்த விதமாக காரியங்கள் வேகமாக நடப்பது போல் இருந்தாலும், மந்த கதியிலேயே செல்வதை நீங்கள் உணருவீர்கள். நற்பலன்களைப் பெற கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

சட்டத்துக்கு புறம்பான வழிகளை நினைத்தும் பாராமலிருப்பது நல்லது. உங்கள் பேச்சில் ஆணவம் இழையோடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**பூராடம் 1, 2, 3, 4 பாதங்கள்:**

பெற்றோரிடம் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் இருந்தால், அவர்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ள வேண்டியிராது. நம்பகத்தன்மை இல்லாதவரின் சகவாசத்தை விலக்கி விடுங்கள்.

பிள்ளைகளால் மனக்கிலேசம் ஏற்படும். இதமாக நடந்து கொண்டால், உங்கள் பக்கம் வர வாய்ப்பிருக்கிறது. எங்கு இருந்தாலும், உறவுகளின் இழைகள் விலகாதவாறு நடந்து கொண்டால் உறவுகள் உங்கள் அருகிலேயே இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பணியில் சுணக்கம் ஏற்படும்.

**அவிட்டம் 1, 2 பாதங்கள்:**

கோபத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டால், தொந்தரவுகள் பாதிக்குப் பாதியாய் குறைந்து விடும்.

சக மாணவரிடம் படிப்பைத் தவிர மற்ற விஷயங்களில் போட்டியிடாமலிருப்பது அவசியம்.



**பரிகாரங்கள்:**

ராகு காலத்தில் துர்க்கையை பூஜித்து வர, குடும்பத்தில் அமைதி நிலவும். விநாயகருக்கு அர்ச்சனை செய்து வந்தால் சனி, கேது இருவரும் நற்பலன்களைக் கூட்டுவிப்பார்கள்.

செவ்வாய், சூரியன், சுக்ரன் - மூவரையும் முறையாகத் தொழுதால், குறைகளைக் களைந்து சுபிட்சமாய் வாழ வைப்பார்கள்.

# ராகு காலம் பார்ப்பது எப்படி?

ராகு காலத்தைக் கண்டுபிடிப்பது வெகுசுலபம். 'தினமும் சலிப்பின்றி' வெறுப்பின்றி புத்தியோடும் வினயத்தோடும் செயலாற்றுவதே ஞானம்' என்னும் வாசகத்தை நினைவில் வைத்துக் கொண்டால் போதும். ஒவ்வொரு வார்த்தையின் முதல் எழுத்தில் துவங்கும் கிழமைக்கு ராகு காலத்தைக் கண்டுபிடித்து விடலாம்.

**தினமும் - திங்கள் - காலை 7.30 - 9.00**
**சலிப்பின்றி - சனி - காலை 9.00 - 10.30**
**வெறுப்பின்றி - வெள்ளி - காலை 10.30 - 12.00**
**புத்தியோடும் - புதன் - பிற்பகல் 12.00 - 1.30**
**வினயத்தோடும் - வியாழன் - பிற்பகல் 1.30 - 3.00**
**செயலாற்றுவதே - செவ்வாய் - பிற்பகல் 3.00 - 4.30**
**ஞானம் - ஞாயிறு - மாலை 4.30 - 6.00**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதாரி ஆண்டு ஆனி மாதம்

## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(அவிட்டம் 3,4 பாதங்கள்,
சதயம் 1,2,3,4 பாதங்கள்,
பூரட்டாதி 1,2,3 பாதங்கள்.)**

**(பெயரின் முதல் எழுத்து
கு-கே-கோ-ஸ- ஸி-ஸு-ஸே-ஸோ-தா
உடையவர்களுக்கும்)**

## எதிரிக்கும் உதவும் உயர்ந்த குணம் உடைய கும்ப ராசி நேயர்களே!




உங்களின் திறமையை நிரூபித்துக் காட்டும் வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி பலனடைவீர்கள். புதிய சாதனை கள் செய்யும் காலமிது. உங்கள் எண்ணத்திலும், செயலிலும் புதிய விரும்பத் தகுந்த மாற்றங்கள் ஏற்படும்.

**பெண்களுக்கு:**

அன்பானவர்களை சந்தித்தல், இனிய பயணங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை 11இல் உள்ள குரு வழங்குவார். குடும்ப வசதிகள் மேலும் உயரும்.

தங்க நகைகளை வாங்கி உங்களை அழகு படுத்திக் கொள்வீர்கள். இல்லத்தில் புதிய வருகைகளால் பரபரப்பும், குதூகலமும் நிறைந்திருக்கும். குடும்பத் தேவைகள் விரைவில் பூர்த்தியாகிவிடும். கையில் மிஞ்சும் பணத்தை சேமிப்பில் போட்டு வைப்பீர்கள். ஜூலை 6ஆம் திகதி வரை 4இல் உள்ள புதனும், இல்லத்திலும், மனத்திலும் மகிழ்ச்சியை ததும்பிடச் செய்வார்.

இனிய அனுபவங்கள், விருந்து ஆகியவற்றால் அங்கும், இங்கும் சந்தோஷமாக அலைந்து கொண்டிருப்பீர்கள். ஜூலை 7 முதல் பஞ்சம ஸ்தானம் செல்வதால், பிறரிடம் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ளாதீர்கள்.

சூரியனும், இந்த மாதம் பஞ்சம இடத்தில் நிற்பதால், பிள்ளைகள் தரும் செலவுப்பட்டியல் உங்களை தலையை சுற்ற வைக்கும்.

5இல் உள்ள சுக்ரனால், பெண்களின் திறமை வெளிச்சத்திற்கு வரும். சுய தொழில் புரியும் பெண்களுக்கு, சிறந்த எதிர்காலம் அமையும். 6இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், போட்டிகளில் வெற்றி பெறுவது உறுதி.

ஜூன் 22 முதல் 7இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், சிலருக்கு எலும்பு சம்பந்தமான கோளாறுகள் ஏற்படும்.

**மாணவர்களுக்கு:**

சொந்தக்காலில் நிற்கும் துணிவை குருவின் பார்வை தரும். ஏனோதானோவென்று இருந்த நிலை மாறி, அலங்கார விஷயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

உங்களின் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றி, ஆசிரியரிடம் நற்பெயர் எடுப்பீர்கள். ஜூலை 6ஆம் திகதி வரை 4ல் உள்ள புதனும், உங்களுக்கு சாதகமாக இருப்பதால், உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் மழைதான்! துவங்கும் முயற்சிகள் வெற்றியாக முடியும்.

ஜூலை 7 முதல் புதன் பஞ்சம ஸ்தானம் செல்வதால், புதிய பாடங்களுக்கு தகுந்த செய்திகளை முன்கூட்டியே சேகரித்து வைத்துக் கொள்வது நல்லது. சூரியனும் இந்த மாதம் 5இல் இருப்பதால் தந்தையின் உடல்நலத்தில் அக்கறைகாட்டி வந்தால், ஆரோக்கிய நலிவு ஏற்படாது.



5இல் உள்ள சுக்ரனால், புதிய வகை மொபைல் போன் உங்கள் வசமாகும். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து அங்கும் இங்கும் அணி வகுப்பு நடத்துவீர்கள். 6இல் உள்ள கேதுவுடன் அணிந்து, ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், கேளிக்கை, கிண்டல் என்று மகிழ்வுடன் பொழுது போகும்.

ஜூன் 22 முதல் 7இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், சிலருக்கு சளித் தொந்தரவுகள் தலைகாட்டும்.

### பணி புரிபவர்களுக்கு:

இந்த மாதம் குருவின் சகாயத்தால், உங்களின் புகழ், திறமை அனைத்தும் பிறரின் கவனத்தை ஈர்க்கும் விதமாக அமையும்.

நீங்கள் எடுக்கும் முயற்சி யாவும் நினைத்த மாதிரியே நடப்பதால், உங்களின் மகிழ்ச்சிக்கு எல்லை இராது. உங்களின் பொறுப்பை நிறைவேற்றுவதில் தனி ஆர்வம் காட்டுவீர்கள்.

ஜூலை 6ஆம் திகதி வரை 4இல் உள்ள புதனும், உங்களுக்கு சாதகமாய் இருப்பதால், தேங்கிக் கிடந்த அலுவலகப் பணிகளும் சடுதியில் முடியும்.

சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் பிரமாதமாக இருக்கும். ஜூலை 7 முதல் புதன் 5ஆம் இடம் செல்வதால், சிலர் நரம்பு சம்பந்தமான உபத்திரங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே முறையான சாப்பாடு, தூக்கம் ஆகியவை கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

5இல் உள்ள சுக்ரன் உங்களின் கவர்ச்சியை அதிகரிப்பார். எல்லோரும் உங்களையே சுற்றி சுற்றி வருவார்கள். 6இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், உங்களின் பணி தொடர்பான இலாக்கா புதிய அந்தஸ்தை பெறும்.

ஜூன் 22 முதல் 7இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், கோப்புகளை கவனமாகக் கையாள்வது நல்லது.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:

இதுவரை குடத்தில் இட்ட விளக்காய் இருந்த உங்கள் சாதனை, சிறகை விரித்து பறக்கும் காலமிது. இதுவரை குற்றம் குறை சொன்னவர்கள். பாராட்டு பத்திரம் படிப்பார்கள். பொதுமக்களின் ஆதரவும் உங்களுக்கு பக்கபலமாய் இருக்கும். பெண்களின் மத்தியில் உங்களின் புகழ் கூடும்.

உடனிருப்பவர்கள் உங்களின் கண் அசைவிற்கு காத்திருப்பார்கள். ஜூலை 6ஆம் திகதி வரை 4இல் உள்ள புதனும், உங்களுக்கு சாதகமாய் இருப்பதால், உங்களின் வங்கி கணக்குகளில் இருந்த சிக்கல்களும் நீங்கி விடும்.

உங்கள் மனதும் அமைதி பெறும். ஜூலை 7 முதல் புதன் 5ஆம் இடம் செல்வதால், உறவு வட்டாரங்களில் நிகழும் சுப நிகழ்ச்சிகளை ஒதுக்காமல் இருப்பது நல்லது. இல்லையெனில் உங்கள் மேல் குற்றப்பத்திரிகை வாசிப்பார்கள். 5இல் உள்ள சுக்ரன் உங்கள் உலகத்தை வலம் வரச் செய்வார்.

உங்களின் கலையார்வமும் புதிய மாற்றங்களை வரவேற்கும். 6இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், உதவி என்று கேட்டவுடன் ஏராளமான கரங்கள் நீளும். உரிய காலக்கெடுவுக்குள் உங்கள் பணியும் சிறப்பாக முடியும்.

ஜூன் 22 முதல் 7இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், குடும்ப ரகசியங்களில் பிறர் மூக்கை நீட்டாதவாறு எச்சரிக்கையாய் இருப்பது அவசியம்.

### வியாபாரிகளுக்கு:

குருவின் பலத்தால் உங்களின் நிறுவன வளர்ச்சி அபரிமிதமாய் இருக்கும். புதிய நிறுவனங்கள் உங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள காத்திருக்கும்.

உங்களின் விளம்பர யுக்தியால் வாடிக்கையாளரின் வரவும், ஆதரவும் அதிகமாகும். சிலர் வியாபாரம் தொடர்பாக சிறப்புப் பட்டங்களை பெற்று மகிழும் காலமிது.

ஜூலை 6ஆம் திகதி வரை புதனும் உங்கள் பக்கத்தில் இருப்பதால், வருமான வரி சம்பந்தமான தொந்தரவுகள் ஏதும் இராது. உங்கள் கணக்குகளும் முறையாக இருக்கும். ஜூலை 7 முதல் புதன் 5ஆம் இடம் செல்வதால், மறதியின் காரணமாக சில பொருட்களை தேடி எடுக்கும் சூழல் உருவாகும்.

பணப் பெட்டகத்தின் சாவிகளை பத்திரமாக வைத்தால், பதற்றம் இன்றி பணியாற்ற முடியும். 5ல் உள்ள சுக்ரன் உங்களின் நிறுவனத்தினை அழகுபடுத்தும் திட்டங்களை நடைமுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவார்.

நிறுவனத்தின் பொலிவு பிறரை கவர்ந்தி முக்கும். சில்லறை வியாபாரிகளுக்கு சீரான முறையில் சரக்குகளை அளிக்க முடியும். ஜூன் 22 முதல் 7இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், புதிய திட்டங்களில் குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைக்கு முதலிடம் தருவது நல்லது, கவலையின்றி இருக்கலாம்.

**கலைஞர்களுக்கு:**

உங்களின் உழைப்புக்குரிய பலனுடன், புதிய திருப்பங்களையும் குரு தருவார். உள்நாடுகளில் வெற்றிக் கொடி நாட்டியவர்கள், கடல் கடந்தும் புகழ் பரப்பப் பணம் பல மேற்கொள்வார்கள். பதுங்கிக் கிடந்த திறமைகளை பட்டை தீட்டி வைத்துக் கொள்ளுங்கள்.

சாதனையாளர் பட்டியலில் உங்கள் பெயரும் கட்டாயமாக இடம்பெறும். ஜூலை 6 வரை புதன் 4இல் இருப்பதால், சுக போக வாழ்வு உங்களைத் தேடி வரும். ஏவலாட்கள், உங்களின் குணத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்வார்கள்.

ரசிகர்களின் ஆதரவால், புதிய முயற்சிகளும், எண்ணங்களும், உங்கள் மனதில் பூத்துக் குலுங்கும். ஜூலை 7 முதல் புதன் 5ஆம் இடம் செல்வதால், பூர்வீகச் சொத்துக்களை முறையாகப் பராமரித்து வந்தால், அதிக செலவுகள் ஏற் படாது.

அதற்காக தனிப்பயிற்சிகளும் மேற் கொள்வீர்கள். இவை யாவும் முன்னேற்றத்தை நோக்கி உங்களை இட்டுச் செல்லும்.

**இந்த மாதம் கும்ப ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள் :**

08-07-08 மணி 11.47 முதல் 10-07-08 மணி 21.12 வரை.

## நட்சத்திரப் பலன்கள்

**அவிட்டம் 3,4 பாதங்கள்:**

குடும்ப மகிழ்ச்சி உங்களின் முன்னேற் றத்திற்கு ஆதரவாக இருக்கும். பாராட்டும், உறவுகளின் சீராட்டும், உங்களை உல்லாசமாய் வைத்திருக்கும்.

**சதயம் 1,2,3,4 பாதங்கள்:**

இதுவரை ஏளனப் பேச்சு பேசி வந்தவர்கள் உங்களின் உழைப்பிற்கு தலை வணங்குவார்கள்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:**

திருமணம், வளைகாப்பு, குழந்தைப்பேறு என்று சுபநிகழ்ச்சிகள் வரிசையாய் வரும்!

**பரிகாரங்கள்:**

பெருமாளின் பாதம் பற்றியவர்க்கு, புதனின் சகாயம் கட்டாயம் உண்டு.

சனி, செவ்வாய் இருவருக்கும் உரிய வழிபாட்டை செய்து வாருங்கள். பட்டபாடெல் லாம் பறந்துவிடும்.


## சோதிட நிபுணர் குழு



**காயத்ரி பாலசுப்ரமணியன்**
8, இரண்டாவது குறுக்குத் தெரு,
மாரியம்மன் நகர், காராமணிக்குப்பம்,
புதுச்சேரி - 605 004, இந்தியா.
போன்: 0091+04132202077
e-mail: gayabala_astro@yahoo.co.in





(கண்ணன் போத்தி)
**சீ. கிருஷ்ணன்**
(+91 - 94439 70055)



யோகி ஸ்ரீ
**இராமனந்தா குரு**
(+91 - 99764 59986)



**S. சந்துரு**
B.Com., D.YHE.,
(+91 - 98947 69609)



**ஜே.என்.எஸ். செல்வம்**
(+91 - 98424 90001)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதாரி ஆண்டு
## ஆனி மாதம்
## [15.06.08 முதல் 15.07.08 வரை]

**(பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி 1, 2, 3, 4 பாதங்கள், ரேவதி 1, 2, 3, 4 பாதங்கள்)**

**(பெயரின் முதல் எழுத்து தி-து-ஞ-ச-த-தே-தோ-ச-சி உடையவர்களுக்கும்)**

# இனிமையாய் பழகும் மீன ராசி நேயர்களே!

இருக்கும். ஜூன் 21 வரை செவ்வாய் 5-ல் கேது வுடன் இருப்பதால், பிள்ளைகளிடம் பக்குவமாக நடந்துக் கொள்ளுங்கள்.

பணியின் நிமித்தம் பிள்ளைகள் வேறிடத்தில் தங்க வேண்டியிருக்கும். உள்ளத்தால் அவர்களி னருகில் இருந்தால், பிரிவுத் துயர் அவர்களை வாட்டாது. ஜூன் 22 முதல் ஆறில் உள்ள செவ்வாய், பிள்ளைகளை உயர்ந்த பதவியில் அமர்த்தி வைப்பார். அவர்களின் ஆதரவால், குடும்ப வசதிகள் மேலும் உயரும்.

ஆறில் உள்ள சனியும் அவர் பங்குக்கு புதிய இல்லத்தில் குடியேறும் பாக்கியத்தை அளிப்பார். பூர்வீகச் சொத்தும் உங்களின் வசம் வருவதால், திட்டமிட்டபடி இல்லத்தின் வசதிகளை பெருக்கிக் கொள்ள முடியும்.




உங்களின் அனுசரணையான போக்கால், அனைவரும் உங்களுக்கு உதவி புரிவார்கள். திறமையான பேச்சும், பொறுமை யும் நீங்கள் விரும்பிய வாழ்வைத் தரும்.

### பெண்களுக்கு:

உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில், ஜூலை 6 வரை புதன் இருப்பதால், அன்பானவர்களின் மத்தியில் சிறு பூசல்கள் தோன்றும். அதன் பிறகு அவர் சுக ஸ்தானமான 4-க்கு செல்வதால், சுப நிகழ்ச்சிகள் பொருட்டு இனிய பயணங்களை மேற்கொள்வீர்கள். சூரியன் 4-ல் உள்ளதால் கண்களை நல்ல முறையில் பராமரிப்பது அவ சியம். 10-ல் உள்ள குருவால், சில சஞ்சலங்கள் ஏற்பட்டாலும், குடும்ப ஒற்றுமை குலையாமல்

### மாணவர்களுக்கு:

சனி தரும் தெம்பால், சவாலான காரியங் களையும் சட்டென்று முடிக்கும் வல்லமை உண் டாகும். ஜூலை 6ஆம் திகதி வரை 3இல் புதன் உள்ளதால், உங்களுக்கு உரிய எல்லையைத் தாண்டாமலிருங்கள். பிரச்சினைகள் உங்களை அண்டாது. ஜூலை 7 முதல் புதன் சுக ஸ்தானம் செல்வதால், உங்களின் உதவிக்கு வர நல்ல இதயங்கள் தயாராய் இருக்கும்.

சூரியனும் இந்த மாதம் 4இல் இருப்பதால், உடல் நலத்தில் அலட்சியம் வேண்டாம். இந்த மாதம் 4 மற்றும் 5இல் உள்ள சுக்ரனால், உங் களின் நட்பு வட்டத்தில் இனிமையான தருணங் கள் அதிகமாகும். சொகுசான வாழ்க்கையை சுக்ரன் தந்திடுவார். சரளமான உரையாடலால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகள் எல்லாம் காணாமல் போய்விடும். 5இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், வாகனங்களின் வேகத்தை தவிர்த்து, விவேகமாக பயணம் செய்யுங்கள். ஜூன் 22 முதல் 6இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், அட்டகாசம் செய்த எதிரிகள் அடக்க ஒடுக்கமாய் இருப்பார்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சனி 6இல் இருப்பதால், நிலம் சம்பந்தமான வழக்குகள் சாதகமாக முடியும். உங்களை ஓட ஓட விரட்டியவர்களை எதிர்க்கும் துணிவு பிறக்கும். பொதுமக்களின் ஆதரவால் உங்களின் செல்வாக்கு மேலும் உயரும். இளைஞர்களின் மனதில் உங்களின் பெயர் தங்கும் விதமாக, தீரச் செயல்கள் செய்வீர்கள்.

ஜூலை 6ஆம் திகதி வரை 3இல் புதன் உள்ளதால், முறையற்ற வழிகளை நாடாமலிருப்பது நல்லது. உங்களின் நாணயம்தான் உங்களின் நற்சான்று பத்திரம் என்பதால், நேர் வழியில் செல்லுங்கள். ஜூலை 7 முதல் புதன், 4ஆம் இடம் செல்வதால், உறவு வட்டாரங்கள் உங்களோடு கை கோர்த்து பணியாற்றும். இந்த மாதம் 4 மற்றும் 5இல் உலா வரும் சுக்ரன், உங்களின் புகழையும் கீர்த்தியையும் பிறர் அறியும் வண்ணம் சாதகமான செயல்களை செய்திடுவார்.

உங்களின் அடக்கமான குணம் அனைவரையும் உங்கள் பக்கம் காந்தம் போல் ஈர்க்கும். 5இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், உங்களை நாடி வருபவர்களின் தகுதிக்கேற்ப உதவி செய்யுங்கள். உவகையுடன் உங்களை வாழ்த்தி விட்டுச் செல்வார்கள். ஜூன் 22 முதல் 6இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நல்ல பலனையும், நல்ல வாய்ப்பினையும் நல்குவார்கள்.

**வியாபாரிகளுக்கு:**

10-ல் உள்ள குருவின் சஞ்சாரத்தால், சிறிது தேக்க நிலை தோன்றும். சடுதியில் முடிய வேண்டிய காரியங்கள், தாமதமாக முடிவதால், சில சரிவுகள் ஏற்படும். சனியின் கருணையால், சாதாரணமாய் இருந்த நிலை மாறி, சிறப்பான நிறுவனம் என்கிற அளவுக்கு உங்களின் உழைப்பு இருக்கும். பணியாளர்களின் பணிவால், புதிய வாடிக்கையாளர்களின் வருகை அதிகமாகும்.

ஜூலை 6ஆம் திகதி வரை புதன் 3இல் இருப்ப தால், தக்க பரிசோதனைக்குப் பின் சரக்குகளை அனுப்புவது நல்லது. ஜூலை 7 முதல் புதன் 4ஆம் இடம் செல்வதால், சிறிய வட்டமாய் இருந்த உறவில், புதிய வரவுகள் இணைவதால் இனிமை கூடும். 4 மற்றும் 5இல் உள்ள சுக்ரன் உங்களின் நடை, மற்றும் பழக்க வழக்கங்களில் நளினத்தை புகுத்துவார்.



ஜூன் 22 முதல் 6இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், புதிய திட்டங்களில் குடும்ப உறுப்பினரின் ஆலோசனைக்கு முதலிடம் தருவது நல்லது. உங்கள் நலம் நாடுபவர்களை உங்கள் அருகிலேயே வைத்துக் கொண்டால், கவலையின்றி இருக்கலாம்.

5இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், சரக்கு போக்குவரத்தில் தவறுகள் நிகழாதவாறு கவனமாய் இருந்தால், உங்களின் நற்பெயருக்கு எந்த களங்கமும் ஏற்படாது. ஜூன் 22 முதல் 6இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், இருவரும் அவரவர் பாணியில், புதிய மனை வாங்குதல், வாகனம் வாங்குதல் ஆகியவற்றைத் தந்து, உங்களின் வசதியை உயர்த்துவார்கள்.

**கலைஞர்களுக்கு:**

பத்தில் குரு இருப்பதால், தொழிலில் சில நெருக்கடிகள் தோன்றி உங்களை அலைக் கழிக்கும். உங்களின் உழைப்புக்குரிய பலனை பிறர் அனுபவிப்பார்கள். புதிய திருப்பங்களை யும், அவற்றிற்குரிய ஆதாயத்தையும் 6-ல் உள்ள சனி தருவார். வாடகை வண்டி, வாடகை வீடு என்ற நிலை இனி இராது. சொந்த வீடு, சொகுசான சொந்த வாகனம் என்று வாழ்வில் வசந்தம் வீச வைப்பார் சனி பகவான். ஜூலை 6 வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் 3இல் இருப்பதால், சொந்த விஷயங்களுக்காக பிறர் தயவை நாட வேண்டியிருக்கும். புதிய பிரச்சினைகள் முளைக்கும். பணியாளர்கள் சிரத்தையின்றி செயலாற்றும் நிலை இருப்பதால், தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது நல்லது.

ஜூலை 7 முதல் புதன் 4ஆம் இடம் செல்வதால், உங்களின் முயற்சிகள் புதிய பரிமாணம் பெறும். ஏற்றமிகு எண்ணங்களும், அதற்கு ஆதரவாய் இருப்பதால், உயர்ந்த இலக்கை அடையும் லட்சியம் நன்றாக முடியும். 4, 5 ஆகியவற்றில் உள்ள சுக்ரனின் ஆதரவால் கலையார்வலர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கும். 5இல் உள்ள கேதுவுடன், ஜூன் 21 வரை செவ்வாய் வீற்றிருப்பதால், வதந்திகளுக்கு முக்கியத்துவம் தந்து, வம்பில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பது அவசியம். ஜூன் 22 முதல் 6இல் உள்ள சனியுடன் செவ்வாய் இருப்பதால், இருவரும் அனைத்து நற்காரியங்களுக்கும் உறுதுணையாய் இருப்பார்கள்.

**இந்த மாதம் மீன ராசிக்காரர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய சந்திராஷ்டம நாட்கள்:**

10-07-2008 21.13 மணி முதல் 13-07-2008 மணி 09.10 வரை.

## நட்சத்திரப் பலன்கள்:

**பூரட்டாதி 4ஆம் பாதம்:**

குழந்தைகளின் மூலம் உயர்வுகள் கிடைக்கும். உங்களின் கலைத்திறன் பாராட்டையும், பரிசையும் கொண்டு வரும்.

**உத்திரட்டாதி 1, 2, 3, 4 பாதங்கள்:**

வேலை கிடைக்காமல் ஏங்கிக் கொண்டிருந்தவர்கள் நல்ல பதவியில் அமர்வார்கள்.

**ரேவதி 1, 2, 3, 4 பாதங்கள்:**

எதிர்காலத் திட்டங்களை வகுத்து, அதனை நிறைவேற்ற இது உகந்த காலம்.

**பரிகாரங்கள்:**

வியாழன் தோறும் தட்சிணாமூர்த்தியை தரிசித்து வந்தால், தடைகள் யாவும் தூளாகி விடும். புதனின் அருள் கிடைக்க, பெருமாள் கோவிலுக்குச் சென்று வாருங்கள். பொலிவான வாழ்க்கை அமையும்.

# கண் திருஷ்டி விநாயகர் - குறிப்பு

மனிதனுக்கும், புற உலகிற்கான தொடர்பும் கண் என்ற உறுப்பின் மூலம் ஏற்படுகிறது. திருஷ்டி என்ற வார்த்தைக்கு 'பார்த்தல்' என்று பொருள். கண் மூலமாக மனிதன் பலவற்றைப் பார்க்கிறான். ஆதலால்தான் கண் திருஷ்டி என்று கூறுகிறோம். இந்த திருஷ்டியில் இரு வகை உண்டு. தெளிந்த மனம் உடையவர்கள், குருமார்கள், ஞானிகள் ஆகியோரின் பார்வைபட்டால், பொருள்கள் செழிப்பாகும்.



மற்றொரு வகை பொறாமையுடன் பார்த்தல். தான் அனுபவிக்காத பொருள், உணவு, உடை எதுவாயினும், அதனைப் பிறர் அனுபவிப்பதைக் காணும் போது, பெரும்பாலும் மனித மனம் அதனை எளிதில் ஜீரணித்துக் கொள்வதில்லை.

அதை நினைத்து ஏங்குகிறது, மறுகுகிறது. ஆற்றாமையால் விம்மி வெடிக்கிறது. இதன் தாக்கம், கண்களின் மூலம் எதிரே இருப்பவரைத் தாக்குகிறது. இதனைப் பலரும் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்ட தருணங்கள் எத்தனையோ.

இதிலிருந்து தப்பிக்க, மனிதன் பூசணிக்காய் உடைப்பது முதல், படிக்காரக் கல் கட்டுவது வரை எத்தனையோ செய்து வருகிறான். எனினும் பலர், இல்லத்தின் முன், மூன்று கண்களை உடைய கண் திருஷ்டி விநாயகர் படம் வைப்பதை நாம் பார்த்துள்ளோம். இதில் ஒரு ரகசியம் அடங்கியிருக்கிறது.

எந்த செயலும் தடையின்றி, பிரச்சினைகள் இன்றி நிறைவேற விநாயகரை வழிபடும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அதுமட்டுமின்றி யானையின் பார்வை மிகவும் கூர்மையானது.

ஆதலால்தான், விநாயகர் வேழ முகத்துடன் காட்சி அளிக்கிறார். அவரின் பார்வை மூலம் நமக்கு வரும் இன்னல்களையும் நீக்கி, அருள் புரிகிறார்.

''விநாயகனே வல்வினையை வேர் அறுக்க வல்லான்; விநாயகனே வேட்கை தணிவிப்பான்;-

விநாயகனே . விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால் கண்ணில் பணிமின் கனிந்து'' கண் திருஷ்டி விநாயகர் சோதிட கேசரி வாசகர்களின் இடையூறுகளையும், இன்னல்களையும் களைந்து அருள் பாலிக்கட்டும்.

கண் திருஷ்டி விநாயகரை வீட்டின் நுழைவாயிலில், மற்றவர் பார்வைபடும் இடத்தில் வைத்தால் கண் திருஷ்டி நீங்கும்.

தீய சக்திகள் விலகி ஓடும். சோதிட கேசரியின் இலவச இணைப்பாக வழங்கப்பட்டுள்ள கண் திருஷ்டி விநாயகரை பெற்று பயனடையுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன்
## சில அறிவியல் தகவல்கள்

ஒன்பது கோள்களும் இயங்கத் தேவை யான விசையும், ஒளியும், வெப்பமும் தந்து, நடு நாயகமாக வீற்றிருக்கும் குடும்பத்தலைவன் சூரியன். சூரியன் இல்லையேல் இவ்வுலகில் உயிர்கள் இல்லை.

சூரியனை பற்றிய அறிவியல் பூர்வமான சில தகவல்களை நாம் அறிந்து கொள்வோம். சுட்டெரிக்கும் சூரியன் ஒரு இளஞ்சிவப்பு மஞ்சள் வண்ண நட்சத்திரம்.

சூரியன் குறித்துக் கீழே கொடுக்கப்பட்டிருக் கும் தகவல்கள் வானியல் ரீதியாக முக்கியத்து வம் வாய்ந்தவை. பிரபஞ்சத்திலுள்ள பல கோடி நட்சத்திரங்களில் ஒன்று தான் சூரியன். சூரியன் பூமியை விட ஏறத்தாழ நூறு மடங்கு பெரியது சூரியன் பூமியிலிருந்து 150 மில்லியன் கி.மீ. தூரத்திலுள்ளது.

சூரியன் உருவாகி 450 கோடி ஆண்டுகளாக வானில் எரிந்து கொண்டிருக்கிறது. சூரியனின் மேற்பரப்பு வெப்பம் 5700 டிகிரி செல்சியஸ், மையப்பகுதியின் வெப்பநிலை 106 இலட்சம் டிகிரி சென்டிகிரேடு (பூமியில் 40டிகிரி சென்சியஸ் அளவு வெப்பம் உயர்ந்தால், சுருண்டு விடுகிறோம்.)

சூரியன் பல வாயுக்களால், குறிப்பாக ஹைட்ரஜன் வாயுவால் நிறைந்தது. சூரியனுக்கு மிக அருகிலுள்ள அடுத்த நட்சத்திரமான ஆல்பா சென்டாரி, சூரியனுக்கும் நமக்கும் இடையே உள்ள தூரத்தைக் காட்டிலும், சுமார் 2,50,000 மடங்கு தொலைவிலுள்ளது.

சூரியன் வெளிப்படுத்தும் எரிசக்தியின் அளவு 30 இலட்சத்து 60 ஆயிரம் மெகாவாட் பதினைந்து நிமிடங்களில் சூரியன் வெளிப் படுத்தும் எரிசக்தி, மனித இனம் முழுவதிற்கும், ஓர் ஆண்டு பயன்படுத்த போதுமானது. சூரியன் தான் பூமியைச் சுற்றுகிறது என்று கி.பி. 1512 வரை மனிதர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

நிகோலஸ் கோபர்நிகஸ் என்ற வானியல் விஞ்ஞானி கி.பி. 1512 ல் பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்ற உண்மையை உலகம் அறியச் செய்தார். இந்த உண்மையைக் கூறிய ஜூலிஸ் புருனோ என்ற விஞ்ஞானியை, மதகுருமார் களால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார்.

கலிலியோ இந்த உண்மையை கண்டறிந்தும், உயிருக்குப் பயந்து மறைத்து விட்டார். பின்னர் உண்மை என்று ஒத்துக்கொண்டார். சூரியன் பூமியைச் சுற்றி வரவில்லை. மாறாக, பூமியும் இதர கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்ற உண்மை மனிதனுக்கும் புரிந்தது.



### எடுத்த காரியம் வெற்றி பெற

ஸ்ரீ ராமதூத மஹாதீர ருத்ர வீர்ய
சமுத்பவ
அஞ்ஜநாகர்ப்ப சம்பூத வாயு புத்ரா
நமோஸ்துதே



### ஸ்ரீ ராகவேந்திரர் துதி

பூஜயாய ராகவேந்திராய ஸத்யதர்ம ரதாயச
பஜதாம் கல்ப வ்ருக்ஷாய நமதாம்
காமதேனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாள மாந்திரீக சக்தி

நன்மையே நினைப்போம்! நல்லதையே செய்வோம்! இங்கு தீய கொடிவினை வேலைகளுக்கு இடமில்லை






சாஸ்திரம் இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர் தேசபந்து பேராசிரியர் பி.கே. சாமி அவர்கள். * பிரிந்த காதல் ஒன்று சேர, * பிரிந்து சென்றவரை அழைப்பித்து எடுக்க * இருவருக்கும் திருமணம் நடைபெறாதென முடிவெடுத்த திருமணம் நடைபெறவும் * ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என முடிவெடுத்து வாழ * திடீர் வியாபார விருத்தி அடைய * தீராத நோய்களை தீர்த்துக் கொள்ள * வீடு வளவு பாதுகாப்பு செய்ய * சூனியங்களை அகற்ற * செவ்வாய் தோசம் நிவர்த்தி பெற * அதி விசேடமாக வெளிநாட்டவர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் பிரச்சினை தீர. 3 நாளில் அவ்வவ் ஊரில் எமது அங்குள்ள நிர்வாகம் மூலமாக தங்களுக்கு பார்சல் உடன் அனுப்பப்படும். அத்துடன் பிறந்த திகதி மாதம் இவைகளை அறிவித்து ரூபா 2700 ஐ அனுப்பி வைத்தால் 30 நிமிடத்தில் உங்கள் ஆயுள் ஜாதகத்தை கண்ணாடிபோல தெட்டத் தெளிவாக கணித்து அனுப்பிவைப்போம்.

**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 km க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**கொழும்பு அன்பரின் மடல். "39 வயதில் அதிசயத் திருமணம்"**

" பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத் தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச்செய்து மகளின் திருமணத்தை இனிதே நடத்திச் செய்தமைக்கு கோடானு கோடி நன்றிகள்."

**ஹட்டன் அன்பரின் மடல். " தீராத தலைவலி தீர்ந்து விட்டது"**

" மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**யாழ்ப்பாண அன்பரின் மடல். " அதிசய அக்னி குண்டல பூஜை"**

" மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னி குண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**லண்டன் அன்பரின் மடல். " எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

" பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் சேர வைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்."

**கனடா அன்பரின் மடல். " ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

" மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சிரயமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல். " புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

" மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா."

**குருநாகல் வாசகர் ஆர்.பிரியாவின் மடல். பேரன்பும் பெருமைக்குமுரிய ஐயா அவர்களுக்கு வணக்கம்!**

" பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். வீரகேசரியில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது, நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மவின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்"

**குருணாகல் அன்பரின் மடல். " எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

" தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**இத்தாலி அன்பரின் மடல். " சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

" வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**கொழும்பு அன்பரின் மடல். " எண்ணியவன் என்னிடமே வந்து சேர்ந்தான்"**

" மதிப்பிற்குரிய சாமி கங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததற்கு நன்றி. உங்கள் சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல். " அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

" அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடி யுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**ஜெர்மன் அன்பரின் மடல். "மகனின் திக்குவாய் குணமாகியது"**

" அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகனை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்"

**பிரான்ஸ் அன்பரின் மடல். " குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

" அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**பதுளை அன்பரின் மடல். " போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

" அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப் பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்."

**கொழும்பு இளமுராக வாசகரின் அன்பு மடல். பேராசிரியர் டாக்டர் ஐயா அவர்களுக்கு!**

" எனக்கு வயது 52. இதுவரையில் நான் சந்தித்த எந்த ஜோதிடரும் கூறாத முறையில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற ரீதியில் மழுப்பாமல் திகதி, நேரம் குறித்து சரியான முறையில் தெள்ளத் தெளிவாகப் பலன் கூறுகின்றீர்கள். உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்."

**"அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப் போவது இவையனைத்தும், ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான, மகிழ்ச்சியான, குபேர வாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.**



**அனுமதி இலவசம் அனைவரும் வருக**

மாத கடைசி தினத்தன்று நடைபெறும் அக்னி குண்டல மகாயாக பூஜையில் வந்து கலந்து கொண்டு அவர்களின் குறை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

நேரம்:- காலை 10.00 தொடக்கம் பகல் 12.00வரை.

வெளிநாட்டவர்களுக்கு விஷேட சலுகைகளும், 24 மணிநேர தொலைபேசி வசதியும் உண்டு

**Deshabandu. Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP ஐயா**

**Sri durgadevi manthirika utchada peedam.**

**No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13**

**011 2470615, 011 2342463, 011 2342464, Fax. 0094-11-2344831**

நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்,

இல 33, கண்டி வீதி, நுவரெலியா. 052 2222508,

**Web:- www.drpksamy.com Email:- drpksamy@sltnet.lk**

**SMS Service: 0773 931152, 0777 588405**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூ
சரவணாஸ்
நகைமாளிகை



நகை மலர்களின் நந்தவனம்

New
Saravanas
Jewellers (Pvt) ltd

46, Sea Street, Colombo-11. Tel: 2434546


இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14 கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org